644.

# நீதிபதி எஸ். மகராஜன் அவர்களும் அவர்களுடைய கலை இலக்கிய ரசனையும்

**நீதிபதி எஸ். மகராஜன்**

நினைவுச் சொற்பொழிவு.

சொற்பொழிவாளர்:

**பேராசிரியர் கு. அருணாசலக்கவுண்டர்**

நாள்:

14—2—86

காலை 10 மணி

**தமிழ்ப் பல்கலைக் கழகம்**

**தஞ்சாவூர்.**

# நீதிபதி எஸ். மகராஜன்

## நினைவுச் சொற்பொழிவு

[நீதிபதி எஸ். மகராஜன் அறக்கட்டளை]

நிறுவியோர் :

**டி. கே. சி. வட்டத்தொட்டி**

**சென்னை.**

சொற்பொழிவாளர் :

**பேராசிரியர் கு. அருணாசலக்கவுண்டர்**

நாள் :

14–2–86

காலை 10 மணி

**தமிழ்ப் பல்கலைக் கழகம்**

**தஞ்சாவூர்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வாழ்க்கைக் குறிப்பு | 1 |
| 2. | ஜஸ்டிஸ் மகராஜனவர்கள் ஓர் அறிமுகம் | 3 |
| 3. | சத்சங்கம் | 5 |
| 4. | சத்சங்கத்தில் : சொல்லின் செல்வருடன் | 7 |
| 5. | இரசிகமணியுடன் | 9 |
| 6. | இராஜாஜியுடன் | 15 |
| 7. | தர்மாசனம் - அறங்கூறவையில் | 21 |
| 8. | இலக்கிய உலகில் | 30 |
| 9. | வள்ளுவருடன் | 35 |
| 10. | திருமூலருடன் | 36 |
| 11. | கம்பனுடன் | 38 |
| 12. | கம்பன் மொழிபெயர்ப்பு | 48 |
| 13. | ஷேக்ஸ்பியர் மொழிபெயர்ப்பு | 52 |
| 14. | சட்ட மொழிபெயர்ப்பு | 57 |
| 15. | பிறமொழிகளின் பெயர்ப்பு | 61 |
| 16. | மொழிபெயர்ப்பைப் பற்றி | 65 |
| 17. | கலை இலக்கிய ரசனை | 66 |
| 18. | பாவ வெளியீடு | 67 |
| 19. | கவிதை பாவுணர்ச்சி | 71 |
| 20. | சிவயோகியருடன் | 78 |
| 21. | விமர்சனம் | 80 |
| 22. | இரசனை முறைத் திறனாய்வு | 84 |
| 23. | நீதிபதி மகராஜனின் கட்டுரைத் தொகுதிகள் | 89 |

# ஜஸ்டிஸ் எஸ். மகராஜன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

திருநெல்வேலி - பாளையங்கோட்டையைப் பூர்வீகமாகக் கொண்ட திரு எஸ். மகராஜன் திருச்சியில் 1 - 4 - 1913ல் பிறந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. எஸ்சி. பட்டம் பெற்றார். தமிழிலும் ஆங்கிலத்திலும் முதல் வகுப்பில் தேறினார்.

கல்லூரியில் படிக்கும்போதே தமது இலக்கியத் திறமையை வெளிப்படுத்தியவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமைக்காகப் பல பரிசுகளைப் பெற்றார்.

பல்கலைக் கழகத்திலேயே ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்திருக்கிறார்.

சட்டப் படிப்பை முடித்த பிறகு, 1935ல் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டு பாளையங்கோட்டையில் தொழிலைத் தொடங்கினார்.

1943ல் மாவட்ட முன்சீப்பாக (District Munsif) அமர்த்தப் பட்ட இவர், சப் ஜட்ஜாகவும் (Sup Judge), மாவட்ட நீதிபதி யாகவும் (District Judge), பதவி உயர்வு பெற்றார்.

1965ல் புதுச்சேரியின் தலைமை நீதிபதியாக (Chief Du Service Judiciaire) பதவி ஏற்றார்.

1969 முதல் 1975 வரை சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி யாகப் பணி புரிந்தார்.

பெரிய பதவிகள் வகித்துவந்த காலத்திலேயே இலக்கியத்தில் தமக்குள்ள ஈடுபாட்டை வளர்த்து வந்த திரு எஸ். மகராஜன் ஓய்வு பெற்ற நாளிலிருந்து இலக்கியத்துக்காகவே தம் நேரம் முழுவதையும் செலவிட்டு வந்தார்

1976 முதல் 1981 வரை தமிழ் மாநில சட்டத்துறை ஆட்சி மொழி ஆணையத்தின் (State offlcial Lgnguage) தலைவராக திரு மகராஜன் அவர்கள் பணியாற்றினார்.

1978 முதல் 1981 வரை தமிழ்நாடு சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்ட வல்லுநர் குழுவின் தலைவராக (Chairman, Expert Committee for transiation of Classics, Tamil Nadu) பொறுப்பேற்றார். இக்குழு பிறமொழியில் உள்ள பேரிலக்கியங்

களைத் தமிழிலும், தமிழில் உள்ளதைப் பிற மொழிகளிலும் பெயர்த்து வெளியிட வேண்டி அமைக்கப்பட்டதாகும். இக்குழுவின் வாயிலாகச் சில நூல்களை வெளியிட்டார்.

1978-ஆம் ஆண்டில் சென்னை தமிழ் இசைச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1978-ஆம் ஆண்டில் தருமபுர ஆதீன மடம் இவரது இலக்கிய சேவையைப்பாராட்டி இலக்கிய ரசிகமணி என்ற பட்டம் வழங்கியது.

1979-ஆம் ஆண்டில் நமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் அர்ச்சகர் நியமன முறை பற்றி ஆராய்வதற்காகத் தமிழ்நாடு அரசு நியமித்த வல்லுநர் குழுவின் தலைவராகப் பணியாற்றி அறிக்கை சமர்ப்பித்தார்.

1979-ஆம் ஆண்டில் அண்ணாமலை பல்கலைக் கழகம் மகராஜன் அவர்களுக்கு டாக்டர் 'பட்டம்' வழங்கிச் சிறப்பித்தது.

சென்னையில் 'ரசிகமணி டி. கே. சி. வட்டத் தொட்டி' என்ற இலக்கிய அமைப்பை ஏற்படுத்தி அதன் தலைவராகச் செயல் பட்டு வந்த எஸ். மகராஜன் அவர்கள் ரசிகமணி டி. க. சியின் தலை மாணாக்கர்களில் குறிப்பிடத் தக்கவராயிருந்தார்.

புதுவையில் தலைமை நீதிபதியாக இருந்தபோது இவரால் 'பிரஞ்சு சிவில் புரொஸீஜர் கோட்' (French Civil Procedure Code) ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

சாகித்திய அகாதெமி, பாரதீய ஞானபீடம் ஆகிய 'இலக்கிய' அமைப்புகளுக்கு ஆலோசகராகப் பணி புரிந்தார்,

கோலாலம்பூர், சென்னை மற்றும் பாரீஸில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

ஸ்விட்ஸர்லாந்து, மேற்கு ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

1981-ம் ஆண்டில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் செயல்முறைக் கமிட்டியின் தலைவராகப் (Chairman, Steering Committee) பணியாற்றினார்.

# ஜஸ்டிஸ் மகராஜனவர்கள் ஓர் அறிமுகம்

ஒரு தலைசிறந்த எழுத்தாளர், மனித உள்ளத்தின் ஆழ் கடலிலே மூழ்கி முத்துக்களை எடுக்கவல்ல ஓர் மனோதத்துவ நிபுணர். அழகாகவும் நளினமாகவும் திறமையாகவும் வாதம் செய்யும் ஒரு வழக்கறிஞர். எதையும் நிதானமாக நிலைகுலையாமல் பகுத்து அறிந்து தெளிந்து தீர்ப்பளிக்கும் ஒரு நீதிபதி. இலக்கியத்திலே இழையோடி மிளிரும் கலையைத் தன்னை மறந்து அனுபவிக்கும் ஒரு இரசிகர் - இவர்களிலே உயர்ந்தவர் யார்? இவ்வினாவுக்கு விடை அளிப்பது எளிது அல்ல. ஆனால் இவை அனைத்துப் பண்புகளையும் தன்னுள் அடக்கிய ஒருவர் தான் மகராஜன் - இப்படி அவரைப் போற்றுவார், பிரபல வழக்கறிஞர் என். டி. வானமாமலை அவர்கள். மெய்யே இது. வெறும் புகழ்ச்சி அல்ல.

உண்மை அழகு ஆனந்தத்தின் பிரதிபலிப்பாக உதாரம் நிறைந்த உத்சாக புருஷராக அவர் விளங்கினார். கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பு அவர் கூடப் பிறந்தது. கேலியும் கிண்டலும் குத்தலுமான அவர் பேச்சும் எழுத்தும் இங்கிதம் நிறைந்தது, இன்பம் ஊட்டுவது. உல்லாச நிராகுலயோக இதச் சல்லாப விநோதனும் நீ அலவோ அவரோடு பழகுவது ஆனந்தம், உரையாடுவது ஆனந்தம்.

மேல்நாட்டு ஆங்கிலம் பிரஞ்சு ஆகியவற்றுடன் தாய் மொழி தமிழையும் கற்று, அவற்றின் சிறந்த அம்சங்களைச் சீரணித்துத் தன்வயம் ஆக்கிக்கொண்ட பேரறிஞர். தமிழன் தனிச்சிறப்பை மற்ற மொழிகளைக் கற்றுத் தமிழுக்கு வரும்போதுதான் நன்றாக உணர முடிகிறது. தமிழுக்கு அப்பால் இருந்து தமிழைப் பார்த்தால் தான் தமிழின் நீளஅகலங்கள் தென்படுகின்றன என்பார். இலக்கியம், கலை, பண்பாடு, தத்துவம் ஆகிய பல துறைகளிலும் தமது சிந்தனையைச் செலுத்திக் கட்டுரைகளைப் படைத்தார். தேனும் பாலும் கன்னலும் அமுதுமான கவிகளைத் தாம் நுகர்ந்தவாறு தமது அனுபவத்தை எடுத்து இயம்பும் ஆற்றல் வாய்ந்தவர். கவிதையின் தெய்வீகக்குரலை இடையறாது கேட்டு, தம் ஆன்ம ஒளியைப் பெருக்கினார். உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாமும் அவருக்குக் கவிதையாகவே காட்சி அளித்தன. கவிதைக்காகவே அவர் வாழ்ந்தார் என்ற உண்மையை அவர் எழுதிய கட்டுரைகளிலே காணலாம். அவற்றிலே அவருடைய பழுத்த அனுபவம், அகன்ற புலமை, ஆழ்ந்த சிந்தனை அனைத்

தையும் ஊடுருவிப்பார்க்கும் ஆற்றல், நடுவுநிலையில் இருந்து எதையும் துருவிப்பார்த்துத் தமது கருத்தை அஞ்சாது சொல்லும் துணிச்சல்-இத்துணை வனப்போடு அவர் ஒர் இலக்கியத் திறனாய்வாளர் என்பது புலனாகும். அவரது அறிவோட்டம் எதனையும் அலசிக்கொண்டு செல்வது.

அவர் ஒரு கவிஞரோ கலைஞரோ அல்லர். கவிதையை நாடினார். அது அவரது கற்பனைக்கு வலிமை ஊட்டியது. மேதையை எட்டிப் பிடிக்கும்படிச் செய்தது. அதுவே அவரது ஊன்றுகோல்.

'முன்னவராம் நம் குரவர் மொழிகள் உள்ளப்பெற்றோம் முழுதும் நமக்கு அவை பொழுதுபோக்காகப் பெற்றோம்' என்று செம்மாந்து, தாம் கண்டதை எங்கும் பரவச்செய்வதிலே ஆர்வம் கொண்டிருந்தார். கலையைக் குறித்தும் கலைமரபுகளைக் குறித்தும் பல்வேறு அபிப்பிராயங்கள் உலாவிக் கொண்டிருக்கும் இன்றைய தமிழகத்திலே அறியாமை இருளுக்கும் விபரீத அறிவு என்ற கார் இருளுக்கும் இடையே ஒளிகாட்டி நெறிகாட்டி வந்தார், மகராஜன்.

மலேஷியா, ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, பிரான்ஸ், இங்கிலந்து ஆகிய நாடுகளிலே பயணம் செய்திருக்கிறார். அவருக்கு மிகவும் பிடித்த நாடு பிரான்ஸ் தான். அவர் சொல்லுவார் Joy of living வாழணும் என்று செறுக்கு அங்குத்தான் இருக்கிறது வாழ்வதிலே அவ்வளவு ஆர்வத்தோடு இருக்கிறார்கள் பிரஞ்சியர். நாமோ சாவைப் பற்றிப் பேசிக் கிடைத்த வரப்பிரசாதத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம்.

நாடுகளிலே பிரான்ஸ் போல, மேதைகளிலே டி. கே. சியே அவரை மிகவும் கவர்ந்தவர். அவர் சொல்லுவார்: ''குற்றாலத்து'' அருவிக்குள்ளே நுழைந்தால் நாம் ஒன்றும் செய்ய வேண்டாம். அது நம்மைக் குளிப்பாட்டிவிடும். டி. கே. சி. யுடன் இருந்தால் போதும், ஆனந்தமும், அன்பும் கலந்த அருவியிலே மூழ்கிக் கொண்டே இருக்கலாம். கந்தர்வ லோகத்திலே இருக்க வேண்டியவர்கள், வழி தப்பி மண்ணுலகத்துக்கு வந்துவிட்டார்கள்; வாழ்க்கையிலே அவர்செய்த தப்பு இது ஒன்றே.''

ஒத்த உணர்ச்சியோடு அனுபவிக்கக் கூடிய இரசிகனுக்காகவே தவங்கிடக்கிறான் ஓர் கவிஞன். அப்படி ஓர் இரசிகன்

கிடைப்பதற்குப் பல நூற்றாண்டுகள் ஆகலாம். கம்பரைப்போன்ற ஒரு ரசிகர் கிடைப்பதற்கு வள்ளுவர் ஐந்நூற்றாண்டுகள் காத்திருந்தார். டி. கே. சி போன்ற ஓர் இரசிகன் கிடைப்பதற்குக் கம்பர் ஆயிரம் ஆண்டு காத்திருக்கவேண்டியிருந்தது. ஆனால் டி. கே. சிக்கு ஏற்பட்ட அதிர்ஷ்டம் என்னவென்றால் தம் வாழ் நாளிலேயே தம் ஒத்த 'ஸஹிருதயனைப்' பெற்று, அவரோடு நெருங்கி உறவாடும் வாய்ப்புக் கிடைத்திருந்ததே. சஹ்ருதயன் அல்லது இரசிகன் என்றது, காவிய இன்பத்தை நுகர்பவனை. ஒருவனுடைய பண்பட்ட உள்ளமும் அறிவும் அனுபவமும், கவிஞன் வருணிக்கும் பொருளோடு அதுவாகவே ஆகின்றநிலை அமையும் போதுதான், அவன் சஹ்ருதயன் அதாவது சமமான இதயம் வாய்ந்தவன் ஆகிறான். இவனைக் கவிஞனின் மறுஉரு. Alter-ego of the poet என்பர்.

மானிட வாழ்க்கை, உலகப்பற்று, இறைவன் ஆகிய மூலப் பிரச்சனைகளை ஆய்ந்து தெளிந்து, வாழ்வெலாம் யோகமே என்று யோகப் பயிற்சியை மேற்கொண்டு ஆத்மாநுபவங்களை நாளடைவில் பெற்றார். மானிடனை எதிர்நோக்கியுள்ள பரிணாம வளர்ச்சிக்கு ஆன்மரவும் இறைவனும் முழுமையாக ஒன்றவும் இம் மண்ணுலகிலேயே வான் அரசு அமையவும் தமது ஆத்மாநுபவங் களைப் பயன்படுத்தி, நண்பர்களுக்கு வழியும் காட்டி வந்தார்.

சிந்தனைபோய் நான் எனல்போய்
தேக்க இன்ப மாமழையை
வந்து பொழிந்தனை நீ
வாழி பரா பரமே.

## சத்சங்கம்

உலகம் இன்று வழி தெரியாமல் தடம் புரண்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் எவ்வளவோ வித மாறுதல்களைக் காண் கிறோம். இன்னும் எப்படி எல்லாம் மாறப்போகிறதோ என்று வியக்கும் நிலையிலேதான் நாமும் காலங்கழித்து வருகிறோம். அதோடு பல்வேறு அலுவல்களிலே சிக்கிக் கொண்டும் தீராத நோய்களுக்கு இரை யாகியும் வேற்றுமைப் பிணிகளை விலைக்கு வாங்கியும் தத்தளிக்கிறோம். ''நாமார்க்கும் குடிஅல்லோம்-இன்பமே எந்நாளும்'' என்று கூறுவதை விட்டுச் சதாகாலமும் துன்பக்

கனவே காண்கிறோம். இதற்கு மருந்து இல்லையா? நல்லார் இணக்கந்தான் இதற்கு மாற்று. இதைத்தான் சத்சங்கம் என்பது. சத்துக்கள் என்றது நல்லவர்கள், பகுத்தறிவு படைத்தவர்கள், ரசிகர்கள், உதாரசீலர்களே. காளிதாசன், தன் தகுதியைப் பரிட்சித்துப் பாராட்ட, சத்துக்களையே வேண்டினார். அவர்களே தனது நாடகங்கள் காவியங்களைச் சிறந்த இலக்கியமாகக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.

சத்சங்கத்துக்கு ஒருவரைப் பாத்திரம் ஆக்குவது அகங்காரத்தைத் தள்ளி அன்பு பூணும் ஆற்றலே. தன்னைப் பிறர் பாராட்டவேண்டும். என்ற அவா இன்றி, தன்னை மறந்து பிறர் செய்யும் நற்செயல்களை மனமாரப் போற்றிடும் பழக்கம், நாளடைவிலே சத்துக்களை — நல்லவர்களைத் தன்பால் அணுக வைக்கும். பூமியைச் செம்மையாகப் பயன் படுத்தும் உழவுத் தொழிலைப் போன்றது சத்சங்கம். இது மண்ணையும் மலர வைக்கக் கூடியது. அணுகியவர்களை எல்லாம் மனம் செழிக்கச் செய்வது. சிந்திக்கும் திறன் உள்ள மனிதனுக்குச் சத்சங்கம் ஏற்பட்டால் அவன் அடையாதது, சாதிக்காதது எதுவும் இருக்க முடியாது. ஜீவன் முக்தியை அளிக்கும் மூலத்தானம் சத்சங்கம் தான் என்பது மிகையாகாது. இதை ஆத்மஞானம் என்னும் விளையும் பயிருக்கு உரிய பண்பட்ட நிலமாகவும், இதயவளர்ச்சிக்கு மலராகவும், முதிர்ந்த ஞானக் கனியாகவும் கண்டார் மேதகு ஜஸ்டிஸ். எஸ். மகராஜன் அவர்கள். சத்சங்கம் ஒன்று போதும், வேறு ஒன்றுமே வேண்டாம். சாப்பாடு கூட வேண்டாமே என்று சொல்லத் தோன்றியது வள்ளுவருக்கு. டாக்டர். ஜான்சன் என்ற ஆசிரியருக்கும் அப்படித்தான் தோன்றியது. அவர் நல்ல மேதாவியரின் சங்கத்தோடு தினம் தினம் பழகி வந்தார்.

பண்பட்ட உள்ளம் வாய்ந்த பரமரசிகரான மகராஜன் நம் போன்ற சாமானியரோடு பழகியதோடு, காலவெள்ளத்தை எதிர்த்து நிற்கும் சான்றோர்களின் சத்சங்கத்திலும் உறவாடி வந்தார்.

சுவர்க்கம் நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் ஒருவன் சத் சங்கத்திலே இருப்பவரைப் பார்த்து, ''சுவர்க்கத்திற்கு நீங்கள் வரவில்லையா?'' என்று கேட்டால் கிடைத்தபதில், ''சத்சங்கம் நல்கும் இன்பத்தைச் சுவர்க்கம் தருமா?'' என்பது.

தவலரும் தொல்கேள்வித் தன்மை உடையார்
இகல்இலர் எஃகுடையார் தம்முள் குழீஇ
நகலின் இனிதாயின் காண்பாம், அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி.

இதன் கருத்து:

நல்ல சத்சங்கம் இருந்துவிட்டால் போதும் வேறு எங்கும் போகவேண்டும் என்று தோன்றாது. ஏன், தேவேந்திர லோகத்துக்கும் போகவே தோன்றாதாம்.

## சத்சங்கத்தில்:

### *சொல்லின் செல்வருடன்:-*

1921 - அப்போது அவருக்கு வயது 8, 9 இருக்கலாம் முதன் முதலாக ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் சாத்தூரிலே சைவசபை மாநாட்டிலே பேசக் கேட்டிருக்கிறார். ஓய்ாமொழிப் புலவர்கள் சுவையற்ற தமிழிலே மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருந்த காலம். இந்தப் பேச்சுக்களைக் காலையும் மாலையும் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்தார். இரவு 8 மணிக்கெல்லாம் ஓர் இளைஞர் மேடைமீது ஏறவும் அவரது தோற்றப் பொலிவு கவர்ச்சியாய் இருந்தது.

புன்சிரிப்போடு அவர் பேசத் தொடங்கியதும் சோர்ந்து மட்கிப்போயிருந்த கூட்டத்தினர் நிமிர்ந்து உட்கார்ந்து, ''இவர் தான் ரா. பி. சே.'' என்று ஒருவரோடொருவர் தாழ்ந்த குரலிலே சொல்லிக் கொண்டனர். ''அவருடைய பேச்சு கலகலப்பாகவும், உற்சாகமாகவும் இருந்தது. 'என்றுமுள தென்தமிழ்' என்று தமிழின் வாசி அறிந்து ஆசி கூறினார் கம்பர். இத்தகைய மூவாச் சாவா மொழியைப் பெற்றிருந்தும் தம் பெருமை தாமுணராத் தன்மையராய்த் தமிழர் இன்று வாழ்ந்து வருகின்றார்களே என்று அங்கலாய்த்து அடுக்கு மொழியிலே பேசி என்னைத் தட்டி எழுப்பித் தமிழ் அமுதை ஊட்டியவர்கள் சொல்லின் செல்வர்'' என்று மகராஜன் நினைவுகூர்கிறார்.

1931 முதல் 1933 முடிய இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. எஸ். ஸி மாணவராய் இருந்தபோது ரா. பி. சே.

அவர்கள் அங்கே தமிழாசிரியராக இருந்தார். அவருடைய சொற்பொழிவுகளை அடிக்கடி கேட்கும் வாய்ப்பும் அவர் வீட்டில் போயிருந்து மணிக்கணக்கிலே அவரோடு உரையாடும் வாய்ப்பும் மகராஜனுக்குக் கிட்டியது.

கம்பன் பாடல்களிலே மூவாயிரம் பாடல்களுக்கு மேல் ரா. பி. சே. வுக்கு மனப்பாடம். ஆதலின் அவரது உள்மனது, கம்பன் கவிதையிலே ஊறி ஊறி.விம்மிப் பூரித்து நின்றது. அவரது பேச்சிலும் எழுத்திலும் கம்பன் கவிச்சொல் அடிக்கடி தெறித்து விழுந்து கொண்டிருக்கும் என்கிறார் மகராஜன்.

ஆங்கில மோகம் மாணவர்களை ஆட்டிப்படைத்த காலம் அது. தமிழிலே பேசுவது கண்ணியக்குறைவு என்று நினைத்த காலம். அக்காலத்திலே தமிழிலே பேசிவந்த பேச்சாளர்கள் பலரும் உப்புச்சப்பில்லாமல் பேசுவார்கள். அவர்கள் பேச்சிலே புதுமையோ சுவையோ கலகலப்போ இருக்காது ஆனால் அப்போது ஆங்கிலத்திலே பேசி ஜமாய்த்த ஜாம்பவான்கள் பலர் இருந்தனர். சர் சி. ஆர். ரெட்டி, ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரியார், எஸ். சத்தியமூர்த்தி, ஏ. இராமசாமி முதலியார் ஆகியோர் ஆங்கிலத்திலே பெருமுழக்கம் செய்துவந்த காலம். அப்பேர்ப்பட்ட காலத்தில்தான் தமிழாசிரியராக அண்ணாமலை நகருக்கு வந்து சேர்ந்தார்கள் ரா. பி. சே. வந்த சில மாதங்களிலே ஆங்கிலத்தின் கை தாழ்ந்தது. தமிழின் கை ஓங்கிவிட்டது. காரணம் பிள்ளையவர்களுடைய அசாதாரணமான பேச்சாற்றல்தான்.

நெல்லையில் பிறந்து தில்லையில் வாழ்கிறேன் என்று பேச்சைத் தொடங்குவார்கள். ஒரே கைதட்டும் கும்மாளமுமாக இருக்கும்.

மகராஜன் சொல்கிறார்.

'' தமிழ் மாணவர்கள் மாத்திரம் அல்ல, ஆந்திர, கேரள, கன்னட மாணவர்கள் எல்லோரும் கனம் சாஸ்திரியாரின் ஆங்கிலப் பேச்சைக்கூடக் கேட்காமல் பிள்ளையவர்களின் தமிழ்ப் பேச்சைக் கேட்க கூடிவிடுவார்கள். அவர்கள் பேச்சிலே அவ்வளவு குறுகுறுப்பும் மினுமினுப்பும் கண்ணியமும் ஆற்றலும் இனிமையும் ஒன்று கூடிக் கொஞ்சி விளையாடும். மாணவர் சங்கத்தின் தலைவனாய் நான் இருந்தபோது Mr. R. P. S. is the A. G. Gardiner of Tamil literature என்று சொல்லி அவர்களை வரவேற்றிருக்கிறேன். தமிழ் ஆங்கிலத்தைக் காட்டிலும் எந்த

வகையிலும் குறைந்தது அல்ல. தமிழைக் கற்பதால் பெருமை அடையலாம் என்ற உணர்ச்சியை என் காலத்து இளைஞர்களுக்கு ஊட்டியவர் சொல்லின் செல்வர். அதோடு தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் சென்று, கம்பனுடைய பெருமையையெல்லாம் செவியையும் உள்ளத்தையும் ஈர்க்கும் போதைத் தமிழிலே பறை சாற்றியவர் அவர்தான்.''

எனவே சொல்லின் செல்வரைத் தமது இலக்கியத் தலைவராக ஏற்றுக் கொண்டார் மகராஜன். இலக்கியப் பற்றுக் காரணமாக அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த உறவு நெருக்கமாக வளர்ந்தது. பிள்ளை அவர்களுக்குக் குழந்தை கிடையாது. அவர்களுடைய சொத்து முழுவதையும் வரப்போகும் ராயல்டியையும் திருநெல்வேலியிலே உள்ள ஒரு பிரசவ ஆஸ்பத்திரியை விரிவு படுத்துவதற்காக 24 - 6 - 60ல் எழுதிய உயில் மூலம் ஓர் அறக் கட்டளையை நிறுவினார்கள். இந்தப் புனிதமான அறக்கட்டளையை நிறைவேற்றுவதற்காக ( Sole Executor ) அறங்காவலராக மகராஜனை நியமித்தார்கள். இவர்களுடைய புனிதமான நம்பிக்கைக்குப் பாத்திரமானதை நினைக்கும் போதெல்லாம் மனம் உருகிப் போவார் மகராஜன்.

டாக்டர் ரா. பி. சே. அவர்கள் உயர்ந்த குடும்பத்திலே தோன்றியவர்கள். 17வது நூற்றாண்டில் திருநெல்வேலிச் சீமையை ஆண்டுவந்த வடமலைய்யப்பப் பிள்ளையின் வழித்தோன்றல்.

பிள்ளையவருக்கு முன்னால் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்த சாமிநாத முதலியார் மரபிலே வந்தவர் 'டி. கே. சி. சொல்லின் செல்வர்', ராஜவல்லிபுரத்திலே பிறந்து திருநெல்வேலியிலே வழக்கறிஞராய் இருந்து, அதன்பின் தமிழ்ப் பேராசிரியராக அண்ணாமலை நகரிலும், சென்னையிலும் பிரசித்தி பெற்றார். மகராஜன் சேதுப் பிள்ளையின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது போலவே டி. கே. சியின் பேரன்புக்கும் உரிமையானது அதிருஷ்டம்தான்.

## இரசிக மணியுடன் :-

கம்பனை ஒரு வைணவக் கவி என்று அவருடைய பெருமைகளை எல்லாம் ஒரே அமுக்காக அமுக்கிவிட்டார்கள் சைவப்புலவர்கள். சிறப்பாகத் திருநெல்வேலிச் சீமையிலே உள்ள சைவர்கள் கம்பனை ஒதுக்கிப் புறக்கணிப்பதிலே முனைந்து

நின்றார்கள். 1924ல் கம்பனுக்கு யோகம் பிறந்தது. இரசிகமணி டி. கே. சி, ஆராய்ச்சி மன்னர் வையாபுரிப் பிள்ளை, சொல்லின் செல்வர் ரா. பி. சே. மற்றும் சில சைவப் பிரமுகர்கள், சைவக் கோட்டை ஆகிய திருநெல்வேலியிலே கம்பன் கழகம் ஒன்றை நிறுவி, தற்கால முறையில் அவன் காவியத்தைக் கற்று, அதன் ஏற்றங்களை எடுத்து விளம்பத் தொடங்கினார்கள். சமயங் கடந்து நிற்கும் கம்பனுடைய காவியப் பெருமையைத் தமிழ்நாட்டு மக்கள்-ஏன் பிறநாட்டு மக்களும்கூட இன்று உணரத் தொடங்கியிருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் 1924ல் திருநெல்வேலியிலே நிறுவப்பட்ட கம்பன் கழகமும், அதன் தூண்டுதலால் பின்னால் காரைக்குடி முதலிய பல இடங்களில் நடந்துவரும் கம்பன் விழாக்களுமே ஆகும்.

பாளையங்கோட்டை அர் சர்ச் சவேரியர் கல்லூரியில் மகராஜன் டி. கே. சியின் பேச்சை முதன்முதல் கேட்டார். ''அப்போது டி. கே. சி. கம்பனைப் பற்றிப் பேசவில்லை. கம்பனையே பேச வைத்தார்கள். கம்பனுடைய இதயத்தைத் திறந்து காட்டினார்கள். உண்மையும் உண்மையோடு ஒட்டிய உணர்வும் நிறைந்த பேச்சு அது'' — என்று நினைவு கூர்ந்து மகராஜன் மேலும் சொல்கிறார் ''என் உள் மனது எந்த லட்சியப் பேச்சைக் கேட்க வேண்டும் என்று, பல காலமாக ஏங்கிக் கொண்டிருந்ததோ அந்தப் பேச்சை டி. கே. சியிடமிருந்து அன்று கேட்ட திருப்தி அதற்கு ஏற்பட்டது. அது வெறும் சொற்களால் ஆன பேச்சல்ல. சொல் மூலம் ஒரு புதிய மறக்கமுடியாத அனுபவத்தையே டி. கே. சி. எனக்கு ஊட்டிவிட்டார்கள். கேவலம் சொல்லினால் வெளியிட முடியாததை, வெளியிடும் அரிய சித்து டி. கே. சியிடம் இருந்ததை என் இதயம் அன்று கண்டு கொண்டது.''

டி. கே. சியோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பத்தாண்டுகளுக்குப்பிறகே மகராஜனுக்குக் கிடைத்தது. சட்டக் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு 1935ல் அட்வகேட்டாக அவர் பாளையங்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். அப்போதுதான் இந்து அறநிலையக் கமிஷனராகச் சென்னையில் இருந்துவிட்டு டி. கே. சி அவர்களும் வண்ணார்பேட்டை வந்து சேர்ந்தார்கள். 1935 முதல் 1938வரை ஞாயிற்றுக்கிழமை தோறும் டி, கே. சி வீட்டில் அவர்கள் நடத்தி வந்த வட்டத்தொட்டி இலக்கியச் சர்ச்சை கம்பன் ஆராய்ச்சிகளிலே

தவறாது கலந்துகொண்ட 10, 15 நண்பர்களிலே மகராஜனும் ஒருவர். இதனால் பெரும்பயன் அடைந்தது இவர்தான் சொல்லுகிறார்.

வட்டத்தொட்டியிலே டி. கே. சியின் அபூர்வ மேதையை அனுபவிக்கத் தொடங்கினேன். அவர்களுடைய கலை உணர்வு என் உணர்ச்சித் தத்துவத்திலே போய்க் கலந்து என்னை வேறு வஸ்து வாக்கி, எனக்கு வேறு பிறப்பு ஒன்று கிட்டியது போன்ற உணர்வை கொடுத்தது.

1935 முதல் அவர்கள் மறைந்த தேதியான 16-2-1054 வரை அன்பும் ஆனந்தமும் கலந்த டி. கே. சி என்ற பேரருவியிலே குளித்துக் குளித்து என் உள்ளமும் ஆன்மாவும் நிர்மலம் ஆயின.''

தாம் விழித்திருக்கும் நேரம் எல்லாம் சமயத்தைப் பற்றியும் கலையைப் பற்றியும் கவிதையைப் பற்றியும் சிந்தனை செய்தும் பேசியும் வந்த டி. கே. சியைப் போன்று வேறொருவரையும் நாம் கண்டதில்லை. இரசிகமணி மறைந்து 30ஆண்டுகள். ஒரு தலைமுறை கழிந்துவிட்டது. சமகாலத்திருந்த விருப்பு வெறுப்புகளை எல்லாம் மறந்துவிட்டு, உணர்ச்சி வசப்படாமல் டி. கே. சியைத் தொலை நோக்கு மூலம் நோக்கி, நிதானத்தோடு தீர்ப்புச் சொல்வதற்கு நமக்குத் தகுதி ஏற்பட்டுவிட்டது. காலம் கடந்த தூரத்திலிருந்து அவர்களைப் பார்க்கும்போது அவர்கள் மானிடச்சட்டை தாங்கி வந்த ஒரு அவதார புருஷன் என்று தெரிகிறது. இது நீதிபதி மகராஜன் தீர்ப்பு.

17, 18ஆம் நூற்றாண்டுகளில் பிரான்சு நாட்டில் பெரிய சீமாட்டிகள், நாட்டின் சிறந்த அறிஞர்களையும் கலைஞர்களையும் தம் மாளிகைகளுக்கு அழைத்து, வளமான விருந்துகள் அளித்து உபசாரம் செய்து, அவர்களுடைய உரையாடல்களைக் கேட்டு மகிழ்வார்கள். இந்த மாளிகைகளுக்கு ஸலோன்ஸ் (Salons) என்று பெயர். பிரெஞ்சு இலக்கியத்தையும் கலையையும் இந்த ஸலோன்களிலேயே பிரெஞ்சுக்காரர்கள் வளர்த்தார்கள். தமிழ் நாட்டிலே, அப்படி விருந்தோம்பலோடு கலைகளையும் இலக்கியத் தையும் ஓம்பி வளர்க்கும் சத்சங்கத்தை நடத்தியது சடையப்ப வள்ளலுக்குப்பின் டி. கே. சிதான் என்று சொல்ல வேண்டும். கலைஞர்கள், கவிஞர்கள், நடிகர்கள், அரசியல்வாதிகள், மாபெரும் லவர்கள், நீதிபதிகபுள், வழக்குரைஞர்கள், அயல்நாட்டு மேதைகள்,

சாமானிய மக்கள் - இப்படியாகப் பலதிறப்பட்டவர்கள், டி. கே. சி இல்லத்திலேயே பலநாட்கள் விருந்தாளியாக இருந்து, டி. கே. சியின் ஆனந்த வாழ்க்கையிலும், கவிதை நிஷ்டைகளிலும் பங்கு கொண்டு தம்மை மறந்த லயத்துள் இருந்திருக்கிருர்கள். அவ்வாறு வந்த விருந்தினரில் குறிப்பிடத்தகுந்தவர் மேதை ராஜாஜி என்றே சொல்லவேண்டும். ஜஸ்டிஸ் மகராஜன், டி. கே. சியின் வாரிசாக இருந்தார்.

இரத்தின வியாபாரிகள் சிறந்த ரத்தினத்தை எப்படி எல்லாம் அனுபவிப்பார்களோ அப்படியே டி. கே. சியும் கம்பன் பாடலை ஏன் நல்ல தமிழ்ப் பாடல் ஒவ்வொன்றையும் பற்பல கோணங் களிலிருந்தும் பார்த்து அனுபவிப்பார்கள்; நம்மையும் அனுபவிக்கச் செய்வார்கள். 'தமிழ்க்கவி மக்களைக் கஷ்டப்படுத்த வந்த கருவி அல்ல, மக்களை ஆனந்தமயத்திலே ஊறவைக்க வந்த தேவாமிர்தம்' என்று அடிக்கடி சொல்லுவார்கள்.

புனலூர் பேப்பர் மில்லிலே வைக்கோல் கண்டு, கந்தல் துணி, கூளம் முதலியவற்றை ஒரு தொட்டியிலே கொட்டுவார்கள். இந்தக் குப்பை, குழாய் வழியாகப் பல யந்திரங்களுக்குள்ளே புகுந்து சில நிமிஷங்களில் வெளியே வந்து விழும். வெளியில் வருகிறது என்றால் குப்பையாக வராது. வெள்ளை வெளேர் என்று தாளாக வரும். ரீம் ரீமாகக் குபுகுபு என்று மற்றொரு தொட்டியிலே வந்து விழும். அழுக்குப் படிந்த கந்தலும் கூளமும் சில நிமிஷங்களிலே நிர்மலமான பேப்பராக மாறிக் கண்ணைக் கவரும் வெள்ளி அருவியைப் போல வெளியே வந்து பாயும் காட்சியை அனுபவித்துக்கொண்டே இருக்கலாம், கண்கொளாத காட்சி அது. மகராஜன் சொல்கிறார்:-

'ரசிகமணியோடு நான் பழகிக்கொண்டிருந்த 20 ஆண்டு களிலும் மேற்சொன்ன விந்தை எனக்கு அடிக்கடி நினைவுக்கு வரும். நான் அறைகுறையாகப் புரிந்திருந்த ஆங்கில மேற்கோள் களை அவர்களிடம் சமர்ப்பிப்பேன். அவற்றை அவர்கள் உள்ளத் தினுள்வாங்கி, சில விநாடிகளிலே ஜீரணம் செய்து, திரும்பவும் நம் மிடம் விநியோகம் செய்யும்போது ஒரே அதிசயமாக இருக்கும். ஆழ்ந்த அறிவும் புத்திகூர்மையும் பரந்த அனுபவமும் கலை உணர்வும் கற்பனை வளமும் நிறைந்த அந்த மேதையின் உள்ளத்திலே மேற்கோள் புகுந்து பவனி வந்த மாத்திரத்தில்

அதற்கு முன்னில்லாத பக்குவமும், கனிவும், புதுமையும் ஏற்பட்டு விடும். டி. கே. சியின் அனுபவ முத்திரை பெற்று உண்மை ஒளி வீசி ஒய்யார நடைபோட்டு வெளிவரும் அந்த மேற்கோள்:- உதாரணத்துக்கு ஒன்று:

டி. கே. சிக்கு மகராஜன் எழுதிய கடிதம் ஒன்றிலே ஆங்கில மேற்கோள் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார், Sense of humour was given to man to console him for what he is என்பதுதான் அது, மனிதனிடத்திலே எத்தனையோ குறைபாடுகள் உண்டு. குறைபாடுகளையே நினைந்து அவன் வாடி வதங்கிப் போய் விடக்கூடாதே என்று அஞ்சி, ஆறுதலுக்காக அவனுக்கு நகைச் சுவையுணர்வு கொடுக்கப் பட்டிருக்கிறது என்பது அதன் பொருள்.

இந்த மேற்கோளைப் படித்துவிட்டு, கீழ்வரும் கடிதத்தை எழுதினார் டி. கே. சி.

'ஆட்டினிடத்திலும் பால்மடி இருக்கத்தானே செய்கிறது. அதை விட்டுவிட்டு, கழுத்திலே தொங்கும் அததைச் சுவைத்துக் கொண்டிருப்பானேன், கர்ம வினைதான்.

இந்த விசித்திரமான காட்சியைத்தான் நாடெங்கும் காண்கிறோம். நாம் பார்த்துப் பார்த்து அனுபவிக்க வேண்டிய காரியம், எத்தனையோ விதத்தில் அசுவாரசியமாய் இருக்கிறது. உலகத்திலேயே இந்தக் காட்சி நமக்கு கிடைக்கிறது அல்லவா.

'தங்கள் மேற்கோள் வெகுநயமாய் உண்மையை எடுத்துச் சொல்கிறது. Sense of humour was given to man to console him for what he is.

மேலே சொன்ன காட்சியைப் பார்க்கிறதென்றும் ஏற்பட்டு சிரிக்கவும் முடியாது போயிருந்தால் நம்முடைய பாடு எப்படி இருந்திருக்கும்; விதியின் கருணையை நாம் ரொம்பவும் பாராட்ட வேண்டும்.'

மேற்கோள், டி. கே. சியின் உள்ளத்திலேயே புகுந்து புதிய வீச்சோடு வெளிவருகிறது.

இப்படி மகராஜனுக்கும், இவர்கள் தமக்கையார் வேலம்மாளுக்கும் டி. கே. சி எழுதிய 150க்கு மேற்பட்ட

கடிதங்கள் அவர் மகாராஜன் பால் வைத்திருந்த உழுவல் அன்பைப் பறைசாற்றுகின்றன. அவை நல்கும் இலக்கிய இன்பத்தைக் கருதி, சென்னை வட்டத் தொட்டி தனது முதல் நூலாக வெளியிட்டிருக்கிறது. இலக்கிய மணம் வீசும் புகழ்பெற்ற ஆங்கிலம், பிரஞ்சுக் கடிதங்களை படித்து அனுபவித்த நண்பர்கள், ரசிகமணியின் கடிதங்களிலே உள்ள எளிமையும், நுணுக்கமும், உல்லாசமும், நகைச்சுவையும், கலைப்பாங்கும், தத்துவ ஆழமும், ஆனந்தமும் ஆங்கிலப் பிரஞ்சுக் கடிதங்களிலே கண்டதில்லை என்கிறார்கள். அந்தக் கடிதங்களைப் படிக்கும் போது டி. கே. சி உயிருடன் இருந்து நம்மோடு உறவாடிக் கொண்டும், உரையாடிக் கொண்டும் இருப்பது போன்ற பிரமை ஏற்படுகிறது.

டி. கே. சியின் இறுதிக் காலத்திலே மகராஜன் துணை தமக்கு இருக்க வேண்டும் என்றே உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ராஜமன்னாரிடம் மகராஜனை முன்சீப்பாகத் தென்காசிக்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். சொந்த ஊரிலே யாரும் நீதிபதியாக இருக்கக்கூடாது என்பது விதி. இந்த விதியைத் தளர்த்தி மகராஜனைத் தென்காசிக்கே மாற்றினார்கள். 1949முதல் 1952 வரை நாள்தோறும் குற்றாலம் சென்று டி. கே. சியோடு மணிக்கணக்காக உரையாடிக் கொண்டிருக்கும் பேறு பெற்றார்கள். இதை நினைவு கூர்ந்து மகராஜன் சொல்கிறார்.

மூன்றாண்டுகள் மூன்று கணமாக விரைந்தோடின. காலம் என்ற தத்துவம், தங்கச் சக்கரம் பூண்டு வெள்ளித்தண்டவாளத்திலே விரைந்தோடியது.

1950ல் ஒருநாள், திவான்பகதூர் ஆவுடையப்பப்பிள்ளை அவர்களோடும், டி. கே. சியோடும் ஐந்தருவிச் சாலையிலே மகராஜன் உலாவிக்கொண்டிருந்தபோது, திடீரென டி. கே. சி நின்றார்கள். ஒரு சாலை மாணாக்கராகிய திவான்பகதூர் ஆவுடையப்பப் பிள்ளையவர்களைப் பார்த்து ''ஆவுடையப்பிள்ளைவாள்! நான் மகராஜனுக்கு ஓர் உயில் எழுதிவைத்துவிட்டேன்'' என்று சொன்னார்கள். ''அப்படியா! அப்படியா! என்ன அது?'' என்று அதிசயத்தோடு கேட்டார்கள் பிள்ளையவர்கள். ''நமது தமிழ்க் கவிதை, பண்பாடு, சமயம் எல்லாவற்றையும் மகராஜனுக்கு உயில் எழுதிவைத்துவிட்டோன் இனிக்கவலை இல்லை'' என்றார்கள் இரசிகமணி.

இதே அன்பையும் அருமைப்பாட்டையும் 6-6-48ல் மகாராஜனுக்கு எழுதிய கடிதத்திலே டி. கே. சி. வெளியிட்டார்கள்.

''ஒருவனுக்குக் கைநிறைய வைரங்கள் கிடைத்தன. அவைகளை வைக்கும் பெட்டகம் இல்லை, வீடில்லை, கடைசியாக அவைகள் கிடைத்தன. அப்படியானால் அவனுக்கு எவ்வளவு ஆறுதலாய் இருக்கும். அதேபோல நானும் தமிழில் அற்புதமான பாடல்களைக் கண்டேன். கைநிறையவே இருக்கின்றன. வைக்க இடம் இல்லாமல் திண்டாடினேன். தாங்களும் வேலம்மாளும் (மகாராஜனுடைய சகோதரி) ஒப்படைப்பதற்கு இருக்கிறீர்கள் எனக்கு எவ்வளவு ஆறுதல் என்று சொல்வானேன்''

## ராஜாஜியுடன்

ராஜாஜியோடும், டி. கே. சியோடும் நெருங்கிப் பழகிய பேறு பெற்றவர்களுக்கு அறிவு வளத்தின் கொடுமுடியையும், இதய வளத்தின் கொடுமுடியையும் ஒருங்கே தொடும் பேறு கிட்டியது.

ராஜாஜியோடு கொஞ்சநேரம் உரையாடிக்கொண்டிருந்தாலே போதும், அவர்களுடைய அறிவின் வீச்சு எவ்வளவு பிரம்மாண்டமானது என்பது தெரியும். எல்லையில்லாத ஒரு சமுத்திரத்தையோ, ஓங்கி உயர்ந்து வானத்தை முட்டிக்கொண்டு நிற்கும் ஒரு மலையையோ பார்க்கும்போது நம் உள்ளத்திலே தோன்றும் அகண்ட உணர்ச்சி ராஜாஜியின் அறிவுத் தத்துவத்தின் நீள அகல ஆழங்களை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருக்கும்போது உண்டாகும். ஒருநாள் மனிக்கணக்காக ராஜாஜியோடு பேசிவிட்டு அவர்களை விட்டுப் பிரியும் போது மகராஜன், கடவுள் இல்லையென்று சொல்லுகிறார்கள். தங்கடைய அறிவின் கூர்மையையும் வன்மையையும் ஆய்ந்து பார்த்தார்களேயானால் கடவுள் என்ற ஒருவர் இருக்கவே செய்கிறார் என்றும் அவரைத் தவிர வேறு ஒருவராலும் அதிசயிக்கத்தக்க தங்கள் அறிவைப் படைத்திருக்க முடியாது என்பதையும் உணர்வார்கள் என்று சொன்னார். இதை கேட்ட ராஜாஜி ஒரு புன்முறுவல் செய்துவிட்டு மௌனமாக இருந்தார்கள்.

டி. கே.சியோடு பழகும்போது அவர்களுடைய எல்லையற்ற இதயத்தின் கதகதப்பு நமக்கு கிடைத்துக்கொண்டே இருக்கும். நாம் தலையை நீட்டினால் போதும், குற்றாலத்து அருவியைப் போல டி. கே. சியின் பேரன்பு நம்மை அப்படியே குளிப்பாட்டி விடும்.

டி. கே சி என்ற இதயத் தத்துவத்தையும் ராஜாஜி என்ற அறிவுத் தத்துவத்தையும் இணைத்துவைத்தவர் கல்கி கிருஷ்ண மூர்த்தி. இந்த இணைப்பினால் இசை, கலை, அரசியல் ஆகிய துறைகளிலே வரலாற்றுப் புகழ்பெற்ற டல விளைவுகள் விளைந்தன.

ராஜாஜி அணிந்திருக்கும் கருப்புக் கண்ணாடிக்குப்பின், அரம் போலும் கூர்மையான, ஆனல் ஈரம் அற்ற அறிவுதான் இருந்தது என்று அரசியல்வாதிகளிலே சிலர் நினைத்தார்கள். உண்மையில் அவர் உறைந்த பனிக்கட்டியால் மூடப்பட்ட எரிமலை போன்றவர். மகராஜன் சொல்கிறார்:

''நரமாமிச பட்சிணிகளோடு பழகும்போது, தமக்குள்ளே அலைமோதிக்கொண்டு நிற்கும் அன்பை அவர்கள் பார்க்க வொட்டாமல் முகமூடிகளைப்போட்டு மறைக்கவும், தம் கண்ணோட்டத்தை அவர்கள் கண்டுவிடாமல் கருப்புக்கண்ணாடிபோட்டு ஒளிக்கவும் வேண்டியது தமது கடமை என்று நினைத்தார்கள். தம்மிடத்திலே ஒருவிதமான பிரதிபலனும் எதிர்பார்க்காத டி. கே. சி. போன்ற தன்னலமற்ற உத்தமர்களோடு பழகும்போது, ராஜாஜி தம்முடைய முகமூடிகளையும் கருப்புக் கண்ணாடியையும் சுழற்றி எறிந்துவிட்டு இயல்பான அன்பைக் கொட்டிக் கொண்டிருப்பார்கள்.''

டி. கே. சி. மறைந்த சில மாதங்களுக்குப் பின் மீகராஜன் சென்னை சென்று ராஜாஜியை அவர்கள் வீட்டில் சந்தித்தபோது, 'உங்களைக் கண்டதும் டி. கே. சியைக் கண்டதுபோல் இருக்கிறது' என்று மாறி மாறிச்சொல்லி மகராஜனுக்கு லஜ்ஜை ஏற்படும் அளவுக்கு டி. கே. சிக்குச் செய்யும் தனி உபசாரத்தைச் செய்யத் தொடங்கினார்கள். அன்று அவர்களது உரையாடல் டி. கே. சியையே மையமாகக் கொண்டிருந்தது. சானட் டோஜனை ஒரு கோப்பைத் தயிரிலே போட்டு, தேக்கரண்டியிலே மசித்து சாப்பிட்டுக்கொண்டே ராஜாஜி சொன்னார்:

'நாம் ஒரு தப்புச் செய்துவிட்டோம். சானட்டோஜனில் நல்ல புரோட்டின் சத்து இருக்கிறது. இதை நாம் டி. கே. சிக்குக் கொடுத்திருந்தால், இன்னும் ஐந்தாண்டு காலம் அவர் நம்மோடு வாழ்ந்திருப்பார்.'

இவ்வாறு சொல்லும்போது உணர்ச்சி மிகுதியால் ராஜாஜியின் தொண்டை கம்மியது. 'இந்தச்சோக சந்தர்ப்பத்தைச் சமாளிப்பதற்காகச் சானட் டோஜனை நானும் சாப்பிடுகிறேன். உடம்புக்கு நன்றாகத்தான் இருக்கிறது' என்று அசட்டுதனமாகச் சொல்லி வைத்தார். அதைக் கேட்ட ராஜாஜி, 'நீங்களும் நானும் அதைச் சாப்பிட்டு என்னத்துக்கு' என்று ஒரு போடு போட்டார்கள். ''அதிலே பொத்துக்கொண்டுவந்த வேதனையும், துன்பமும் என்னைத் தூக்கிவாரிப்போட்டது'' என்கிறார் மகராஜன்.

1943ல் ராஜாஜி - டி. கே. சி. இடையே ஒரு தர்க்கம் நடந்த போது மகராஜனோடு நானும் அ. சீ. ரா. மற்றும் சில நண்பர்களும் உடனிருந்து அனுபவித்துக் கொண்டிருந்தோம். சத்திய

வேட்கைக்கு அடிப்படையாய் இருப்பது உணர்ச்சியா? அறிவா என்பது சர்ச்சைக்குரியதாயிருந்தது. 'நல்ல கவிதை எழுதுவதற்கு எவ்வளவு உணர்ச்சி அவசியமே அவ்வளவு அவசியம் விஞ்ஞானக் கண்டுப்பிடிப்புகளுக்கும்' என்றார் டி. கே. சி. அதற்கு ராஜாஜி விஞ்ஞானக்கண்டுபிடிப்புக்கு அவசியமாயிருப்பது நுண்ணறிவுதான்; உணர்ச்சிஅல்ல. கணக்குக்குக் கூடஉணர்ச்சி அவசியம் என்று சொல்லுவார் டி . கே . சி ' என்று ஒரு போடு போட்டார். இப்படியாகத் தொடர்ந்த வாதப் பிரதிவாதங்கள் எங்களுக்கும் பெருவிருந்தாய் இருந்தன .

சில ஆண்டுகளுக்குப்பின், இந்த விவாதத்தை நினைவு கூர்ந்து, ஐன்ஸ்டைன் சொன்ன கூற்று ஒன்றை மேற்கோள் காட்டி டி. கே. சியின் கட்சியை ஆதரிப்பதாக அவருக்கு மகராஜன் எழுதியிருந்தார். '' The attitude of the scientist towards truth is akin to that of a devotee or a lover.

ஒரு விஞ்ஞானி, உண்மையை ஆர்வத்தோடு பார்க்கும் பார்வை, ஒரு பக்தன் இறைவனைப் பார்க்கும் பார்வையையும் ஒருகாதலன் தன் காதலியைப் பார்க்கும் பார்வையையும் ஒத்திருக்கிறது.டி. கே. சிக்கு எழுதியதோடு நிற்காமல், ஈ. ஆர் கோவிந்தன் நடத்திவந்த 'Free India' என்ற வாரப்பத்திரிகையிலும் புனைப் பெயரில் T. K. C. The man of letters என்ற கட்டுரையில் அந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருந்தார்.

பத்திரிகை ஆசிரியர் டி. கே. சிக்கும், ராஜாஜிக்கும் அந்த இதழை அனுப்பிவிட்டார். அப்போது ராஜாஜி வங்காள கவர்னராக இருந்தார். கட்டுரையைப் பார்த்து விட்டு ராஜாஜி. 'ஏதோ தர்க்கத்துக்காக நான் எப்போதோ சொன்ன வாசகத்தை இப்படி ஒரு பத்திரிகையிலே விளம்பரபடுத்தியிருக்கவேண்டாம்' என்று டி. கே. சிக்கு எழுதினார்கள். இதற்கு டி.கே சி. ராஜாஜிக்கு எழுதிய கடிதத்திலே (5. 4. 43), ''அதை எழுதியவர் மகாராஜபிள்ளை. இலக்கியக் கவண் வீசும்போது, கொஞ்சம் அதிகமாகவே போய் விடும் லட்சியம். ஏதே உணர்ச்சி பற்றியும் அறிவுபற்றியும் பேசிக்கொண்டிருப்பது சகஜந்தானே நமக்கு. அந்தத் தர்க்க

விளையாட்டை, தன்னுடைய இலக்கிய வீச்சுக்குக் கொஞ்சம் உபயோகித்துக் கொண்டார். அவ்வளவுதான். இதற்குமேல் ஒரு பக்கம் மகராஜன் மேலுள்ள அன்பைக் கொட்டிய எழுத்துக்கள்.

டி. கே. சி. - ராஜாஜி இடையே நடந்த மற்றொரு உரையாடல்.

'கன்னல் எனும் கருங்குருவி
ககனமழைக் காற்றாது
மின்னல்எனும் புழுவெடுத்து
விளக்கேற்றும் கார்காலம்'

என்ற தனிப்பாடலை டி. கே. சி. விளக்கிக் கொண்டிருந்தார்கள். தூக்கணாங் குருவி இருட்காலத்திலே மின்மினிப் பூச்சியைத் தன் கூட்டிலே சொருகி விளக்கேற்றி வைக்குமாம். இதை நினைவிலே வைத்திருந்த கவிஞர், இருட்டையே (கன்னலையே) ஒரு கருங் குருவியாக உருவகம் செய்கிறார். மாரிக்காலத்து மழைக்கு ஆற்றாமல் கன்னல் (இருள்) என்ற அந்தக் கருங்குருவி என்ன செய்கிறது? மின்னல் என்ற புழுவை (மின்மினிப் பூச்சியை) எடுத்துத் தன் கூட்டிலே சொருகி விளக்கேற்றுகிறது. இதை விளக்கி விட்டு, ராஜாஜியைப் பார்த்து, தமிழ் லெக்சிகனில் கன்னல் என்ற சொல்லுக்கு அர்த்தம் போட்டிருப்பதைப் பார்த்தீர்களா என்று, தமிழ் அகராதியை ராஜாஜி கையிலே கொடுத்தார்கள். அதில் கன்னல் என்றால் ஒருவகைக் குருவி என்று இருந்தது. இந்தத் தனிப்பாடலை உதாரணம் காட்டியிருந்தது. இதைப் பார்த்துவிட்டு ராஜாஜி இந்தப் பிழையில் உள்ள நயத்தைச் சிரிடா சிரி என்று சிரித்து அனுபவித்தார்கள்.

அப்போது மகராஜன், 'மின்னல் என்ற சொல்லுக்கு என்ன பொருள் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும்தயவு செய்து பார்க்க வேண்டும்'என்றார்.ராஜாஜி'எதற்காக என்றார்', இல்லை மின்னல் என்பது ஒருவகைப் புழு என்று பொருள்கூறி உதாரணத்துக்கு மின்னல் எனும் புழுவெடுத்து என்ற வரியை மேற்கோளாகக் கொடுத்திருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும்' என்று சொன்னார். இதை கேட்ட டி. கே. சி. பலே பலே நல்ல போடு போட்டீர்கள் என்று சொல்லிக் குலுங்கக்குலுங்கச் சிரித்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தை விவரித்து மகராஜன் சொல்லுகிறார்: 'இப்படியாக ராஜாஜி - டி. கே. சி. சங்கத்திலே கழித்த நாட்கள் பலப்பல. அவர்கள் முன்னிலையில் காலம் என்ற தத்துவம் தங்கச் சக்கரம் பூண்டு வெள்ளித் தண்டவாளத்திலே ஓடிக்கொண்டிருக்கும் என்று நான் அவர்களிடமே சொல்வதுண்டு. இதய நாடிகள் சுருதி சேர்ந்து பேசும்போது, காலத் தத்துவத்தையே கடந்துவிடுகிறோம். அதாவது காலனை உதைத்துத் தள்ளிவிடு கிறோம்.

சென்னை காரணேசுவரன் கோயில் தெருவிலே நண்பர் மீ. ப. சோமசுந்தரம் (சோமு) இருந்தபோது, ராஜாஜி மாலை நேரங்களில் சோமு வீட்டிற்கு வந்து, மணிக்கணக்கிலே பல அரிய விஷயம் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார். 4-10-65ல் மகராஜன் சென்னைக்கு வந்து சோமு வீட்டில் தங்கியிருந்தார். அன்று மாலை 6 மணிக்கு வழக்கம் போல ராஜாஜி அங்கே வந்தார்கள். மகராஜனைக் கண்டதும், ராஜாஜி 'My week is incomplete without meeting somu even for a day ஒரு நாளாவது சோமுவைச் சந்திக்கவில்லை என்றால் அந்த வாரம் எனக்குப் பூர்த்தி ஆவ தில்லை' என்று சொல்லி, தமக்கும் சோமுவுக்கும் உள்ள அரிய இலக்கிய நட்பை மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்கள்.

பிறகு சமயத்தைப் பற்றி மூவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். ராஜாஜி அப்போது கீழ்வரும் கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள்.

''எல்லா சமயங்களும் சரிசமமானவையே என்று பலர்சொல்லி வருவது விளக்கெண்ணெய்ச் சமரசம். தத்தம் சமயத்திலே நம்பிக்கை இல்லாதவர்களே இப்படிப் பேசி வருகிறார்கள். இது தவறு. கிறிஸ்தவன் கிறிஸ்தவத்திலே ஊன்றி நிற்கவேண்டும். முஸ்லீம் இஸ்லாமிலே ஊன்றி நிற்கவேண்டும். அப்படியே வைணவனும் சைவனும் தத்தம் சமயத்திலே உறுதியாக இருக்கவேண்டும்.''

இதைக்கேட்டுக் கொண்டிருந்த மகராஜன் 'தாங்கள் சொல் லுவது முழுவதும் உண்மை. ஆனால் தாங்கள் சொல்லுகிற முறை சமயப்பூசலுக்கு இடங்கொடுக்குமோ என்று அஞ்சுகிறேன்' என்று சொன்னார். உடனே ராஜாஜி, 'அப்படியானால் எப்படி அந்த உண்மையைக் கூறவேண்டும் என்று சொல்லுகிறீர்கள்' என்று கேட்டார். 'திருமூலர் இந்த உண்மையை வேறுவிதமாகச் சொல்லு

கிறார். கடவுள் ஒருவன்தான். அவரவர் பக்குவத்துக்கு ஒத்தபடி அந்த இறைவன் வந்து எனக்கு ஓர் உபதேசம் செய்தான். எனக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு. அத்தனை நாமங்களையும் பிடித்துத் தொங்காதே. ஏதாவது ஒரு நாமத்தைத் தெரிந்துகொள். அந்த நாமத்தில் முங்கிவிளையாடு. அப்படிச் செய்தால் என்னுடைய அருள்முழுதும் உனக்குக் கிடைக்கும் என்று உபதேசம் செய்தான்'.

''பேரா யிரம்உடைப் பெம்மான்
பேர்ஒன்றில்
ஆரா அருட்கடல்
ஆடுகின் றானே''

இப்படிச் சொல்லும்போது சமயங்களுக்கு இடையிலே உள்ள பூசல் தீரும் என்றார். 'அடடா என்ன அருமையான திருமந்திரம் அது' என்று வியந்து போற்றினார் ராஜாஜி. அன்று ராஜாஜி அவர்களை விட்டுப் பிரிந்தபோது இரவு 12-15,

அடுத்த நாள் காலை, தமிழக அரசின் நிதித்துறைச் செயலாளரான திரு வேங்கடரமணனை மகராஜன் சந்தித்தபோது, முந்தின இரவு 6மணி நேரம் நடந்த ராஜாஜியின் உரையாடலைக் குறிப்பிட்டார். அது கேட்ட அவர், 'அடேயப்ப - ஆறுமணி நேரமா- அமெரிக்கத் தூதர் ராஜாஜியோடு அரைமணி நேரம் பேட்டி காண வேண்டும் என்று விரும்பினார். அவர் சார்பில் நான் ராஜாஜியிடம் தொடர்பு கொண்டேன். 15 நிமிஷத்துக்கு மேலே கொடுக்கமுடியாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். நேற்று உங்களோடு செலவழித்த 6மணி நேரத்தில் 15நிமிஷத்தை ஒதுக்கி அமெரிக்கத் தூதருக்குக் கொடுத்திருக்கலாகாதா என்றார். அமெரிக்கத் தூதர் மட்டுமல்ல, நம்மவர்களுமே அவரைப் பேட்டி காண்பது அவ்வளவு எளிதல்ல என்று முணுமுணுப்பார்கள். ஆனால் டி. கே. சி. மறைந்த பின் அவர்களுடைய சீடர்களைச் சந்திப்பதிலே தனி அக்கறை காட்டினார் ராஜாஜி.

1957ல் ராஜாஜியின் 77-வது பிறந்தநாள் கொண்டாட்டம் நவரத்ன ராமராவின் தலைமையிலே மயிலாப்பூரில் நடந்தது. மகராஜன் சென்னைக்கு வந்து சோமுவுடன் கூட்டத்துக்குப் போனார். மேடையிலே அமர்ந்திருந்த ராஜாஜி, அவர்களைப் பார்த்ததும் மேடையில் வந்து அமரும்படி சொன்னார்கள். மேடை

யிலே ஒரு பட்டு பட்டை பெரியார் வீற்றிருந்தார். அவரிடத்திலே, 'இவர்தான் மகராஜன், புதுக்கோட்டை சப்ஜட்ஜ்' என்று அறிமுகப் படுத்தினார்கள். அந்தப் பெரியவர், ராஜாஜி சொல்லியும் உம் மென்று கூடக் கேட்கவில்லை, அந்தப் பெரியவர், அப்படியா என்று சொல்லித் தலையை ஆட்டியிருக்கலாம். இந்தக்கூட அவர் செய்ய வில்லை. மகராஜனுக்கு வருத்தம்தான். கூட்டம் முடிந்தது. அதன் பின் அந்தப் பெரியாரும் மற்றவர்களும் புடைசூழ ராஜாஜ மேடை யிலிருந்து இறங்கி, வாசலை அடைந்தார்கள். கூட்டத்திலே மக ராஜன் பின்தங்கிவிட்டார். தம்முடைய காருக்குப் பக்கம் போனதும் ராஜாஜி மகராஜன் எங்கே மகராஜன் எங்கே என்று கேட்டார்கள். உடனே பலர் ஓடிவந்து மகராஜனை ராஜாஜி இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். மகராஜனை லட்சியம் செய்யாது இருந்த அந்தப் பெரியவரும் அங்கே நின்று கொண்டிருந்தார். அவரும் இப்போது மகராஜனைக் கவனிக்கத் தொடங்கினார். ராஜாஜியின் காரிலே பின்சீட்டின் வலது ஓரம் ஒருதிண்டு இருந்தது. ராஜாஜி காரின் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு 'மகராஜன், நீங்கள் அந்த சீட்டிலே உட்காரவேண்டும்' என்றார்கள். 'தாங்கள் உட்கார வேண்டிய இடம் அல்லவா அது' என்று மகராஜன் சொல்லவும் அவரைக் கட்டாயப்படுத்தி அங்கே அமரச்செய்துவிட்டு, தமது காரின் பின்புறமாகச் சுற்றிவந்து கதவைத்திறந்து இடது ஓரத் திலே உட்கார்ந்து கொண்டார்கள். காரும் கட்சி அலுவலகத் துக்குச்சென்றது. மகராஜனை மதிக்கவேண்டும் என்றஎண்ணத்தைக் காட்டிலும், அவரை அவமதித்த அப்பெரியவருக்குப் பாடம் கற் பிக்க வேண்டும் என்ற எண்ணமே ராஜாஜியின் உள்ளத்தில் மேலோங்கியிருந்தது போலும்.

ரசிகமணி மறைந்து 13 ஆண்டுகளுப்பின் ராஜாஜி 10-9-67 கல்கி மலரில்' 'பூரண ஹரியும் பூரண ரசிகமனியும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார், அந்தக் கட்டுரையில டி. கே. சியையும் கண்ணபிரானையும் ஒரே பீடத்தில் அமர்த்தி வைத்திருந்தார் ராஜாஜி.

கட்டுரையின் தொடக்கம் இதுதான். 'சென்ற திங்கட்கிழமை கண்ணன் பிறந்தநாள். அந்தத் திங்கட்கிழமையே தமிழ்க்கவி தரும் மகிழ்ச்சியின் ரகசியம், தமிழ் வசன நடை முன்னேற்றத்தின் ரகசியம், தாளமும் ராகமும் சேர்ந்த நல்லிசையின் ரகசியம், அன்பின் பரமமகிழ்ச்சி, வேஷங்களின் பொய்ம்மை, அனைத்தும்

நன்றாகக் கண்ட பூரண ரசிகமணி டி. கே. சி. பிறந்தநாளும் 'ஸ்ரீ ஜயந்தி என்றால் கண்ணன் பிறந்தநாள்; டி. கே. சி. பிறந்த நாள் என்றும் தமிழர்கள் கொண்டாட வேண்டிய நாள்' என்று கட்டுரையை முடிந்திருந்தார்கள்.

கண்ணனோடு டி. கே. சியை இணைத்து எழுதிய பரம பாகவதரான ராஜாஜியின் துணிச்சலைப போற்றி, அவர்களை வாழ்த்தி மகராஜன் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதற்குபதில், ராஜாஜியிடமிருந்து வந்தது - இதோ :.

''தங்களுடைய கடிதம் படித்து அமிர்தம் குடித்த தேவர்கள் போல் மத்தம் ஏறி, என்ன எழுதுவது என்று தெரியாமல் திகைக்கிறேன்.

மகராஜனுக்குப் பல்லாண்டு

இராஜகோபாலச்சாரி

இந்தக் கடிதத்திலே ஒரு பின்குறிப்பு:-

தங்கள் கடிதத்தைச் சோமுவும் பார்த்து ஆனந்தம்

பொங்கி மகிழ்ந்தார்.

தற்காலத்தில் நாம் பெற்றிருக்கும் விஞ்ஞான அறிவும் தெளிவும் படிப்பும் முற்காலத்தில் இல்லை. எனவே இந்த அறிவும் தெளிவும் இல்லாத சாமானிய மக்களுக்கு நுட்பமான உண்மைகளை விளக்கிக் காட்டுவது எளிதல்ல ஆகவேதான் முற்காலத்து ஞானிகள் அவ்வுண்மையைப் பாகுபாடு செய்து, அவற்றின் இயக்க நிலைகளை உணர்ந்து அவற்றைத் தூல வடிவங்களிலே அமைத்தும் புராணக் கதைகளிலே புதைத்தும் வைத்தார்கள். அப்படித்தூல வடிவிலே உண்மைகளைச் சொல்லும் போதே, அவற்றோடு குறியீடுகள் சங்கேதங்கள் அடையாளங்கள் பரிபாஷை ஆகியவற்றைச் சாதுரியமாக விரவியும் வைத்து விட்டார்கள். இவ்வாறு செய்த காரணத்தால் விளைந்த நன்மைகள் சில; தீமைகள் பல.

சத்திய வேட்கையோடும் பகுத்தறிவோடும் புராணக்குப்பை களைக் கிளறி ஆராய்ந்த சிலர், குப்பையை ஒதுக்கிவிட்டு ஆழத்தில் புதைந்துகிடந்த, மாணிக்க மாலையைத் தோண்டி எடுத்துப் பயன் அடைந்தார்கள். ஆனால், பகுத்தறிவு அற்றவர்களும் மூடநம்பிக் கையிலே அமுந்திக்கிடந்தவர்களும் வேண்டியமட்டும் குப்பையைத்

தலையிலே வாரிப்போட்டுக்கொண்டார்கள், மற்றவர்கள் தலையிலும் அதைக் கொட்டினார்கள். மாணிக்கமாலை இவர்களுடைய கண்களுக்குத் தென்படவில்லை. உள்ளத்திலே புகவும் இல்லை.

போதாக்குறைக்கு ஆன்ம உண்மைகளை மறைத்தும் திரித்தும் சீடர்களுக்குக் கூறவேண்டும் என்று குருமார்களுக்கு உபதேசம் செய்தன சில நூல்கள். இதனால் உலகத்தில் உண்மை தெரிந்தவர்கள் கூடத்தெரியாதவர்கள் போலப் பாவனை செய்தார்கள், அல்லது உண்மையை மற்றவர்க்கு உரைக்கும்போது, அதன் முக்கிய அம்சங்களைச் சூதாக மறைத்தோ அல்லது ஒன்றை மற்றொன்றாகச் சொல்லி மயக்கியோ திசை திருப்பிவிட்டு வந்த காரணத்தால் அறிஞர்களுக்கு ஞானாசிரியர்கள் மீது நியாயமான சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அதோடு போலி ஞானிகள் தெரியாததைத் தெரிந்தது போலப் பாவனை செய்தும், கண்கட்டு வித்தைகள் காட்டியும் படாடோபமான வேஷங்கள் போட்டும் யோகத்தையும் ஞானத்தையும் வியாபாரப் பொருளாகக் கையாண்டு வருகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையிலே சிவயோகி மா. இரத்தினசபாபதி பிள்ளை அவர்கள், தாம் உணர்ந்ததை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்ற பேராசையோடு பல நூல்கள் எழுதியும், பல சீடர்களுக்கு ஆன்ம ரகசியங்களைப் பக்குவத்துக்கேற்றபடி போதித்தும் வந்தார்கள். இவர்களைப் பல ஆண்டுகளாகவே மகராஜன் வாரந்தோறும் சந்தித்தும் மணிக்கணக்காக அவருடைய உணர்வுகளைக் கேட்டும் வந்தார்கள். அவருடைய ஞானத்தெளிவு எவ்வளவோ அபூர்வமானது என்று தெரிந்தார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் செய்துவந்த தவத்தின் காரணமாக அவர்களுடைய உடம்பிலே உள்ள மின்காந்த சக்தி Electro Magnetism ஆற்றல் மிகுந்ததாயும் அவர்களுடைய முகத்திலிருந்து ஒளிக்கதிர்களை வீசுவதாயும் அமைந்திருந்தது அவர்களுடைய நூலை வாசிப்பவர்களுக்கும், பேச்சைக் கேட்பவர்களுக்கும் தியான நிலை எளிதில் கை கூடுகிறது. இவர்களிடம் மகராஜன் தீட்சை பெற்றுக்கொண்டதன் பயனாய் இவருக்கு உள்ளொளி பெருகியது தேகம் கடந்த அவ்வறிவொளியிலே சிலநேரம் கரைந்து நிற்கவும் முடிந்தது என்று இப்படி தம் அனுபவத்தைக் கூறியிருக்கிறார். நண்பர் மீ. ப. சோமு போன்ற சீடர்களுக்கு அரிய ஆன்ம அனுபவங்கள் கிடைக்கின்றன என்று, காரியசித்தி என்ற தலைப்பில் ஔவையாரின் அகவலுக்கு மகராஜன் தந்துள்ள முன்னுரையிலே குறிப்பிடுகிறார்.

## இயல்-2
## தர்மாசனம் - அறங்கூறவையில்:

பண்டைய கிராமப் பஞ்சாயத்துக்களிலே வாதி, பிரதிவாதி வழக்குகளை ஆர அமர்ந்து கேட்டு நிதானமாக ஒரு முடிவுக்கு வந்து நீதி செலுத்துவதற்கு வசதி இருந்தது. மேலும் சாட்சிகளும் உள்ளூர்க்காரர்கள், ஊர்க்கூட்டத்திலே பொய்பேசுவதற்கு அஞ்சுவார்கள். காரியம் மிஞ்சிப்போனால், அம்மன் கோயிலிலோ, முனியப்பன் கோயிலிலோ மஞ்சள் உடை உடுத்தி அரளிப் பூச்சூடி நான் சொல்வது சத்தியம் என்று எரிகிற கற்பூரத்தை அணைத்து விடவேண்டும். பொய்ச்சத்தியம் செய்து விட்டால் தெய்வம் துணை நின்று கேட்கும் என்ற நம்பிக்கை இருந்தது.

சமுதாயக்கட்டுப்பாடு சீர்குலைந்து நீதிக்கும் சத்தியத்துக்கும் மதிப்புக் குறைந்துவரும் தற்போது அரசாங்க நீதிமன்றங்கள் வாயிலாகத் தான் ஓரவஞ்சகம் இன்றி நீதிகிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

30மைலுக்கு அப்பாலுள்ள நீதிமன்றத்திலே முன்பின் தெரியாத நீதிபதி முன்னிலையில் சாட்சிக்கூண்டு ஏறி நின்றுகொண்டு வாக்குமூலம் கொடுக்கும்முன் 'நான் சொல்வது உண்மை. முழுக்க முழுக்க உண்மையைத் தவிர வேறொன்றும் சொல்லமாட்டேன் இது சத்தியம்' என்ற பிரமாணம் செய்தபின் கலப்பற்ற உண்மையை எத்தனைபேர் சொல்கிறார்கள் என்பது கேள்விக்குரியது.

வெயிலும் நிழலும்போல மெய்யும் பொய்யும் மாறிமாறி வரும் வழக்கிலிருந்து உண்மை எது பொய் எது என்று சட்டதிட்டங்களின் உதவியால் இனம் காண்பதற்குள் நீதிபதிகள் படும் சிரமம் கொஞ்சமல்ல. கேவலம் ஏட்டுப்படிப்பும் சட்டஞானமும் இருந்தால் மாத்திரம் உண்மை பிடிபட்டுவிடாது. இறைவனுடைய அருந்துணையால் மூன்றாவது கண்திறந்து உண்மையைக் கண்டு பிடிக்கும் மாசறு காட்சி அவர்களுக்கு ஏற்படவேண்டும். இத்தகைய காட்சி பெற்றவர்தான் மகராஜன்.

மனிதப்பண்புகள், மக்கள் செயலுக்கு அடிப்படையாய் இருக்கும் உணர்ச்சிகள், நோக்கங்கள் அவைகளுக்கு இடையே இருக்கும் முரண்பாடுகள், காரண காரியத் தொடர்புகள், நாட்டுப் பழக்க வழக்கங்கள் இவைகளைப் பற்றிய ஆழ்ந்த அனுபவஞானம் அவரிடம் அபரிமிதமாக இருந்ததை அவர் வழங்கிய தீர்ப்புகளிலே காணலாம்.

மூலைமுடுக்குகள் எங்கும் சிதறிக்கிடக்கிறது, வாழ்க்கை. பொருளற்றது. போன்ற ஒரு நிகழ்ச்சி இன்று நடக்கிறது. அதன் முழுப்பொருளையும் உணர்வதற்கு நாற்பதாண்டுகள் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக்கிடக்கும் வாழ்க்கைத் துண்டுகளைப் பொறுக்கி இணைத்துப் பார்க்கும்போதுதான் வாழ்க்கையின் உட்பொருள் என்ன? நோக்கம் என்ன என்றுஅறிய முடிகிறது. இதன் விசித்திரத்தை அறியவிரும்புகிறவர் ஊர் ஊராய் அலைந்து திரியவேண்டாம். கொஞ்ச காலத்துக்கு ஒரு நீதிமன்றத்திலே நடக்கும் வழக்குகளைக் கவனித்தாலே போதும். மனித நாடகத்தின் பலமட்டங்களையும் ஒட்டுமொத்தமாய் பார்த்து அனுபவித்து உணரலாம். குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் முண்டு முடிச்சுகள், மனிதனுடைய போலி டம்பம், வறுமையின் கொடுமைகள், செல்வந்தர்களின் செருக்கு, காதலர்களின் நிறைவேறாக் கனவுகள், பொருந்தாத் திருமணங்களின் பொல்லாத விளைவுகள், கயமை, சோகம், கருணை, ஹாஸ்யம் இவை எல்லாவற்றையும் பற்றற்ற நிலையிலிருந்து பார்த்துப் பார்த்து நிதானமும் மனப்பக்குவமும் அடைந்தவர்தான் மகராஜன்.

ஒருநாள் அவருடைய நீதிமன்றத்தில் கொலைவழக்கு ஒன்று நடந்துகொண்டிருந்தது. பல வழக்கறிஞர்கள் வட்ட மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். நீதிபதி இருக்கும் ஆசனத்துக்கும் வட்ட மேஜைக்கும் இடையே திடீர் என்று வந்து நின்றாள் ஒரு மூதாட்டி, நெற்றியிலே வெண்ணீறு, குங்குமப்பொட்டு, கழுத்திலே மாங்கல்யமும் பட்டுப்புடவையும் அணிந்திருந்த அம்மூதாட்டி, நீதிபதியைப் பார்த்து நின்றுகொண்டு கைகூப்பி, தன்னையே மூன்றுதரம் சுற்றிக்கொண்டிருந்தார் கோயில் சந்நிதியில் சுற்றுவது போல. சேவகர்கள் அவரை வெளியே போகும்படி அதட்டிக் கொண்டிருந்தனர். அவளோ அதைச் சட்டைபண்ணுவதாகத் தெரியவில்லை. பக்திப் பரவசத்திலே நின்றுகொண்டிருந்தாள். இந்த விநோதமான காட்சியைப் பார்த்த நீதிபதி மகராஜன், எதற்கு அம்மா இப்படிக் கும்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார். 'நான் இந்த ஊருக்குப் புதிசு. இந்த கோர்ட்டைப் பார்க்க வந்தேன். இதை வாங்கிக் கொள்ளுங்கள் என்று தன் கையிலிருந்த வெற்றிலைபாக்கு எலுமிச்சம்பழம் எல்லாவற்றையும் மேடைமீதுவைத்தாள். 'சரி, ஏற்றுக்கொண்டேன்' என்று சொன்ன பிறகுதான் அந்த அம்மாள் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினாள்

இந்தக் காட்சியைப் பார்த்த அவருக்கும் உள்ளம் சிலிர்த்தது. அவர் சொல்கிறார்:

''சாமானிய மக்கள் நீதிமன்றை இறைவன் இருக்கும் ஆலயமாக அல்லவா கருதுகிறார்கள். அப்படியானால் நீதிபதிகள் எவ்வளவு மனத்தூய்மையோடும் சீலத்தோடும் விவேகத்தோடும் நீதியால் வந்த நெடுந்தரும நெறியிலே நின்று ஒழுக வேண்டும் என்பதை உணர்ந்து அஞ்சினேன்,''

லார்டு பர்க்கென் ஹெட் என்ற ஆங்கிலப் பிரபு அரசியல் சட்டம், இலக்கியம் ஆகிய மூன்று துறைகளிலும் தேர்ந்த ஞானம் உள்ளவர் புகழ்பெற்ற நீதிபதியாகவும் இருந்தார். அவருடைய தீர்ப்புகள் இலக்கிய நயம் வாய்ந்தவையாய் இருக்குமாம். இவர் போலவே ஆலிவர் வென்டல் ஹோம்ஸ், லேர்னட் ஹாண்ட் முதலிய தலைசிறந்த அமெரிக்க நீதிபதிகளும் இலக்கியப் புலமை வாய்ந்தவர்கள்தாம் இலக்கியத்தில் தோயும் போது, குறுகிய மனம் விரிகிறது. மனித வாழ்க்கையைப் பரிவோடு பார்க்கும் திறமை பெருகுகிறது. தன்னை மறந்து மற்றவர் இதயத்துள் புகுந்து, அவர்களுடைய துன்பங்களையும் கோபதாபங்களையும் மனிதச் செயலுக்கு அடிப்படையாய் இருக்கும் மூல காரணங் களையும் உணர்ந்து ஆராயும் வல்லமை வளர்கிறது. எனவே பர்க்கென் ஹெட், ஆலிவர் வெண்டல், ஹோமன் போன்றார் நீதித்துறையிலே மாத்திரம் அல்ல, இலக்கியத்துறையிலும் சிறந்த வெற்றியை அடைந்தார்கள். இலக்கியத்துறையில் பெற்ற பரிவும் கற்பனையும் நீதித்துறையிலே அவர்களுக்கு ஊட்டம் கொடுத்தது. நீதிமன்றிலே அவர்கள்பெற்ற அனுபவஞானம் இலக்கியஎழுத்துக்கு வலிமை சேர்த்தது. இலக்கிய விளக்கு நீதிக்கு ஒளி கொடுத்தது. நீதி விளக்கு இலக்கியத்துக்கு உள்ஒளி கொடுத்ததுபோல.

இம்மேதைகள் வரிசையிலே நீதிபதி மகராஜன் இடம் பெறுவதில் வியப்பில்லை. அவரது நீதி பரிபாலனத்திலே திருக்குறள் எப்படி உதவியது என்பதைப் பார்ப்போம்.

ஒரு சமயம் அவருடைய மனிதாபிமானத்துக்கு இடையூறாக நின்றது சட்டம். வழக்கு இதுதான். வயதான தாய் ஒருத்தி ஒரு வாரம் பசியும் பட்டினியுமாய்க் கிடந்ததால், தன் குழந்தைகள் ஐவரை ஒரு பாழுங்கிணற்றிலே போட்டுவிட்டுத் தானும் அதிலே குதித்தாள். அதைப் பார்த்த வழிப்போக்கன் ஒருவன் உடனடியாக

அந்தக் கிணற்றிலே குதித்து, அவளைத் தூக்கி வெளியே கொணர்ந்து காப்பாற்றினான். ஐந்து பேரைக் கொலை செய்ததாக அவள்மீது போலிசார் வழக்குத் தொடர்ந்தனர். விசாரணையிலே தான் குற்றவாளிதான் என்று அவளும் ஒப்புக்கொண்டாள். இ. பி. கோ. 302 பிரிவின்படி, குற்றவாளி என்று அவளுக்குத் தூக்குத்தண்டனை விதித்தார் நீதிபதி. அவளுடைய மனநிலையை உள்ளவாறு உணர்ந்த அவர்,

'அறத்துக்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்துக்கும் அஃதே துணை'.

என்ற குறளிலே தோய்ந்தவர் ஆதலின், 'இந்தக் கொலைக்குத் தூண்டுகோலாய் இருந்தது தாயன்பு. இந்தக் கொலைகள் கருணையால் செய்யப்பட்டவை. இவளுடைய வறுமைக்கும் செயலுக்கும் நம்முடைய சமுதாயமே பொறுப்பு. ஆதலின் அரசாங்கம் தன்னுடைய தனி உரிமையைப் பயன்படுத்தி, இவளை விடுதலை செய்யவேண்டும்' என்று அரசுக்கு பரிந்துரைத்தார். அவளும் விடுதலை செய்யப்பட்டாள்.

நீதி என்பது கண்ணற்றது, கடுமை நிறைந்தது. இரக்கத் தோடு நீதியைக் கலந்து பக்குவப் படுத்தவேண்டும். அக்கிரமம் செய்கிறவர்கள் அடக்கி ஒடுக்கப்பட வேண்டியவர்கள்தான். எனினும் அவர்களிளிடம்திலேகூட இரக்கத்காட்டி, அவர்கள்செய்த குற்றத்தைக் மன்னித்து அவர்களுக்கு நல்வாழ்வு தருவது தலை சிறந்த பண்பாடு ஆகும்.

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

என்பர் வள்ளுவர். இப்படி வள்ளுவர் வழியிலே மகராஜன் நீதியைப் பரிபாலித்து வழங்கிய சில தீர்ப்புகளை நான் அறிவேன்.

17 வயது மைனர் பெண்ணை 21 வயது வாலிபன் கடத்திக் கொண்டுபோய்விட்டான் என்பது வழக்கு. அவனுக்கு 7 ஆண்டு தண்டனை விதிக்க வேண்டும் என்பது சட்டம். சூழ்நிலையைக் கருதாது சட்டத்தின் புறப்பொருளை மாத்திரம் கவனித்த கீழ்க் கோர்ட்டு நீதிபதி, குற்றவாளிக்கு 7ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்தார். இந்தத் தீர்ப்பின்மேல் அப்பீல் போட்டான் குற்றவாளி. அப்பீல் நீதிபதி மகராஜன், அவன் சூழ்நிலையைப் பரிவோடு பரிசீலித்துக் கடத்தப்பட்ட பெண், தாயை இழந்தவள், மாற்றாந்

தாயிடம் படாதபாடெல்லாம் பட்டுவந்தாள். தகப்பனாரும் இக் கொடுமையினின்றும் மகளைக் காப்பாற்ற முடியவில்லை. அந்தப் பெண் அடுத்தவீட்டுப் பையனிடம் காதல் கொண்டாள். பல கடிதங்களை அவனுக்கு எழுதினாள். கடைசிக் கடிதத்தில், 'உங்களுக்காக என்னைக் கடத்திக்கொண்டு போகாவிட்டாலும், என் சிற்றன்னையின் கொடுமையினின்றும் என்னை விடுவிக்லாகாதா' என்று உருக்கமாகக் கேட்டிருந்தாள். இந்தக் கடிதத்தைக் கண்டதும் அந்த இளைஞனுடைய மனம் இளகிற்று. மிகுந்த துணிச்சலோடு அவளை வேற்றூர் அழைத்துக்கொண்டு சென்று மணந்து கொண்டான்.

இந்த இளைஞனைத் தண்டிப்பது கேலிக்கூத்து அல்லவா என்று கேட்கிறார் நீதிபதி மகராஜன். இரக்கம் காட்டியதற்காக ஏழாண்டு கடுங்காவல். ஆனால் மைனர் பெண் ஆச்சே; அவளைக் கடத்தியது சட்டப்படி குற்றமல்லவா? இக்கேள்வி அப்பீல் நீதிபதியின் உள்ளத்தைக் குழப்பியது. சிந்தனை செய்தார். முதன் முதலாகக் குற்றம் செய்கிறவர்களை, அதிலும் இளைஞர்களாக இருப்பவர்களைத் தண்டிக்காமல் எச்சரித்து விட்டுவிடலாம் என்று மற்றொரு சட்டம் அனுமதி கொடுக்கிறது. அதன்படி அப்பீல் நீதிபதி கடுங்காவல் தண்டனையை ரத்துசெய்து, குற்றவாளியை எச்சரித்து வீட்டுக்கு அனுப்பிவைத்தார். இத்தீர்ப்பு பலரது பாராட்டைப்பெற்றது. ஏன்?

> கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
> உரிமை உடையது இவ்வுலகு'

அதாவது கடமையிலே தவறாமல் நடக்கவேண்டும். அதே சமயம் இரக்கத்தோடும் நடந்து கொள்ளவேண்டும். இப்படி நடப்பவர்கள் உலகத்தையே தம்வசப்படுத்திக்கொள்வார்கள். இந்த குறளுக்கு இலக்கியமாக விளங்கினார் மகராஜன்.

நீதியை நிலை நாட்டுவதற்காகச் சட்டம் என்ற கருவியைக் கண்டுபிடித்தான் மனிதன். இந்தக் கருவியைக் கையாளுகிறவர் இதயத்திலே பொறுமையும் அன்பும் கருணையும் நேர்மையும் இல்லை என்றால் நீதிக்குப் பதில் அநீதிதான். எனவே வறட்டுச் சட்டம் பேசுவதைவிட்டு, பொறுமையோடும் கருணையோடும் மனிதப் பிரச்சனைகளை அணுகித்தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் நீதிபதிக்கு உண்டு என்பதை நினைவிலே கொண்டவர் மகராஜன்.

## இயல்-3
## இலக்கிய உலகில்

இலக்கிய உலகிலே எல்லோரும் பிரவேசிக்க முடியாது. அது நிரந்தர உலகு. அதன் வாழ்க்கை தனிப்பட்ட வாழ்க்கை. நீல வானத்திலே சிறகுவிரித்து மேகத்தோடு பறந்து திரிவது அவ் வாழ்க்கை; காலம், இடம், குலம், மதம் முதலிய தளைகளுக்கு அது கட்டுப்பட்டதல்ல; இவற்றிலே வேர் ஊன்றியது. ஆயினும் இவற்றைக் கடந்தது. நித்திய உண்மைகள், உண்மையில் நின்று தித்த நித்திய அழகு - இவையே இலக்கிய வாழ்க்கையின் சாதனங்கள். நித்தியத்தின் பிரதிபலிப்பே இலக்கியம்.

கவின் கலைகள் கால கதியிலே தோன்றுபவை, ஆனால் அவற்றின் இயல்பு காலத்தைக் கடந்தது. தேசம், குலம், நடை உடை பாவனைகள் கலைஞரின் முயற்சியைப் பாதிக்கும்; ஆனால் கலையின் உயிர்நாடி- மக்களின் சாதிசமய வேறுபாடுகளைக் பொருட்படுத்தாது இதயத் துடிப்பைச் சார்ந்தது.

கவிதை அனுபவத்திலே எழுவது; அனுபவத்திலேயே ஊறித் திளைப்பது. ஆயின் அதன் ஆன்மா இன்றைய அனுபவத்தைப் பின்னால் ஒதுக்கி மக்களின் இயல்பை அடிப்படை யாகக் கொண்டு வாழ்க்கைத் தத்துவங்களை அழகுருவங்களாகச் சமைப்பது. கவிதையின் இலக்கியத்தின் கவின் கலைகளின் பார்வையை எடுத்தியம்புவது எளிதல்ல. முழுவதும் அதை விளக்கிக் காட்ட முயல்வது பகற்கனவு. மானிட உலகின் அடிப்படையான அதிசயமும் அந்தரங்கங்களும் கவிதை உலகிலும் விரவி நிற்கின்றன. அதன் சிறப்பியல்பை அறுதியிட்டுக் கூறுவது சாத்தியம் இல்லை.

ஒன்றை மட்டும் துணிவுடன் கூறலாம். எவ்வளவுக்கு ஒரு நூல் அல்லது கவிதை தான் தோன்றிய காலம், மொழி, தேசம், இடம் முதலியவற்றின் வேறுபாடுகளைக் கடந்து, மனித சமுதாயத் தின் பொது வாழ்க்கையைப் பாதிக்கிறதோ, அவ்வளவு அது இலக்கியத்தைச் சார்ந்ததாகும். பொதுமை, இலக்கியத்தின் முக்கிய அம்சம், இலக்கிய உணர்ச்சியின் அளவுகோல்.

உண்மை இலக்கியம் மக்கள் அனைவருக்கும் பொது. இந்த கிரகிக்கும் தன்மையும் அவ்வாறே - மக்கள் யாவர்க்கும் பொதுவே. உண்மை இரசிகர் எம்மொழியின் இலக்கியத்தையும்

அனுபவிப்பர். அம்மொழியை அறிந்திருந்தால் அதன் அறிமுகம், இலக்கியச் சுவையில் இலக்கிய விமர்சனத்திற்கு இன்றியமையாதது. மரபைத் தழுவி இலக்கியத்தை மதியாது, தானே உணர்ந்து சுவைத்து மதிப்பதற்கு அது ஏதுவாகும்.

## வள்ளுவருடன் :

இலக்கிய உலகிலே திருக்குறளுக்கு ஈடு இணை, ஒப்பு உவமை கிடையாது. அது உலகப் பொது நூலாக ஒளி வீசி ஓங்குகிறது.

இருபதாம் நூற்றாண்டு இயேசுநாதர் என்று போற்றப் படுபவரும், இன்றைய உலகத் தத்துவ ஞானிகளில் முதல் வரிசை யிலே வைத்து மதிக்கப்படுபவருமான ஆல்பர்ட் ஷ்வைட்ஸர் என்ற பேர்அருளாளப் பெரியார், பாரத சிந்தனையாளகளிலே வள்ளுவ னுக்கே முதலிடம் கொடுக்கிறார், வேதங்கள், உபநிடதங்கள் கீதை மனுநூல் சமணம் பௌத்தம் ஆகிவற்றின் கருத்தோட்டங்களோடு வள்ளுவத்தை ஒப்பு நோக்கி, வாழ்வதற்கு உறுதி தருவதில் குறளுக்கு நிகர் குறளே என்று ஆணித்தரமாக விளக்கிக் காட்டுகிறார்.

இந்திய சிந்தனை என்ற நூலிலே திருக்குறளைப் பற்றி ஷ்வைட்ஸர் எழுதியதை மகராஜன் பின்வருமாறு மொழி பெயர்த்து தந்திருக்கிறார் :-

'பகவத் கீதையிலே கர்மத்தின் அவசியத்தைச் சொல்லித்தான் இருக்கிறார். ஆனால் அந்த உபநிடதம் ஒழுக்கத்தை அடிப் படையாகக் கொண்டது அல்ல. பற்றற்ற விருப்பு வெறுப்பற்ற கர்மத்தைச் செய்வதன் மூலம் பரத்துவத்தை அடையலாம் என்பதே அதன் கொள்கை. இறைவனிடத்திலே மனிதன் அன்பு செலுத்த வேண்டும் என்பதே அதன் இலட்சியம். மனிதன் மனிதனுக்குக் காட்டுகிற அன்பின் மூலம் இறைவனை அடையலாம் என்ற நினைப்பே அதில் இல்லை.

அன்பு, சமூக சேவையில் பரிணமிக்கவேண்டும் என்ற கருத்து திருக்குறளிலேதான் வற்புறுத்தப்படுகிறது. கி. பி. 2ம் நூற்றாண் டிலே வள்ளுவர் 1330 குறள் எழுதினார். இதிலே உள்ள எல்லாக் கருத்துமே வள்ளுவருடையது என்று சொல்வதற்கு இல்லை. வெகுகாலமாகத் தமிழ் நாட்டிலே வேரூன்றி வளர்ந்த கருத்துக் களை அவர் குறள் வடிவத்திலே எடுத்து இயம்பினார்.

குறளுக்கும் மனுதர்ம சாஸ்திரத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம். மனு நூலிலே வாழ்க்கை வெறும் பொய் என்ற கொள்கை முனைந்து நிற்கிறது. ஆனால் குறளிலே அது மிகவும் பம்மிப் போய் ஒரு மூலையிலே உட்கார்ந்திருக்கிறது.

மனுநீதி நூலில் இருப்பதுபோலக் குறளிலும் ஒழுககத்தின் மூலமாக மனிதனுக்குப் பிரதிப்பயன் கிடைக்கிறது என்ற கருத்தைக் காண்கிறோம். பிறவிக்கடலிலிருந்து தப்பவோ அல்லது மறுபிறப்பில் உயர்ந்த நிலையை அடையவோ வேண்டும் என்ற கருத்தும் குறளிலே இருக்கத்தான் செய்கிறது. அதோடு பகவத்கீதைக்கு மேல் ஓர் அடி எட்டி வைக்கிறது குறள். பிரதிப் பயன் கிடைத்தாலும் 'சரி கிடைக்காவிட்டாலும் சரி, நல்ல செயல்களைச் செய்வதனால் மனத்திற்கு திருப்தி ஏற்படுகிறது. ஆதலால் நற்செயலைச் செய்யவேண்டும் என்ற உண்மையைக் குறள் போதிக்கிறது. மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று என்று (222) குறளிலே வள்ளுவர் கூறியிருக்கிறார். இப்படி 25க்கு மேற்பட்ட குறள்களை எடுத்து அதன் ஒருமைப்பாட்டை விவரிப்பார் ஷைவட்சர்''

எத்தனை எத்தனையோ கோணங்களிலிருந்து எத்தனை எத்தனையோ விருப்பு வெறுப்புகளோடு உரை நூல்களும் ஆய்வுரைகளும் திறனாய்வுகளும் சொற்பொழிகளும் பாடல்களும் குறள் உண்மைகளைத் தமிழனுக்கு உணர்த்தி வருகின்றன. ஆயினும் ஷைவட்சர் போல, வள்ளுவர் உள்ளத்தை அறிந்து உணர்த்தியவர் யாரும் இல்லை. எனினும் இவர் வழியிலே மகராஜன் தனித்து நிற்பது வியப்பே.

தமிழின் மறுமலர்ச்சி உணர்ச்சியும் தமிழனின் ஜனநாயகப் பண்பும் வளர்ந்துவரும் தற்போது திருக்குறளைப் பற்றிய அறிவை, இது வரையில் யாரும் அளிக்காத வகையில் புதிய முறையில் சமுதாய நோக்கில் கலை இலக்கியப் பார்வையில், சாதாரண சராசரித் தமிழனுக்கு வள்ளுவப் பெருந்தகையை அறிமுகப்படுத்துவதில் மகராஜன் தனித்து நிற்கிறார், என்பது எனது பணிவான துணிவான கருத்து. வள்ளுவர் வான் மறையை எடுத்து இயம்புவதிலே, பிற்போக்கு, திரிபுவாதம், மொழி இனவெறிப்பற்றுகள் ஆகிய விஞ்ஞான விரோத இலக்கிய ஆய்வுரைகளையும் முடிவுகளையும் வெட்டவெளிச்சமாக்குகிறார். இவருடைய பார்வைக்

கோணமும் ஆய்வுப்பாணியும் தமிழ்ப்பண்பும் ஒருதலைப்படாத நல் நோக்கத்தில் ஜனநாயக சமாதான வாழ்வுக்குச் செம்மையும் செழுமையும் ஊட்டும் என்பதிலே இரண்டு கருத்து இருக்க முடியாது.

## மகராஜன் சொல்லுகிறார்:

வள்ளுவர் என்ன செய்தார்? தமிழுக்கு அற்புதமான குறளைக் கொடுத்தார். தமிழுக்கு நடை பழக்கினார், தமிழ்ச் சொல்லுக்குத் தெளிவும் ஒளியும் கொடுத்தார். வேகமும் அர்த்தபுஷ்டியும் தந்தார்.

மின்சாரக் கம்பி, இவ்வளவு 'லோட்' தான் தாங்கும் என்று ஒரு கணக்கு உண்டு. தமிழ்ச் சொல்லுக்கும் இவ்வளவு பாரந்தான் தாங்கலாம், இவ்வளவு வேகந்தான் ஏற்றுக்கொள்ளலாம் என்று ஒரு வரம்பு உண்டு.

சாதாரணமாக நாம் தமிழ்ச் சொல்லைப் பிரயோகிக்கும் போது, கால் வேகம் அரைக்கால் வேகந்தான் கொடுக்கமுடியும். கம்பர் போன்ற மகாகவிகள் முழுவேகத்தோடு பேசும்படிச் செய்வார்கள். ஆனால் வள்ளுவர் கையிலே ஒன்றே கால்வேகத்தோடு தமிழ்ச்சொல் பேசுகிறது. ஏது, அர்த்தபாரம் பொறுக்கமாட்டாமல் சொல்லின் இடை நொடிந்து விடுமோ, வார்த்தை சப்பழிந்து போகுமோ மூச்சுவிட்டு விடுமோ என்ற பயம் ஒவ்வொரு குறளையும் படிக்கும்போது நமக்கு ஏற்படுகிறது. அவ்வளவு அசாதாரணமான அமானுஷ்யமான சொல் லாட்சித் திறமை அவரிடமிருந்தது. அவருடைய சாந்நித்தியத்திலே கட்டுக்கு அடங்காது திமிறிக் கலைந்த வார்த்தைகள் எல்லாம், பயபக்தியோடு கைகட்டி வாய் புதைந்து தலைகுனிந்து அவருடைய ஏவலாட்களாகப் பணி புரிந்தன.

> சொல்லுக சொலலைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லும்சொல் இன்மை அறிந்து.

கருத்தைச் சொல்மூலம் வெளியிடுதற்குமுன்னால் என்ன செய்ய வேண்டுமாம். கருத்தைச் சொல்லத்தெரிந்த, கிட்டத்தட்ட சம அர்த்தமுள்ள வார்த்தைகள் எல்லாம் நம் மனத்தகத்தே வந்து அணிவகுத்து நிற்க வேண்டும். நினைத்ததை நினைத்தபடி

சொல்ல ஏலாத வார்த்தைகளை எல்லாம் ஒதுக்கித்தள்ளிவிட வேண்டும். மிஞ்சிநிற்கிற வார்த்தைகளை ஒன்றோடொன்று மோத விட்டு எது இதர வார்த்தைகளை வென்று வெற்றி பெறுகிறதோ அந்த வார்த்தையைத்தான் சொல்ல வேண்டும் என்கிறார்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும் சொல்இன்மை அறிந்து

இந்த முறை யோகப்பயிற்சியோடு சேர்ந்தது. நமக்குகோபம் வருகிறது வெறி ஏறிக்கொண்டே போகிறது. உடனே நிதானம் இல்லாமல் வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பிக்கிறோம். ஆனால் குறளாசிரியர் என்ன செய்யச் சொல்கிறார். நிதானத்தோடு தராசை எடுத்து, வார்த்தையை எடைபோட்டு, சமயத்துக்கு ஏற்ற பதம் என்ன என்று நிர்ணயம் செய்து, அதன்பின்தான் வார்த்தையைச் செலவழிக்க வேண்டும் என்று சொல்கிறார். இப்படி எல்லாம் நிதானிக்க ஆரம்பித்த உடனேயே கோபம் பறந்துவிடுகிறது.

மகராஜன் குறளைப் பார்க்கும் பார்வையே ஒரு தனிரகம்.

## 2 திருமூலருடன் :

காஷ்மீரத்தைப் பாரசீகர், The garden of Paradise சுவர்க்கத்தின் முன்றிற்சோலை என்றனர். ஐரோப்பியர் Emrald set in the Pearls என்றனர். பசிய சோலைகளும் பனிமலைகளும் சூழ்ந்த இப்பிரதேசத்தை இந்திய ஞானிகள் பூகைலாசம் என்றனர். இங்கே மெய்ஞானிகளும் யோகிகளும் சிவலோக மர்மங்களை நேருக்குநேர் உணர்ந்து வெளிப்படுத்தியதிலே வியப்பில்லை. இவர்களிலே ஒருவர்தான் திருமூலர் (கி. பி. 6ம் நூற்றாண்டு).

கைலைச் சாரலினின்றும் தென்னாடு போந்த திருமூலர் முதிர்பேர் அறிவாகிய ஆகமாந்தத்தின் கோட்பாடுகளை மூவாயிரம் பாசுரங்கள் அடங்கிய திருமந்திரம் என்ற ஞானக்கருவூலமாகத் தமிழர்க்கு வழங்கினார். இடையறாத சிந்தையினால் புந்தியிலே தோன்றும் ஆழ்ந்த உண்மைத் தோற்றங்களே அம் மந்திரங்கள்.

மறைபொருளைத் தம் உட்செவியால் கேட்ட மறையோர்கள் தம் அனுபவங்களைச் சாதாரண மொழியின் மூலம் எடுத்துச் சொல்லாமல் சங்கேதக் குறியீடுகள் மூலமாகவும், சரியான சந்தங்கள் ஒலிநயங்கள் வாயிலாகவும் வெளிப்படுத்துவது மரபு. இவ்வெளிப்பாடே மந்திரங்கள். திருமூலர் தமிழகம் போந்தபோது இங்கே ஞான நூல்கள் பொங்கி மிகாமல் இருந்தன, ஆதலின்

> 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே

என்று தொடங்கி ஆகமாந்தம் கூறும் அகவுணர்வு நுகர்ச்சிகள் அனைத்தையும் முறைபிறழாமல் நன்கு மொழிந்துள்ளார்.

விக்கிரக ஆராதனையிலிருந்து அருவத்தியானத்திலே தன்னைக் கரைக்கும் நிலைவரையில் பல மட்டங்களிலே உள்ள விதவிதமான ஆன்ம அனுபவங்களை அதிகார தோரனையோடு எடுத்து விளக்கும் அரிய களஞ்சியமாக விளங்குகிறது திருமந்திரம். மேலும் அது ஒரு அனுபூதிநூல்.

### மகராஜன் சொல்கிறார்:

தம்முடைய ஆன்ம அனுபவங்களை எல்லாம் ஆற்றலும் எளிமையும் வாய்ந்த கவிதைகளிலே பதிவு செய்ததோடு இல்லாமல் நாம்பெற்ற ஆன்ம அனுபவங்களை மற்றவர்களும் பெறட்டும் என்ற கருணையினால் விரிவான வழிவகைகளையும் தந்திரங்

களையும் தம் நூலிலே எடுத்து விளக்கிய ஞானி திருமூலரைத் தவிர இந்திய வரலாற்றிலேயே வேறெவரும் இல்லை என்று துணிந்து சொல்லலாம். திருமூலர் கண்ட உண்மைகளை முண்டு முடிச்சுகள் நிரம்பிய சங்கேத மொழியிலேயே அவர் சொல்லியிருக் கிறார். அவருடைய சங்கேதப் பூட்டைத் திறக்கும் திறவுகோலை நாம் இழந்துவிட்டோம். அதை இனி தாம் திரும்பப் பெறமுடியாது என்று கூட ஒரு சமயம் நான் நினைத்ததுண்டு. ஆனால் தமிழ் நாட்டிலே இன்னும் நடமாடிவரும் சில ஞானிகளோடு தொடர்பு கொண்ட பிறகு, திறவுகோல் நல்ல பாதுகாப்பான இடத்திலே இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். கேவலம் ஜடத்துவ உண்மை பொதிந்து கிடக்கும் அனுகுண்டின் உற்பத்தி ரகசியத் தையே சாமான்ய மக்களுக்குச் சொல்வது அபாயம் என்று நினைக்கும் இந்தக் காலத்திலே சூட்சுமமான ஆன்ம ரகசியங்களை அவர்களுடைய அறிவுக்கு எட்டாத இடத்திலே வைத்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியம்.

திருமூலரது உருவக் கவிதைகளைஉள்ளுணர்வுடன் மகராஜன் விளக்கிவந்த விதத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு.

மனித நாடகத்திலே நாள்தோறும் நாம் காணும் அவலக் காட்சி. மனித உயிர் நட்சத்திர மண்டலங்களைத்தாண்டி அண்ட சராசரங்களை அளந்து, விஸ்வவெளியிலிருக்கும் ஆனந்தக் கூத்த னோடு நடனமாட விரும்புகிறது. ஆனால், மனித உடல், மனம் போன போக்கெல்லாம் சென்று, புழுவைப்போலக் கேவலம் சேற்றிலும் சாக்கடையிலும் அழுந்தித் திணறி நாக்குக்கும் மூக்குக் கும் கட்டுண்டு உப்புக்கும் கூழுக்கும் புகையிலைக்கும் குற்றேவல் செய்கிறது.

உடலுக்கும் உயிருக்கும் நடந்துகொண்டிருக்கும் இந்தத் தீராத பூசலை எப்படித் தீர்த்து வைப்பது. பஞ்சேந்திரியங்களை வெல்வது சாத்தியமான காரியமாகத் தோன்றவில்லை. ஐம்புலன் களையும் போகும்போக்கிலே விட்டு, பின் தாக்காக் கட்டி, பிறகு உயிருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யும் ஏவலாளர்களாக மாற்றவேண்டும். இதைப் பல உதாரணங்களின் மூலம் விளக்குவார் திருமூலர்.

புறப்பொருளிலே செல்லும் பார்வையை மாற்றித்திருப்பி உள்ளே செலுத்துகிறவன், தன்னுடைய மனசிலே ஐந்து கறவை மாடுகள் மேய்ந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறான். மாடுகளா

அவை? பெரிய கொம்பன்கள். இப்படியும் அப்படியுமாக வெறித்துத் தான்தோன்றிகளாகத் திரிந்தும், சென்ற இடம் எல்லாம் தவிடு பொடி ஆக்கிக்கொண்டும் இருக்கின்றன அந்த மிருகங்கள். அவைகளுக்கு மூக்கணாங்கயிறு பூட்டி, திமிரை அடக்குவதற்கு ஆள் இல்லை. கையிலேகம்பும் வாயிலே வேய்ங்குழலும் கொண்டு. வெறித்துத் திரியும் ஆனிரைகளை மடக்கிப் பிடித்து மேய்ப்பதற்கு ஓர் இடையன் ஏற்பட்டுவிட்டால், பசுக்கள் இவ்வாறு திமிரியா திரியும்? அடங்கி ஒடுங்கி ஞானப்பாலை அல்லவா சொரிய ஆரம்பித்துவிடும்.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்து உண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய், வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாச் சொரியுமே.

இப்படி எல்லாம் ஐம்புலன்களைப் பார்த்து ஆட்கொள்வதற்குப் பாவனா சக்தி எவ்வளவோ வேண்டும். வைராக்கியமும் வேண்டும். ஒரு நிமிஷம் அஜாக்கிரதையால் இருந்துவிட்டால் அடைந்ததெல்லாம் தொலைந்து விடும்.

உழவன் நல்லவன்தான். தனக்குக் கிடைத்த காணி நிலத்தை மெய்சோர உழுது கொண்டிருக்கிறான். உழுது பயிர் செய்யாவிட்டால் பிறவிநோய் தீர்வது எப்படி. அருள் மழை பெய்து, நிலத்திலே நீர்விம்மி நிற்கிறது. உழுதுகொண்டிருக்கும் போது, ஒரு கருங்குவளைப்பூ நீர் மட்டத்துக்குமேலே தன் தலையைக் காட்டி கண் சிமிட்டி சேற்றுக்குள் மறுபடியும் மறைந்துவிடுகிறது. உடனே உழவனுக்கு உழத்தியின் கண்ணும் நயனபாஷையும் ஞாபகத்துக்கு வந்துவிடுகின்றன. உழவை மறந்துவிடுகிறான்; - உழத்தியைத் தேடி அலைய ஆரம்பிக்கிறான்.

உழவன் உழஉழ வானம் வழங்க
உழவன் உழவினிற் பூத்த குவளை
உழவன் உழத்தியர் கண்ணொக்கும் என்றிட்டு
உழவன் அதனை உழல் ஒழிந் தானே

பேரின்பப் பயிர்செய்து, முழுமேனிப் பயிர்களுக்கு, இராப் பகல் அற்ற வாழ்க்கை வாழவேண்டும் என்று விரும்புகிறான்

மனிதன். வஞ்சகம் இல்லாமல் நெற்றி வேர்வை நிலத்திலே விழப்பாடுபடுகிறான். ஆனால் அவனையும் கூட உழத்தியின் கண் வந்து மயக்கி, சிற்றின்ப விழலுக்கு அழைத்துச்சென்று விடுகிறது. குற்றவாளி இறைவனா அல்லது மனிதனா என்ற சந்தேகம் ஏற்படுகிறது நமக்கு. திருமூலருக்குச் கொஞ்சம் கூடச் சந்தேகம் ஏற்படவில்லை. குற்றவாளி மனிதன்தான் என்று நிச்சயத்தோடு தீர்ப்புச் சொல்லுகிறார்.

சிறு நெறிஞ்சில் காட்டுடே ஒற்றடித்தடம் ஒன்று போகிறது. ஒற்றடித்தடத்தைப் படைத்தவன் இறைவன், நெறிஞ்சில் முள்ளைப் படைத்தவனும் இறைவன்தான். மனிதன் நெறியை விடாமல் நிதானமாய்ப் போனால் வீடு அடையலாம். நெறியை விட்டு விலகி, நெருஞ்சில் முள்பாய்ந்து அவதிப்பட்டானேயானால் அதற்கு இறைவனா பழி? இல்லவே இல்லை என்று அழுத்தத் தோடு வருகிறது. திருமூலர் பாடல்.

நெறியைப் படைத்தான், நெறிஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெறிஞ்சில்முள் பாயும்
நெறியில் வழுவாது இயங்கவல் லார்க்கு
நெறியில் நெறிஞ்சில்முள் பாயகி லாவே.

## 3 கம்பனுடன்:-

கம்பன் தமிழ்மொழியின் கவிச்சக்கரவர்த்தி. தமிழ்ப்புலவர் மரபு வள்ளுவனையும் கம்பனையும்தாம் தெய்வப் புலமை வாய்ந்தவர் என்று அறுதியிட்டு உறிதிகூறுகிறது. பன்மொழிப் புலமைசான்றவராகவும் ஒப்பற்ற விமர்சகராகவும் விளங்கியவர் வ. வே. சு. ஐயர். அவர், கம்பன் உலகமகா கவிகளிலே ஒருவன் மட்டுமல்ல. அவர்களில் முதன்மையானவன். ஹோமர், வர்ஜில், தாந்தே, மில்டன், ஷேக்ஸ்பியர் ஆகிய இதரமொழி மேதைகளின் பேரிலக்கியங்களான காப்பியங்களையும் மூலநூலான வால்மீகத் தையும் கம்பன் காப்பியம் சிற்சில துறைகளில் சிற்சில வகைகளில் மிஞ்சுகிறது என்று ஆணித்தரமாக எடுத்துக் காட்டியுள்ளார். மேனாட்டு இலக்கிய விமர்சனக் கலையின் கோட்பாடுகள் மற்றும் கருத்துக்களில் அடிப்படையிலே மேற்கண்ட முடிவை கூறுகிறார்.

அபிநவகவிநாதன், நம்ப பாமாலையாலே நரர்க்கு இன்னமுதம் ஈந்தான் என்றெல்லாம் முன்னாளிலே பாடிய புலவர்களும்சரி; கம்ப நாடனுடன் கவிதை போயிற்று என்று பின்னாள் பாடிய பாரதியும் சரி-கம்பன் காப்பியத்தைச் சுவைத்துக் கிடைத்த அனுபவத்தின் பொதுப்படையான பாராட்டே ஆகும்.

மகாவித்வான் ராகவஐயங்கார், செய்குதம்பிப்பாவலர் குமரேசம்பிள்ளை - இன்ன பிறர் எழுத்தாலும் சொற் பெருக்காலும் கம்பன் பாடல்களிலே கண்ட நயப்பாடுகளையும், கம்பன் கவிதையைப் பற்றிய பொதுப்படையான கருத்துக்களையும் மட்டுமே தமிழ் மக்களுக்கு வழங்கினார்கள்.

வ. வே. சு. ஐயர் போன்று தற்கால விமர்சன முறையிலே கம்பனை அறிந்து பிரசாரத்திலே ஈடுபட்டவர்கள், கே. என். சிவராஜ பிள்ளை, ரா. பி. சேதுப்பிள்ளை, வையாபுரிப்பிள்ளை, அ. சீ. ரா., சா. கணேசன் போன்ற பேராசிரியர்கள். இவர்களிலே தனிரகம் டி. கே. சியும், மகராஜனும். இவர்கள் கம்ப ராமாயணத்திலே ஆழ்ந்து, பாமர பண்டித ரஞ்சகமாகக் கலைச்சுவை கவிதைச் சுவை சொட்டச் சொட்டக் கம்பனைப் பரிமாறினார்கள்.

தமிழ்க் காப்பியங்களிலே தமிழ் மக்கள் நிதம் அனுபவிப்பது, பண்டிதரும் பாமரரும் நிறைய நுகர்ந்திருப்பது கம்பனையே.

கம்பன் கவிதையை இன்னமும் எடுத்து வைத்துப் பாடிப் பாடிச் சுவைத்து மகிழ்கிறோம். தேன்குடித்த நரி மாதிரிச் சொக்கி நிற்கிறோம். கம்பன் நமக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவனே அவன் வாழ்ந்திருந்த சமுதாயம் நமது காலத்தோடு ஒப்புநோக்கும் போது மிகவும் பிற்போக்கானதே; ஆயினும் கம்பனைத் துய்த்தவர்கள் என்ன சொல்லுகிறார்கள். கம்ப நாடன் கவிதையிற் போல, கற்றோர்க்கு இதயம் களியாதே என்கிறார்கள். இவ்வாறு இடத்தையும் காலத்தையும் கடந்து, நம்மை வசீகரிக்கும் அம்சம் கம்பனிடம் என்ன இருக்கிறது? கவிதையாகிய கலை அழகுதான்.

கலையின் வளர்ச்சி Horizontal ஆகவும் Vertical ஆகவும் அமைகிறது. கலை சமமட்டமாக வளர்கிறது என்று சொல்லும் போது, ஒவ்வொரு சமுதாய காலகட்டத்திலும் கலையின் தரம் திட்டவட்டமாக வெவ்வெறு விதமாக உருவாகிறது. கலையின்

உருவமும் உள்ளடக்கமும் தெளிவாக மாறுபாடு அடைந்து அந்தந்த கால முத்திரையுடன் வளர்ந்து முன்னேறி வருகிறது. சங்ககால பல்லவர், சோழர் கால தற்காலக் கலைகளிடையே திட்டவட்டமான வேறுபாடுகளைக் காண முடிகிறது. அதோடு கலையின் உருவமும் உள்ளுறையும் காலத்துக்குக் காலம் மாறி வருவதையும் பார்க்க முடிகிறது.

இதுபோலக் கலையின் செங்குத்தான வளர்ச்சியிலே, காலத்துக்குக் காலம் வேறுபாடும் முன்னேற்றமும் தெரிவதில்லை. செங்குத்தான வளர்ச்சி என்பது கலையின் ஆழம், செழுமை, அழகுணர்ச்சிகளின், நிறைவுகளே. இந்தக் கலை அம்சங்கள், புதிய காலகட்டம், பழைய கால கட்டத்தைவிட உயர்ந்து விளங்க வேண்டும் என்ற நியதி இல்லை. சங்க காலத்தைவிடக் காப்பியக் காலத்திலும் தற்காலத்திலும் பொதுவாகக் கலை முன்னேறி வளர்ந்திருக்கிறது. ஆனால் வள்ளுவனைவிட, இளங்கோவைவிடக் கம்பனைவிட ஆழம், செழுமை, அழகு, அழகுணர்ச்சியின் நிறைவு ஆகிய அம்சங்களிலே நாம் இன்று முன்னேறியிருக்கிறோம் என்று சொல்ல முடியுமா? முடியாது.

அவர்கள் வாழ்ந்த காலத்தின் பழமையையும் அவர்கள் கொண்ட சிலபல கருத்துக்களின் பழமையையும் முக்கியப்படுத்தி அவர்களை ஏன் உதறி எறிந்துவிட முடியவில்லை. இங்கேதான் கலையின் பெருமையை நாம் பார்க்கிறோம்.

விஞ்ஞானத்தைவிட தத்துவஞானத்தைவிட கலை ஞானம் தான் சர்வரஞ்சகத் தன்மை உடையது. கற்றவர் கல்லாதவர் அனைவர் நெஞ்சையும் அள்ளும் தன்மையுடையது. இளங்கோ, கம்பன், காளிதாசன் ஆகியோர்களின் சமுதாயக் கருத்துக்கள் இன்று நமக்கு உடன்பாடில்லாதிருக்கலாம். ஆனால் இளங்கோவின் கண்ணகி, கம்பனின் சீதை, காளிதாசனின் சகுந்தலை என்றும் அழியாத அமரசித்திரங்கள். நம்மை உணர்ச்சிக்கடலில் அமிழ்த்தி, என்றென்றும் இன்பம் ஊட்டுபவை அல்லவா. இந்தச் சிந்தனை ஓட்டத்தோடு மகராஜனைப் பார்க்லாம் . அவர் சொல்லுகிறார்:

''ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்பு அறாத ஒரு கவிதைமரபு கம்பனுக்கு இருந்தது. தமிழ் இலக்கியத்திலே ஆரம்ப காலக் கவிஞர்களுக்கு இருந்த வசதி கம்பனுக்கு இல்லை. கம்பன்

வருவதற்கு முன்னமே வல்லவர்கள் பலர், தமிழ் மொழியைக் கையாண்டுவிட்டார்கள். அது குழைவாகவும், வேண்டியவாறு வளைந்து கொடுக்கும் நிலைமையிலும் இருந்த பண்டைக் காலத்திலேயே அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமே இருந்த - சங்கப் புலவர்கள், தமிழ் மொழிக்கு ஒரு சொகுசான அடக்கத்தையும், இனிமையான எளிமையையும் நல்கி விட்டார்கள். பின் வந்த வள்ளுவர், தமிழுக்கு ஒரு வளத்தையும், துல்லியத்தையும், செறிவையும் கொடுத்து விட்டார். இதைப்பார்த்த க்ரால் (Graul) வள்ளுவருடைய குறட்பாக்கள் ஒவ்வொன்றும் வெள்ளிப்பூக்குடலையில் வைத்த தங்க மாம்பழம் போன்றது என்று வருணித்தார். ஆழ்வாராதியர் கி. பி. 9ம் நூற்றாண்டு இடைவெளியிலே அந்த அசாதாரணமான ஒரு நெகிழ்வையும், இதயத்துக்குக் கதகதப்பைக் கொடுக்கும் இசைப் பண்பையும் தமிழுக்குக் கொடுத்தார்கள்.

'கம்பன் தமிழகத்தில் தோன்றும் முன்னமேயே, தமிழ் மொழிக்குள் மறைந்துநின்ற ஆற்றல்கள் எல்லாமே முற்றிலும் முன்வந்த கவிஞர்கள் பயன்படுத்திவிட்டார்களோ என்று தோன்றியது. ஆனால் கம்பனுடைய மேதைமையானது இந்த இடையூறுகளால் பங்கப்படாது தமிழ்மொழிக்கு ஒரு புதுக் குரலையும் பேச்சுத் திறனையும் கொடுத்ததோடு கவிதையில் பரிபூரண சுகத்தை எடுத்துக்காட்டிய கருவியாகவும் தமிழை ஆக்கியது.''

அவன் ராமகாதையை எடுத்துக்கொண்டான். அது ஓர் எளிய கதை. பாரதக்கதையைப் போலச் சிக்கல் கொண்ட கதையாக இருந்தால் வாசகர் கவனத்தை எளிதில் அது கவர்ந்திருக்காது. ஆழ்வார்களுடைய பக்திப் பாசுரங்களிலே ராமகதையின் பல நிகழ்ச்சிகளையும் அனுபவித்திருந்தார்கள். இவ்வாறு மக்களுக்குத் தெரிந்த கதையைத் தனது கவிதைக்குப் பொருளாக எடுத்துக் கொள்வதிலே உள்ள வசதி என்ன? மகராஜன் கூறுகிறார் :

'வாசகர்களுக்குக் கதை தெரியும். ஆகையால் தன்னுடைய கவிதையிலே தோய்த்து அந்தக் கதையைச் சொல்லும் போது வாசகர் கவனம் முழுவதையும் கதையிலே இருந்து ஈர்த்துத் தன்னுடைய படைப்பாற்றலிலும், கதைக் கூற்றுத் திறனிலும் நாடகப்பாங்கிலும் உணர்ச்சிப்பாடல்களிலும் அவர்கள் கவனத்தை முழுக்க முழுக்கக் கவர்ந்து விடலாம் என்று கம்பன் அறிந்திருந்தான்.

தன்னுடைய அவையடக்கத்திலே தெய்வமாக் கவியின் மாட்சியைத் தெரிவிப்பதற்காகவே ராமகதையை இயம்புவதாகப் பெருமை யோடு சொல்லுகிறான். இந்த முயற்சியிலே கம்பன் அதிசயிக்கத் தகுந்த வெற்றியைப் பெற்றிருக்கிறான் என்பது நம் நீதிபதியின் தீர்ப்பு.

கம்பனுடைய காவிய வெற்றிக்குக் காரணமாக இருப்பது அவன் என்ன சொல்கிறான் என்பதுகூட அல்ல. அவன் அதை எப்படிச் சொல்கிறான் என்பதே. மகராஜன் சொல்கிறார்:

'அவன் பயன்படுத்தும் சொற்கள் ஒவ்வொன்றும் ஒரு சிந்தனைக் குவியலின் முனையாக உருவெடுத்து, நம் உள்ளத்திலே பாய்ந்து, உணர்ச்சியைப் பண்படுத்துகிறது. சுடர்விட்டெரியும் அவனுடைய ஒளிபொருந்திய காட்சிகளை அவனுடைய சொற்கள் பதிவுசெய்கின்றன. பின்னர், பதிவு செய்ததை மனிதக் குரலின் ஒலி அலைகளாக மாற்றி நம் இதயத்துக்கு உகந்தவாறு ஒலி பரப்புகின்றன.'

கம்பனுடைய கலை வளர்ச்சிக்கு மூல ஊற்றாக இருப்பது எது?

''அவனுடைய எல்லையற்ற பரிவுதான் அது'' என்பார் மகராஜன் : பேரண்டத்திலிருக்கும் பொருள்கள், உயிர் உள்ளன வானாலும் சரி, உயிர் அற்றனவானாலும் சரி, ஒவ்வொன்றிலுமே அந்தரங்கப் பரிவும் ஈடுபாடும் அவனுக்கு இருக்கிறது. மண்ணுலுக வாழ்க்கை என்பது, எல்லையற்ற ஓர் இதிகாசத்திலே இடைச் செருகலாக வந்த ஒரு துக்கடாப் படலம் என்று கம்பன் உணருகிறான்.

'மண்ணுலக வாழ்விலே நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு மூல, காரணத்தை நம் பிறவிக்கு முன்னுள்ள வாழ்வில் போய்த் தேட வேண்டும். மண்ணுலக வாழ்விலே நாம் செய்யும் செயல்களின் விளைவுகள், நம்முடைய மரணத்துக்குப் பின்னுள்ள மறுமை வாழ்விலே தெரியக் கூடியவை என்பதை உணர்ந்தவன் கம்பன். ஆகவேதான் கம்பன் வாழ்க்கையை மேலும் மேலும் ஆழமாகத் தோண்டிக் கொண்டே செல்லுகிறான்.

'இறந்த காலம் எதிர்காலத்தைப் போலவே எல்லை யற்று நிற்பது. மனித ஆன்மா காலத்தை எதிர்த்தும் கடந்தும் நிற்கும் நிரந்தர தத்துவம் என்பதை உணர்ந்தே கம்பன் வாழ்க்கையை ஆழ்ந்து அகழ்கிறான். இப்படிச் செய்வதன் மூலம் குழப்பம் நிறைந்தது போன்ற வாழ்க்கையில் உள்ள பலதிறப்பட்ட காட்சிகளைக் கண்கொட்டாமல் கூர்ந்து கவனித்து, இணையாமல் நிற்பது போன்ற வாழ்க்கையின் பல பாகங்களையும் இணைத்து எல்லாவற்றையும் ஒன்றாகக் காணும் காட்சி கம்பனுக்குக் கிட்டியது. இந்த ஞானக் காட்சியினால் கம்பனுக்கு எல்லையற்ற நம்பிக்கையும் ஆர்வமும் பிறக்கின்றன. இதன் விளைவாக கம்பனுக்கு ஏற்படும் உறுதிப்பாடு அசைக்க முடியாதது. ப்ளேட்டோவைப்பற்றி எமர்ஸன் சொன்னது போலச் சூரிய மண்டலத்திலே இருந்துகொண்டு கம்பன், சத்தியத்தைப் பார்ப்பதால், ஐயப்பாடு என்று பேதத்தால் சற்றும் களங்கப்படாத காட்சியாக இருக்கிறது அவனுடைய காட்சி.

'இப்படியெல்லாம் சொல்லுவதால் கம்பன் ஏதோ தத்துவக் குப்பையைக் கிளறிகொண்டிருக்கும் அறிவியல் கவிஞன் என்றோ, சமயச்சரக்கைக் சில்லறைக்கு விற்பனை செய்யும் தெருவணிகன் என்றோ கருதிவிடக்கூடாது. மனித வாழ்விலே ஊன்றி நிற்கிறது கம்பனுடைய உணர்வின் ஆணிவேர். மனித பாத்திரங்களும் அவற்றின் சூழ்நிலையுமே அவனுடைய காவியத்தின் தலையாய பொருள். வாழ்க்கையும் இயற்கையுமே அவனுடைய காவியத்திற்கு ஊடும் பாவுமாக அமைந்தவை.

ஈரம் அற்ற பாலைவனத்தை வருணிக்கிறான் கம்பன். அதற்கு அப்பாவி யோகிகளைப் பார்த்து அவன் கண்ணடிப்பது நமக்குத் தெரிகிறது. பாலைவனத்திலே ஈரப்பசையே இல்லையாம். அது எப்படி இருக்கிறது, இரண்டு விதமான ஆசாமிகளை ஒத்திருக்கிறதாம். அது காமம் வெகுளிமயக்கம் முதலியவற்றைத் தாண்டி முத்திக்கு வேகமாகப் போகும் யோகியர் மனசு எப்படிப் பசையற்றிருக்குமோ அப்படி இருந்ததாம் பாலைவனம். இதோடு விட்டு விட்டுப் போயிருக்கலாம் யோகிகளை. ஆனால் விடவில்லை. பொன் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் தம் நேசத்தை நீட்டும் விலை மாதரின் மனத்தைப்போலும் பசை அற்றிருந்ததாம்

பாலைவனம்.✳ இந்த இரட்டை உவமை கம்பனுக்கு யோகியர் பால் இருந்த நகைச்சுவை கலந்த எரிச்சலைக் காட்டுவதோடு வேறொரு கவிஞனுடைய கற்பனைக்கு எட்டாத முற்றும் வேறு பட்டது போல் தோன்றும் யோகியர் - வேசியர் உள்ளங்களுக்கு இடையே ஊசலாடும் அந்தரங்க ஒற்றுமையை நாம் திடுக்கிடும்படி எடுத்துக் காட்டுகிறது அல்லவா?

'கம்பன் எதைச் சொன்னாலும் சரி, அதை வாசகர்கள் பக்தியோடும் மதிப்போடும் மிக முக்கியமான செய்தியைக் கேட்கின்றோம் என்ற உணர்வோடும் கேட்கும்படி செய்துவிடுவான்.

'வாசகர்களைத் தன் ராமாயணம் எனும் புனிதச் சுனையிலே மீண்டும் மீண்டும் நீராடச் செய்கிறான். அவ்வாறு நீராடிவிட்டு அவர்கள் வெளிவரும் ஒவ்வொரு தடவையும் முன்னிருந்த லட்சிய ஆர்வத்தைக் காட்டிலும் அதிக ஆர்வத்தோடும் அறத்தைப் பாது காப்பதிலே முன்னிருந்த ஆத்திரத்தைக் காட்டிலும் அதிக ஆத்திரத் தோடும்,

'சத்தியம் சௌந்தர்யம் உத்தமம் ஆகிய மூன்றிலும் முன் னிருந்த பக்தியைக் காட்டிலும் அதிக பக்தியோடும், அடிப்படைக் கோள்களைக் கேட்பதிலே முன்னிருந்த துணிச்சலைக் காட்டிலும் அதிக துணிச்சலோடும், அடிப்படைக் கேள்விகளுக்குப் பதில் சொல்லு வதிலே முன் இருந்ததைக் காட்டிலும் அதிக தன்னம்பிக்கையோடும் வாசகர்கள் வெளி வருகிறார்கள்.

'இவ்வளவும் அவன் செய்து முடிப்பது கவிதை என்ற வரப்பிரசாதத்தால். அவனுடைய தாளம் அல்லது 'ரிதம்' விதவித மானது. உணர்ச்சிக்கு உரியது, நிறைவை நல்க வல்லது. உயிர் எழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் அவன் சதுரப்பாட் டோடும் மந்திரக்கோல் கொண்டும் தொட்ட மாத்திரத்திலே அவற்றின் ஒலிகள், மனித உணர்ச்சிகளின் நுண்ணுருவத்தையே எடுத்துக்காட்டி விடுகின்றன.

---

✳தாவரும் இருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகைஅரண் கடந்து முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போல் பசையும் அற்றதே'

கம். தாடகை-15

'சொல்லொலிகளைத் தெளித்தும் தூவியும் பொழிந்தும் வாசகர்களுடைய அமைதியற்ற மனசை அமைதியுறச் செய்து தியான நிலையிலே நிறுத்தி கவிஞன் சொல்லும் செய்தியை அப்படி அப்படியே ஏற்றுக் கொள்ளச் செய்கிறான்.

'இவ்வாறு கம்பன் விளையாடுகிற விளையாட்டு அனாயச மாகவும் இயல்பாகவும் அமைந்திருக்கிறது.

'பிரபஞ்சப்படைபின் ரகசியங்களைப் பற்றிப்பேசும்போதும் சரி, வாழ்வின் அந்தரங்கக் காட்சிகளை ஒரு மின்னல் வெட்டின் ஒலியிலே காட்டும் போதும்சரி கம்பனுடைய கவிநாதம் தியான நிலையிலே நம்மை நீடித்து நிறுத்திவிடுகிறது. கம்பன் கவிதை என்ற தென்றல் நம் இதயத்துள் புகுந்து அந்தராத்மாவுக்குக் குளுமையையும் களிப்பையும் ஊட்டுகிறது. இதனால் கவிதாமண்ட லத்தின் சக்கரவர்த்தி, கம்பன் என்று முடிசூட்டுவது முற்றிலும் பொருந்துகிறது'.

அவர் சொல்லுவார் :

'ஷேக்ஸ்பியரைப் படிக்கப்படிக்க வியப்பும் விம்மிதமும் ஓங்கி வளர்கின்றன, ஒரு தனிமனிதனிடத்திலே இவ்வளவு அறிவுப் பெருக்கும் உணர்வு வளமும் ஞானச் செல்வமும் செஞ்சொற் கவித் திறனும் ஒருங்கே காணமுடிகிறதே என்ற வியப்பும் இவ்வாறு, ஆழ்ந்து அகன்று ஓங்கி உயர்ந்த ஆற்றல் கேவலம் நம்மைப் போன்ற ஒரு மனிதனிடத்திலே செய்யப்பட்டிருக்கிறதே என்று உணரும்போது நமக்கு விம்மிதமும் ஏற்படுகின்றன'.

மனித வாழ்க்கை எல்லையற்றது போலப் பரந்து விரிந்து கிடக்கிறது. மனிதவாழ்விலே உள்ள எண்ணற்றகாட்சிகள் மனிதச் செயலுக்கு அடிப்படையாக இருக்கும் உந்து சக்திகள் சுழி எறிந்து ஓடும் உணர்ச்சி வெள்ளங்கள், அவற்றைச் சாடித் தாக்கும் எதிர் வெள்ளங்கள், விதியின் கம்பீர நடை வாழ்வுக்கும் சாவுக்கும் இடை யிலே இருக்கும் முரண்பாடு மனித இன்ப துன்பங்களுக்கு இடையே இருக்கும் பொருந்தாமை, காலத்துக்கும் "இடத்துக்கும் கட்டுப்பட்ட புன்மை காலமும் கணக்கும் நீத்த பெருமை'' ... இன்னோரன்ன தத்துவங்களை எளிமையாகவும் ஆழமாகவும் விளக்கியிருக்கும் அருமைப்பாடு அதிசயமானதே.

அவருடைய நாடகங்கள் மனித உள்ளத்திலே உறங்கிக் கொண்டிருக்கும் நற்குணங்களை எழுப்பி, அவைகளுக்குப் புதிய முனைப்பையும் வன்மையையும் கொடுக்கின்றன. இழிகுணங்களை அழித்து உள்ளத்தைப் புனிதப்படுத்துகின்றன. கேவலம், காரண காரியங்களால் கட்டுண்டு உழலும் மனித உள்ளத்தைக் கட்டறுத்து அழகும் உண்மையும் உணர்வும் ததும்பும் ஒரு தனி உலகத்திலே கொண்டுபோய் நிலைநிறுத்திவிடுகிறது அவருடைய கலை. ஷேக்ஸ்பியரின் படைப்பைக் கவிதை நாடகம் என்பர். நாடகக் கதைகளிலே பற்பல நிலைகளைப் பாத்திரங்கள் மோதுதல் மூலம் உருவாக்கி அவற்றிலிருந்து எழும் பல்வேறு மனித அனுபவங் களின் மனவிசித்திரங்களை விசுபரூபக் காட்சியாகப் படைத்திருக் கிறார். • இவருடைய கற்பனையைப் போலவே சொல்வளமும் ஆழ்ந்தது அகன்றது நுண்ணியது.

ஒரே தொடருக்குப் பல பொருள்களும் தொனியும் தோன்று கின்றன. பல்வேறு காரணங்களால் மூலப்பிரதிகளிலே முளைத்த சிதைவுகளாய் அவர் கருதிய சொற்கள் எவை என்று காண முடியாத மூடங்களாய் பல இடங்கள் அவன் நாடகங்களிலே இருக் கின்றன. ஆகவே பாடபேதங்களும் தெளிவில்லாத நிலைகளிலே ஊகங்களும் மலிந்து கிடக்கின்றன. இத்தனைக்கும் மேலாக, அவன் காலத்து வாழ்க்கை நிலைகளும் வரலாற்றுச் செய்திகளும் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் நாடகங்களிலே அங்கங்கே தெரிவிக்கும் காரணத்தால் அவற்றை உரைகளும் விளக்கங்களும் இன்றிப் புரிந்து கொள்வது ஆங்கிலேயனுக்கே சாத்தியமில்லை என்பவர் அ. சீ. ராகவன். இந்நிலையில் எங்கேயோ தொலை தூரத்துத்துக்கப்பால் வேறு தனி மொழிமரபும் தனிப்பண்பாடும் கொண்ட மகராஜன், ஷேக்ஸ்பியரின் பெருமிதகவி வீச்சை உணர்ந்து தன்னை இழந்த நிலையிலே தலைசிறந்த சோக நாடகங்கள் மூன்றை இன்றைய தமிழிலே தந்திருப்பது அசுர சாதனைதான்.

மொழிபெயர்ப்பின் மூலமாக ஷேக்ஸ்பியரோடு எப்படி அவர் உறவாடியிருக்கிறார் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

'மாக்பெத் என்பவன் ஸ்காட்லாந்து நாட்டு அரசனான டங்கன் என்பனுடைய தளபதி. விருந்தாளியாகத் தன்னுடன் தங்கியிருக்கும் அரசன் டங்கனைக் கொலை செய்யும் கொடிய எண்ணம், மாக்பெத்தின் பேராசையில் முளைக்கிறது. டங்கனுடைய சாவினால், அவன் சாவினால் மட்டும் அப்பதவி தனக்குக் கிட்டிவிடுமா? ஒரு கொலையினால் தன் ஆசை நிறைவேறி எல்லாம் முடிந்து விடுமா? முடிந்துவிடும் என்றால் பாவபுண்ணியத்தைப் பற்றிய எண்ணத்தையும் மறுமையைப் பற்றிய கவலையையும் தூக்கி வீசிவிடலாம். ஆனால் டங்கன் எவ்வளவு நல்லவன். அவனைக் கொல்வதா இப்படியெல்லாம் நெஞ்சு உடைய மாக்பெத் பேசுகிறான். நம்முடைய திமிழில்.

'டங்கன் செய்திருக்கும் அறச்செயல்கள், கந்தர்வர்களைப் போல எழுந்து நின்று,

கொம்பு அதிர்வது போன்ற குரலில் அவருக்காகப் பரிந்து பேசி அவரைக் கொலை செய்த மாபாதகத்தை வன்மையோடு கண்டிக்கும். புதிதாகப் பிறந்த குழவி, காற்றிலே அம்மணமாகப் பறப்பது போலவும், அல்லது ஒரு சின்னக்குழந்தை கண்ணுக்கு புலப்படாத காற்றின் முதுகிலே குதிரைச் சவாரி செய்து விரைவது போலவும், இரக்கம் என்ற தத்துவம் பரந்து சென்று இக் கொடிய செயலைக் கண்கள் தோறும் வீசி உறுத்துமே-அதனால் கண்களில் நீர் பெறுகிக் காற்றையே மூழ்கடித்து விடுமே. என் கருத்து என்ற குதிரையின் விலாவிலே குத்தி முடுக்குவதற்கு என்னிடம் வேறொரு முள்ளும் இல்லை. ஓங்கிப்பறக்கும் என் பேராசையைத் தவிர.

அந்தப் பேராசையோ தன்னைமீறித் தாவுகிறது: தாவி வேண்டாத பக்கத்திலே போய்ச் சாடுகிறது. இவ்வாறு மாக்பெத் மயங்குகிறான். கொலை நடந்தவுடன்.

'கொஞ்சம் தண்ணீர் போதும், இந்தக் செயலைக்கழுவ என்று கணவனுக்குத் தைரியம் கூறும் அவன் மனைவியான மாக்பெர் சீமாட்டி,. சில நாட்கள் கழிந்ததும் பாவம் நெஞ்சை உறுத்தி உறுத்திச் சிந்தனை சிதற அடித்துவிட்ட நிலையில் தூக்கத்திலே எழுந்து உணர்வற்ற நிலையில், தன் கையைக் கழுவதுபோல திரும்பத்திரும்பக் கழுவுவது போல நடந்து கொள்கிறாள், பேசுகிறாள்.

தொலைஞ்சுபோ கேடுகெட்ட கறையே தொலைஞ்சுபோ என்கிறேன்.

இந்தக்கிழவனுக்கு இவ்வளவு இரத்தம் இருக்கும் என்று யார் எதிர்பார்ப்பார்கள் - குருதியின் நாற்றம் இங்கு இன்னும் அடிக்கிறது.

அரேபியா நாட்டிலே உள்ள வாசனைத் திரவியங்கள் எல்லாம் சேர்ந்தாலும் கூட,

இந்த சிறுமைக்கு மணம் ஊட்ட முடியாது, ஓ! ஓ! ஓ!

இப்படித் தமிழ்மொழி பெயர்ப்பும் ஆங்கில மூலத்தின் பெருமிதக் கவிதை வீச்சைத் தொடுவதை நாடக நூல் நெடுகிலும் காணலாம்.

மாக்பெத் என்பது பாவத்தின் பயங்கரத்தைச் சித்தரிக்கும் அவல நாடகம். போர்வீரமும் நாணயமும் உடைய தளபதி ஒருவன், அரசபதவியிலே ஆசைகொண்டு தீயசக்திகளுக்கு வசமாகி கொலைபுரியத் துணிந்து கடைசியில் வதங்கிப் பழுப்பாகி உதிர்ந்து போகிறான், இதுவே நாடகக்கதை.

மனித உள்ளத்தின் அடியிலே சிறு சுழலாகக் கிளம்பி, பிறகு பெரும்புயலாகக் கொந்தளிக்கும் நரகத்தை ஷேக்ஸ்பியருடைய தமிழ்க்கவிதை நம்முடைய அனுபவ எல்லைக்குள் கொணர்கிறது. பழங்காலத்து ஸ்காட்லாண்டுக்குப் போகிறோம். அங்கே உயிர் பெற்றுக் கண்முன்னே உலாவும் பாத்திரங்களோடு உறவாடு கிறோம். மனித உள்ளத்தின் பல விதவிதமான சுருதிகளை நாமே பயில்கிறோம். அதன் பெருமையைச் சிறிது காண்கிறோம். அதன் சிறுமை படைக்கும் நரக பாதாளத்தின் பேய் வாயில் தவிக்கிறோம். அடி ஆழத்திலே விழுகிறோம். பிறகு பக்குவம் என்ற மனத்தோடு தினசரி வாழ்க்கைக்குத் திரும்புகிறோம். உலக மகாகவிஞனோடு கரவின்றி உறவாடும் கவிதைப் பயனைத் தந்தவர் மகராஜன் அல்லவா? நமது நன்றி அவருக்கு உரியதாகட்டும்.

## கம்பன் - மொழி பெயர்ப்பு:-

தமிழ்நாட்டிலே அங்கங்கே கம்பன் விழாக்கள் நடைபெறு கின்றன. அவனைக்கேட்டு அனுபவிப்பதற்காகவே ஆயிரக்கணக் கிலே மக்கள் கூடுகிறார்கள். ஆண்டுதோறும் கூடுகிறார்கள்.

அவன் வாழ்ந்திருந்ததோ கி. பி. 9ம் நூற்றாண்டில். ஆயிரத்து நூறு ஆண்டுகளாகவே அவன் நம் உள்ளத்தையும் உணர்வையும் ஆட்கொண்டுவருகிறான். இதற்குக் காரணம் என்ன?

காலங்கடந்து நிற்கும் நிரந்தரத் தத்துவங்களுக்கு நிரந்தர தூலவடிவைக் கொடுத்துவிட்டான் அவன். அழகு, சத்தியம், அறம் கருணை, அன்பு, தியாகம் முதலிய தத்துவங்களை ஆனந்தத் தேனிலே ஊறப்போட்டு, பக்திச்சுவையிலே தோய்த்து, மாயத் தமிழிலே நமக்கு ஊட்டிவருகிறான். மனிதச்சாதி உள்ளளவும் இந்த அடிப்படைப் பிரச்சினைகள் மனித கவனத்தை ஈர்த்துக் கொண்டே இருக்கும். காலக்கணக்கில் கடைசி மூச்சுவரையில் கம்பன் கவிதை உயிர்த்து நிற்கும். நிலைத்து நிற்கும்.

கம்பன் தரும் செய்தி தமிழ்நாட்டுக்கும் தமிழனுக்கும் மாத்திரம் அல்ல. உலகனைத்தும் கேட்டுப் பயனுறவேண்டிய செய்தி. என்றென்றும் நாட்படாத செய்தி மனிதவர்க்கத்தை உய்விக்கவந்த செய்தி. அப்படியிருந்தும், உலக அரங்கிலே கம்ப னுக்குரிய இடம் இன்னமும் கிடைக்கவில்லை. உலக இலக்கிய மேதைகளை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்யும் புலவர்கள் காதிலே கம்பனுடைய குரல் விழவில்லை. அவர்கள் ஹோமரைப் பற்றியும் பேசுவார்கள். வர்ஜில் டாண்டே, மில்டன், ஷேக்ஸ்பியர் பற்றிப் பேசுவார்கள். ஏன் வேளாவேளைகளில் வால்மீகி, வியாசர் காளிதாசனைப் பற்றிக்கூடப் பேசுவார்கள். ஆனால் கம்பனைப் பற்றி, அவர்கள் கேட்டதும் இல்லை. பேசுவதும் இல்லை என்று வருந்துகிறார் மகராஜன். காரணம் என்ன?ஒரு ஆங்கிலேயர் அவ ருக்கு விளக்கினார். ஜான் ஸ்பியர்ஸ் John Spiers என்பது அவர் பெயர்.Valks என்ற பத்திரிகையின் ஆசிரியர். தமிழ்ப் பண்பாட்டை யும் தமிழ்க் கவிதையின் மேன்மையையும் சித்தர்கள் ஆழ்வாரிட மிருந்து உன்னத ஞான அனுபவத்தைப்பற்றிக் கசடறக் கற்றவர். புதுவையிலே அவர் மகராஜனைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந் தபோது, அவர் சொன்னார், 'தமிழர்கள் முழுச்சோம்பேறிகள். சென்ற 150 ஆண்டுகளாக ஆங்கிலத்தைக் கற்றுவந்திருக்கிறீர்களே யாராவது உங்கள் இலக்கியத்தையெல்லாம் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு போன்ற உலகப்பொது மொழியிலே மொழிபெயர்த் திருக்கிறீர்களா? என்று கேட்டார்.

இந்தச் சவாலை ஏற்றுக்கொண்ட மகராஜன் ரசிகமணி தந்த கம்பனை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்தார். தமிழ் ஆங்கில

மொழி மரபுகளை நன்றாக அறிந்தவர். கம்பனுடைய கவியிலே தன்னைக் கரைத்துத் தன்னை அறவே அழித்துக்கொண்டவர்· சுமார் 40 நாடுகளிலே வாசகர்களைக் கொண்டதும் புதுவை அரவிந்தர் ஆசிரமப் பத்திரிகையுமான மதர் இந்தியாவில் 1972-73 இரண்டாண்டுகளுக்கு மேலாகக் கட்டுரை கவிதை மொழி பெயர்ப்பை வெளியிட்டு வந்தார். மூலத்தோடு அதை ஒப்புநோக்கும் போது, கம்பனுடைய நிழலின் நிழல் என்றுகூட அதை அவர் ஒப்பவில்லை. ஆனால் மேல்நாட்டு இலக்கிய அறிஞர்கள் சிலர், அம்மொழிப்பெயர்ப்பையும் ஒரு சாளரமாகக் கொண்டு, அதன் வழியாக எட்டிப்பார்த்து, மூலத்தின் எல்லை யற்ற பெருமையை யூகித்து அறிந்து கொள்கிறார்.

அலெக்ஸ் (Alex) என்ற Canadian ஆங்கிலப் பேராசிரியர் சொன்னார். I see waves and waves of beauty emaneting from Kamban, There is no comparable poet in English literature. அலை அலையாக அல்லவா அழகு புறப்பட்டு வருகிறது கம்பனிடமிருந்து அவனை ஒத்த ஆங்கிலக் கவி ஒருவனையும் நான் கண்டதில்லை.

க்ரிஷி ஜோஷி (Krishrit Joshi) என்ற ஒரு குஜராத்தி ஐ· ஏ. எஸ் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு அரவிந்தர் கல்லூரியிலே முதல்வராய் இருக்கிறார். அவர் சொன்னார்.

'நான் வால்மீகியை அட்சரம் எண்ணிப் படித்தவன். அவரிடத்திலே பக்தி நிறைந்தவன். அவருடைய பெருமை அள விடமுடியாது. ஆனால் அவரிடம் இல்லாத பெருமை கம்பனிடம் இருக்கிறது. He is birth vivid and intimate, ராமாயண நிகழ்ச்சிகளைக் கம்பன் எடுத்துச் சொல்லும் நமது கட்புலனுக்கு முன்னம் அவை நிகழ்வதுபோல எனக்குத் தோன்றுகிறது. அதோடு கம்பன் என் இதயத்தோடு இதயம் வைத்து நெருங்கிப் பேசுகிறான்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்தார் ஒரு பார்ஸி கே. டி. ஸெத்னா (K. D. Sethna). அவருக்குத் தமிழே தெரியாது. ஆங்கிலமே அவர் தாய்மொழி. ஆங்கிலத்திலே வல்லகவி என்று அரவிந்தரால் பாராட்டப் பெற்றவர். அவர் சொன்னார் 'Kambans's vivid.......... is due to his dramatic quality and his intimacy is due to his byrical quality. ராமாயணத்தைக் காட்சி வடிவத்தில் கம்பன் காட்ட முடிகிற தென்றால் நாடகப்

பாங்குதான் அதற்குக் காரணம். அவன் நம் இதயத்தோடு நெருங்கிய கவியாய் இருப்பதற்குக் காரணம்,உணர்ச்சி பூரிப்பில் வருகின்றன அவன் பாடல்கள்.

1973 ஜனவரியோ பிப்ரவரியோ டாக்டர் ராட்டின் என்ற பெண்மணி அவர் வீட்டுக்கு வந்திருந்தார். பெங்களூர் பல்கலைக் கழகத்திலே தாய் (Thai) என்ற மொழியைக் கற்பிக்கும் பேராசிரியர் ஆகிய அவர் பாரிஸில் 5 ஆண்டு பயின்று, பிரஞ்சு (French) இலக்கியத்திலே டாக்டர் பட்டம் பெற்றவர். கலிபோர்னியா (California) பல்கலைக்கழகத்திலே 3 ஆண்டுகள் ஆங்கில இலக்கியம் படித்து, டாக்டர் பட்டம் பெற்றவர். இலண்டனிலே சில ஆண்டுகள் தங்கி, இசை, நாட்டியம் இரண்டிலும் பட்டம் பெற்றவர். தாய்லாந்தைச் சேர்ந்தவர் அவர்.

'ராமாயணம் எங்கள் தேசீய இதிகாசம். எங்கள் நாட்டு மக்கள் அதைப் பெரிதும் போற்றுகிறார்கள். வால்மீகி ராமாயணத்தை நன்றாகப் படித்தவள் நான். உங்கள் கம்ப ராமாயண ஆங்கில மொழி பெயர்ப்பைப் படித்தேன். சாகித்ய அகடெமி செயலாளர் Dr. Machive அதை எனக்குப் பரிசாகத் தந்தார். அதைப் படித்தபிறகு என் உள்ளம் எல்லாம் உருகி விட்டது. கம்பனைப்போல கவிஞன் உலகத்திலேயே இல்லை. ஒரே உணர்ச்சி மயமான கவிஞன் அவன். உங்கள் ஆங்கில ராமாயணத்தைத் தாய்மொழியிலே நான் மொழிபெயர்க்க, விரும்புகிறேன். அந்த கௌரவத்தை எனக்குக் கொடுப்பீர்களா? என்று கேட்டார்.

அதற்கு மகராஜன்

'உங்கள் மொழிபெயர்ப்பால் தமிழர்க்குச் சிறப்பு ஏற்படப் போகிறது. கட்டாயம் அந்தப் பணியைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

அந்த அம்மாள், கம்ப நாடகத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் தான் அனுபவித்த விதத்தைச் சொல்லிவந்த போது, மகராஜன் குறுக்கிட்டு, தமிழ்ரத்தம் உங்கள் உடலுக்குள் ஓடிக்கொண்டிருக்குறது. இல்லாவிட்டால் கம்பனை இப்படிக் அனுபவிக்க முடியுமா' என்றார். இருக்கலாம் என்று பெருமை யோடு சொன்னார் அவர்.

இதைப் போலவே Edvard Lveders என்ற அமெரிக்கக் கவிஞரும் மகராஜனுடைய மொழி பெயர்ப்பிலே கம்பனைப் படித்துவிட்டு, அபாரமாக அனுபவித்து ஆனந்தக் கூத்தே ஆடி

விட்டார். மற்ற உலக மகாகவிகளிலும் நீங்கள் காணாத பண்பு ஏதாவது கம்பனிடம் இருக்கிறதா என்று அவரிடம் மகராஜன் கேட்டார். அவர் சொன்னார்.

'Kamban achieves what all the world's great poetry attempts to achieve a marriage of the divine and timeless with the earthly and experimential'

அதாவது, காலங்கடந்து நிற்கிற தெய்வீகத் தத்துவங்களை மண்ணுலக அனுபவத்தோடு இணைத்து, இரண்டுக்கும் ஒரு திருமணம் செய்து விடுகிறான் கம்பன். உலகத்திலே உள்ள மா பெரும் கவிஞர்கள் எல்லாம், இப்படி ஒரு திருமணம் செய்து வைப்பதற்கு முயன்றிருக்கிறார்கள். ஆனால் கம்பன் இந்த முயற்சியிலே வெற்றிகண்டுவிட்டான். மேலும் அவர் சொன்னார்.

The Characteristic reach of the poet Kamban fo cosmic personification in his poetry cleanly ties high and abstract matters to very human detail.

அதாவது பேரண்டத்திலே உள்ள அரிய தத்துவங்களுக்கும் உருவநிலையிலே உள்ள மனித வாழ்வுக்கும் எப்படியோ அவன் முடிச்சுப் போட்டு விடுகிறான்.

தமிழர்கள் கம்பனை 1100 ஆண்டுகளாகப் படித்து வருகிறார்கள். ஒரு தமிழனாவது Edward Leudes போல இந்த உண்மையை இவ்வளவு நுட்பமாகக் கண்டு சொன்னதில்லை.

## ஷேக்ஸ்பியர் மொழி பெயர்ப்பு:

மொழி பெயர்க்கும்போது எத்தனையோ கடினமான பிரச்சனைகளையும் படுகுழியிலே விழாமலும் சமாளித்து மொழி பெயர்ப்பைச்செம்மையாக முடித்திருக்கிறார். தமது அனுபவம் மற்றவர்க்கும் பயன் தரலாம் என்று அதை ஒரு கட்டுரையிலே வடித்தும் தந்திருக்கிறார். அவர் சொல்லுகிறார்.

'சொல்லுக்குச்சொல் மொழி பெயர்க்கும்போது, மூலத்தில் உள்ள உயிர்த்தத்துவம் செத்து சுவை உள்ளது சுவை அற்றுப் போகலாம். அதே சமயம் மூலத்தில் உள்ள நயத்தை இறக்குகிறேன் என்று

சொல்லி வரம்பு மீறிச் செல்லவும் கூடாது. மூலத்துக்கு உண்மையாக இருக்க வேண்டுமே அன்றி, அதன் தழுவலாகவோ கலப்படமாகவோ மாறிவிடக்கூடாது. காதுக்கு இங்கிதமாகவும், நளினமான நடையிலும் இருக்கும்படி நால்வித கவனத்தோடும் தன் எச்சரிக்கையோடும் மொழிபெயர்ப்பைச்செய்வது இன்றியமையாதது

மூலத்தின் பொது பாவத்தைச் செம்மையாகக் கொணர்வதற்காக அதன் சிலசொற்களைத் தமிழாக்கம் செய்யாமல் தவிர்க்க வேண்டியிருக்கும் இதைத்தெளிவுபடுத்த,லீயர் நாடகம் 2வது அங்க 2வது காட்சியில் இடம்பெறும் கடுமையான வசவு வாசகத்தைக் காட்டலாம்.

சொற்கள் வெறும் அடையாளங்களே. அவை ஒரு நாட்டு மக்களுடைய பண்பாடு பேச்சுமுறை மரபு முதலியவற்றால் உருவாக்கப்படுகின்றன. குணத்திலும் பாங்கிலும் முற்றிலும் வேறுபட்டு இருவேறு பண்பாடுகளின் பிரதிநிதியாக இருக்கும் ஆங்கிலம் தமிழ் இவற்றின் வேறுபட்ட தன்மையை எப்போதும் நினைவிலே வைத்துக்கொண்டு எடுத்துச் சொல்லும் முறையிலும் கவனமாய் இருந்தால்தான் மொழிபெயர்ப்பு இயல்பானதாய் இருக்கும்.

சமயம், பண்பாடு சம்பந்தமான சொற்கள், சிலேடைகள் ஆங்கிலர்க்கே உரியசில உணவு, உடை, தாபனமுறைகள் அந் நாட்டுக்கே உரிய புல் பூண்டுகள், பறவைகள் மிருகங்கள் முதலியன மொழிபெயர்ப்பை மீறி நிற்பவை.

ஷேக்ஸ்பியர், நீண்ட வாக்கியங்களையும் சொல் தொடர்களையும் தொகுத்தும் பிணைத்தும் விசித்திரமான குறளிவேலை செய்கிறார். இதனால் வாக்கியங்களின் பொருள் தெளிவு சிறிதும் பாதிக்கப்படுவதில்லை.

நீண்டு வளைந்த வாக்கியங்களிலே உள்ள முண்டு முடிச்சுகளையும் திருகுமுருகல்களையும் அப்படி அப்படியே மொழிபெயர்த்தால், தமிழாக்கம் திக்குமுக்காடி மூச்சுத் திணறிக்கொண்டு நிற்கும். இத்தகைய சிக்கல் வாக்கியங்களை முறித்துத்தறித்து சிறுசிறு வாக்கியங்களாக்கி, வேறு ஒரு தளத்திலே அவற்றை மாற்றி நிறுத்தி, மூலத்தின் உணர்ச்சிப் பெருக்கைத் தமிழ்ச் சொற்கள் வழியாகப் பாயச்செய்யவேண்டும்.

பிறமொழிச் சொற்களைக் கலப்பதுகூடாது என்று தூய்மை வாதிகள் கருதுகிறார்கள். இந்தக்கருத்துத் தவறானது. பழக்கத் திலே இல்லாத பிறமொழிச் சொல்லை இறக்குமதி செய்வது கூடாது. இதனால் தமிழின் தூய்மை கெட்டுவிடும் என்பதல்ல தமிழர்க்கு அது பொருளற்றவையாயிருக்கும் என்பதனால் (கருத் திலே நாம் முக்கியமாகக் கொள்ள வேண்டியது) இந்தச்சொல் தனித்தமிழா அல்லது பிறமொழிச் சொல்லா என்பது அல்ல. அது கண்ணியமான சொல்லா? கண்ணியமற்ற சொல்லா என்பது அல்ல. அது வழக்கில் இருக்கும் சொல்லா என்பதுகூட அல்ல. உயிர் உள்ள சொல்லா, செத்த சொல்லா மூலநூலின் சுவையையும் மணத்தையும் தரவல்ல சொல்லா இல்லையாஎன்பதே.

கவிதைக்கு இலக்கணம் என்ன? என்ற கேள்விக்கு மொழி பெயர்க்க முடியாத அம்சம் எதுவோ அதுவே கவிதை என்பர். இதையும் அதன் பாவங்கனையும் எப்படி தமிழிலே கொண்டு வருவது கேவலம் இளைச்சுப் போன உரைநடைக்குக் கவிதையின் மாந்திரீக சக்தி கிடையாது. கவிதை வசிக்கும் இடம் செய்யுளின் வடிவத் திலேதான். பாரசீகத்து ரோஜாப்பூவை அம்மிக்கல்லில் வைத்துத் துவையலாக அரைத்துவிட்டால், அதன்சுவை மாறாது. இருந் தாலும் அதற்குமிக முக்கியமாக இருந்த வடிவம் அழிந்துவிடுகிறது மொழிபெயர்ப்பிலே இந்த வடிவத்தைப் பாதுக்காக்கமுடியுமா? ஷேக்ஸ்பியர் என்ற ரோஜாவை அப்படியே தமிழிலே படைப்பது மொழிபெயர்ப்பாளரது முக்கிய நோக்கமாய் இருக்கவேண்டும். தமிழிலே படைக்கப்பட்ட ரோஜாவுக்கு மூலரோஜாவின் அழகும் மணமும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அது ரோஜாப்பூவாக வாவது இருக்கவேண்டும் அல்லவா?

ஷேக்ஸ்பியரைச் செய்யுள் நடையிலே தமிழாக்கம் செய்த வர்கள் எல்லோருமே, மூலத்துக்கு நீதி வழங்கத் தவறிவிட்டனர். அம்மொழிபெயர்ப்புகள் ரத்தமும் புஷ்டியும் அற்ற சோகைபடர்ந்த படைப்புகளாக இருக்கின்றன. எதுகைக்கும் மோனைக்கும் அடிமைப்பட்டுச் செய்யுள் எழும்போது, மூலத்தின் கருத்தை விட்டுவிட்டு வெகுதூரத்தில் விலகி விடுகிறார்கள்.

ஷேக்ஸ்பியரின் நாடகம் அகவல் போன்ற ஒரு நடையில் இயங்குவது. இதை வசன கவிதையில் எளிதிலே மொழிபெயர்க் கலாம். வசன கவிதை என்பது யாப்பிலக்கணத்துக்குக் கட்டுப்

படாததாக இருந்தாலும் மந்தமான ஒரு தாளத்துக்கு உட்பட்டதாயிருக்கவேண்டும். மேலும் அது மூலத்தில் உள்ள பாவங்களைச் சுகமாக எடுத்துச் சொல்லக்கூடிய இசைக் கருவியாக அமைய வேண்டும். சொல் ஒலியையும் ஒலியின் சந்தத்தில் இருக்கும் மோனத்தையும் உயிர் எழுத்துக்கள் மூலமாகவும் மெய்யெழுத்துக்கள் மூலமாகவும் தந்திரமாக எழுப்பி உரிய உணர்ச்சிகளைக் கிளப்பக் கூடியதாய் இருக்கவேண்டும் வசன கவிதை.

ஷேக்ஸ்பியரை மொழிபெயர்ப்பவர்க்கு வேண்டிய முக்கிய தகுதி, அவர் நீண்ட தவம்செய்து தன்னை நன்றாகப் பக்குவப் படுத்தியிருக்கவேண்டும் என்பதே. மகராஜன் ஷேக்ஸ்பியரின் சத் சங்கத்திலே தொடர்ச்சியாக உலாவி வந்தார். அதன் இனிய வாசகங்களிலே முக்கி முழுகி எழுந்திருந்தார். தன்னுடைய ஆணவத்தை முற்றிலும் துடைத்து அழித்துவிட்டு ஷேக்ஸ்பியரின் பாத்திரங்களோடு இரண்டறக் கலந்து அதன் உணர்ச்சிகளிலும் கவி மூச்சிலும் ஒன்றித் திளைத்தார். இந்த அத்வைத நிலையில் அவருடைய உள்மனது, ஷேக்ஸ்பியரின் மேதையின் அகலத்தையும், ஆழத்தையும், வளத்தையும் எடுத்துச் சொல்வதற்குத் தகுதியுள்ள ஒரு கருவியாக அமைந்தது. இதனால் புத்தம் புதிய மந்திரச் சொற்களையும், அவற்றின் மூலம் சாட்சாத் ஷேக்ஸ்பியரைத் தமிழ் மொழியிலே ஆரோகணம் செய்யும் வல்லமையைப் பெற்றார்.

ஆங்கில மொழியில் உள்ள நுணுக்கங்களைப் பிரெஞ்சு மொழியிலும் வங்காளியிலும் எடுத்துச் சொல்வதின் கஷ்டத்தை அரவிந்தர் ஆழ்ந்து யோசனை செய்திருக்கிறார். அவர் சொல்வது:

'நான் அறிந்த வேறெந்த மொழிக்கும் இல்லாத ஒரு சிறப்பியல்பு ஆங்கிலத்துக்கு இருக்கிறது; அதாவது, சொல்லாமல் ஒன்றைச் சொல்லும் திறமை, செறிந்த பொருளைச் சுட்டிக் காட்டும் ஆற்றல், சொல்லினால் வருணிக்க முடியாத ஒரு உலகத்தின் சாளரங்களைத் திறந்து, அவ்வுலகத்தை ஜாடையாகக் காட்டும் ஆற்றல், வங்காள மொழி, பிரெஞ்சு மொழியைப் போலத் தெளிவோடும் உயிர்த்துடிப்போடும் பேசவல்லது. சொல்லுக்கு அடங்காத உண்மைகளைச் சொல்லுவதற்கு இந்தத் தெளிவுள்ள மொழிகள் கஷ்டப்படுகின்றன. அவற்றைச் சுற்றி வளைத்துத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படிச் சொல்லி

விட்டுச் சொல்ல முடியாததைச் சொல்லும் சக்தி பிரஞ்சுக்கும் வங்காளிக்கும் நாளடைவிலே வரலாம் என்று அரவிந்தர் கூறுகிறார்.

மகராஜன் சொல்லுகிறார் :

'தமிழ்மொழி உயிர்த்துடிப்புள்ளதாகவும் உணர்ச்சி உள்ளதாகவும் சொல்வலையிலே பிடிக்கவொண்ணாத உண்மைகளைச் சொல்லினால் எடுத்தியம்பும் ஆற்றலையும் பெற்றிருக்கிறது. சொல்லுக்கும் சொல்லிறந்த சிந்தனைக்கும் இடையிலே ஊசலாடுகின்ற விதம்விதமான ஆண்மாநுபவங்களை எளிதிலே எடுத்தியம்பும் சக்தியை ஆழ்வாராதியர் தமிழுக்கு ஊட்டியிருக்கிறார்கள்.'

நிரந்தரத் தத்துவங்களைச் சிரமப்படாமல் எடுத்துச் சொல்லும் வல்லமை ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழுக்கு அதிகம் இருக்கிறது. சிறந்த ஞானிகள் தங்கள் ஞானானுபவங்களைத் தமிழ் மொழியிலே சொல்லிச் சொல்லி நிரந்தரத்தத்துவங்களை எளிதில் எடுத்து விவரிக்கத் தமிழ் மொழியைப் பழக்கப் படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் தற்கால லௌகீக வாழ்வின் தினசரிச் செய்திகளை ஆங்கிலத்தைப் போலத் தெளிவோடும் நுட்பத்தோடும் தமிழுச்குச் சொல்லத் தெரியவில்லை. அவ்வாறு சொல்லுகிற திறமையைத் தமிழுக்குக் கொடுக்க வேண்டியது நம் கடமை.

ஷேக்ஸ்பியரைத் தமிழாக்குவதன் மூலம் இரட்டைச் சேவையை மகராஜன் செய்திருக்கிறார். முதலாவது மொழி பெயர்ப்பின் மூலம் ஆங்கிலம் தெரியாத தமிழர்கள் ஒரு புதிய உலகத்தின் காட்சிகளையும் கற்பனைகளையும் குறிக் கோள் கோள்களையும் எட்டிப் பார்க்கிறார்கள். இரண்டாவதாக மொழி பெயர்ப்பால் ஷேக்ஸ்பியரை புதுக்குரலோடு தமிழ் பேசச் செய்கிறார். அதனால் தமிழ் மொழிக்கு எப்படிப் புது தரிசனங்கள் கிடைக்கின்றன என்பதையும் நாம் அறிகிறோம்.

ஷேக்ஸ்பியருடைய மூச்சுப்பட்டதன் காரணமாகத் தமிழ் மொழிக்கு ஒரு புதுத்தென்பும் ஆற்றலும் உண்டாகின்றன. இதனால் தமிழ் இலக்கியம் புத்தூட்டம் பெறும்; புதிய வீரியத்தோடு இயங்கும்.

## இயல்பு 4
## மொழிபெயர்ப்பு சட்ட மொழிபெயர்ப்பு

தமிழக அரசு, உயர்நீதிமன்றங்களுக்குக்கீழ் அமைந்துள்ள அனைத்துக் குற்றவழக்கு நீதிமன்றங்களிலும் தமிழே தீர்ப்பு மொழியாக இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. அதன்படி, எல்லா வழக்குகளிலும் செஷன்ஸ் நீதிபதிகள் தமிழிலேயே தீர்ப்பு எழுதிவருகிறார்கள். சட்டக்கல்லூரிகளிலும் சட்டத்தைத் தமிழிலேயே கற்பிக்க தொடங்கிவிட்டார்கள். நீதி மன்றங்களிலே வாதுரைகளையும், வாதப்பிரதிவாதங்களையும் தமிழிலேயே எடுத்துச் சொல்லும் திறமை நம் வழக்குரை ஞர்களுக்கு எளிதிலே கைவரும் என்பது தெளிவு. ஆனால் ஆங்கிலத்தில் உள்ள சட்டங்களையும் தீர்ப்புக்களையும் புரிந்து கொள்ளும் சக்தி, அவர்களுக்குக் குறைந்துவிடும் என்பது இயல்பே. ஆதலின், இன்னும் சில ஆண்டுகளில் எல்லாச் சட்டங்களையும் தீர்ப்புக்களையும் தமிழிலே மொழி பெயர்க்க வேண்டிய நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த மொழி பெயர்ப்பின் பொறுப்பை ஏற்று நடத்தும் ஆணையத்தின் தலைவராக மகராஜன் 1 - 5 - 76ல் பொறுப்பு ஏற்ற மூன்றே மாதங்களில் குற்றவழக்கு நீதிமன்றங்கள் தீர்ப்பு எழுதுதற்கு ஆதாரமான மூன்று அடிப்படைச் சட்டங்களை வெளி யிட்டார்; அவையாவன.

குற்ற விசாரணை குறைச்சட்டம் (Criminal Procedure Code)
இந்திய சாட்சிச் சட்டம் (Indian Evidence Act)
இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code)

இவையே அன்றி 3000 அச்சுப் பக்கங்களைக் கொண்ட ஆங்கிலச் சட்டங்களையும் இந்திய அரசியலமைப்பையும் (Indian Constitution) மொழி பெயர்த்தார். 4620 சொற்களும் சொல் தொடர்களும் கொண்ட சட்டச்சொல் அகராதி ஒன்றையும் தயாரித்தார். கூட்டு முயற்சியிலே மிகுந்த விழிப்போடு தயாரிக்கப்பட்ட இச்சட்டங்கள், பழகு தமிழிலே சாமானியருக்கும் விளங்கக் கூடியவையாக இருப்பது குறிப்பிடத்தகுந்தது. ஆங்கிலம் தமிழ் என்றும் இரு மொழிகளின் பண்பை முற்றும் தெரிந்த புலவர்கள், சட்ட நுணுக்கங்கள் எல்லாம் தெரிந்த நிபுணர்களோடு

கூடிக் கலந்து ஆலோசித்துக் கூட்டுத் தவம் செய்ததின் விளைவே அம்மொழி பெயர்ப்புக்கள். இதிலே தவறு நேர்ந்தால் ஈடு செய்ய முடியாத நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். அதனால் மிகுந்த பயபக்தியோடு அவை மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

தாம் மேற்கொண்ட மொழி பெயர்ப்பை எவ்வாறு செய்து முடித்தார் என்பதை மகராஜன் கீழ்வருமாறு விவரிக்கிறார்.

மூலக்கருத்தை அதன் ஆசிரியர் தமிழிலேயே சொல்லியிருந்தால் தமிழ் வாசகம் எவ்வளவு இயல்பாகவும் ஆற்றொழுக்கத்தோடும் இயங்குமோ அவ்வளவு இயல்பாகவும் ஆற்றொழுக்கோடும் மொழிபெயர்ப்பு இயங்கவேண்டும் என்பது குறிக்கோள். சொல்லை மாத்திரம் எடுத்துக்கொண்டால் அதற்கு நான்கு குணங்கள் இருப்பதைப் பார்க்கலாம். சொல்லின் பொருள், கண்ணுக்குத் தெரியும் அதன் வரிவடிவம், செவிக்குக் கேட்கும் அதன் ஒலிவடிவம், உணர்ச்சியைத் தூண்டும் அதன் ஆற்றல் என்பன அவை ஒரு சொல்லை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கும்போது, தமிழுக்கு உரிய அதன் தனித்தன்மை குலையாமல் பார்க்க வேண்டும். ஆங்கிலச் சொல்லுக்குக் கிட்டத்தட்ட நிகரான தமிழ்ச் சொல்லைப் பொறுக்கி எடுக்கலாம். இதன் ஒலி தூண்டிவிடும் உணர்ச்சி வேறுவிதமாக இருக்கக்கூடாது அல்லவா. எந்த அளவு சொற்களுக்கு முறுக்கு ஏற்ற வேண்டும், அல்லது முறுக்கை எந்த அளவு தளர்த்திவிடவேண்டும், கருத்துப் பாசனத்தை எங்கெங்கே தேக்கி வைக்க வேண்டும், எங்கே மடை திறந்து பாயச் செய்ய வேண்டும், ஒரு நெடிலை அல்லது குறிலை எங்கே செருகினால் வாக்கியத்தின் கருத்து வலியுறும் அல்லது மாறும் என்பதெல்லாம் கற்றுத் தெரியக்கூடிய கலை அன்று. கல்லாத கலை ஆகும். மொழி பெயர்ப்பாளருக்கு உள்ளுணர்வு இருக்குமானால் இந்தக் கல்லாத கலை கைவரும், வெறும் புலமையினால் கிட்டுவது அன்று மூல வாசகத்தின் வைப்பு முறைகளையும் சொல் அமைப்பு முறைகளையும் முற்றிலும் மாற்றி, உரிய ஒலி வடிவத்தையும் வரி வடிவத்தையும் பொருளையும் பயன்படுத்தினால் அன்றி மொழி பெயர்ப்பு மூலக்கருத்தை உண்மையோடு பிரதிபலிக்காது. மேலும், மொழி பெயர்ப்பு, பேசப்படுகிற பழகு தமிழிலே இருக்கவேண்டும் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை.

ஆங்கிலச் சொற்களுக்கு நேரான புதுச்சொற்களை உண்டு பண்ணுவதற்கு முன், இரண்டு விஷயங்களை மொழி பெயர்ப்பு ஆணையம் கருத்திலே கொண்டது.

1. பழைய தமிழ்ச்சொற்கள் பல ஆள்வார் அற்றுத் தூர்ந்து துருப்பிடித்துப் போய்விட்டன. அவற்றுக்குப் புத்துயிர் கொடுத்து நமக்கு இருக்கும் சொல் பஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வது. உதாரணமாக பிங்கல நிகண்டிலே சொல்லுதல் என்ற தலைப்பிலே இயம்பல், விரித்தல், மொழிதல், விளம்பல் என்று இப்படி 22சொற்கள் கொண்ட பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுதல் முறையை 22வகைகளாகப் பிரித்து, ஒவ்வொரு வகைக்கும் ஒரு தனிச் சொல்லை உண்டு பண்ணி, ஒரு வகைக்கும் இன்னொரு வகைக்கும் இடையே உள்ள மயிர் இழை வேற்றுமைச்சொல் நொய்மையையும் நம் முன்னோர் வளர்த்திருக்கிறார்கள். சட்ட மொழி பெயர்ப்பில் புதுச் சொற்களை உண்டாக்கும் முன், நமது சொற்களஞ்சியத்திலே பயன்படுத்தப்படாமல் வறிதே கிடக்கும் பொருள் பொதிந்த சொற்களைத் தேடிப் பிடித்துப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

Assertion என்பதை அறைதல் என்றும்
Declaration என்பதை விளம்பல் என்றும்
Pronouncement என்பதைத் தீர்ப்புப் பகர்தல் என்றும்

மொழி பெயர்த்து, தூர்ந்து போன தமிழ்ச் சொல்லைத் துலக்கி விளக்கமுறச் செய்திருக்கிறார்கள்.

பழைய சொற்கள் கிடைக்காதபோது சாமானிய மக்களிடையே வழக்கில் இருக்கும் சொற்களைத் தீர விசாரித்துத் தேடிச் சேர்த்திருக்கிறார்கள். Cabble of wooden anchor என்ற சொல் தொடருக்கு ஆங்கிலத் தமிழ் அகராதிகளில் மரநங்கூரக் கயிறு என்ற பொருள் காணப்படுகிறது. மீனவர் குப்பத்திலே விசாரித்த போது நங்கூரத்தைப் பிணைக்கும் கயிற்றுக்கு அவர்கள் சீனிக் கயிறு என்ற பெயரிட்டுச் சொல்வது தெரியவந்தது. இந்தப் பெயரையே பயன்படுத்தினார்.

வேறுபோக்கு இல்லை என்ற நிலையிலேதான், புதுச் சொல்லை ஆக்கத்துணிந்திருக்கிறார்கள். அவ்வாறு சொல்லாக்கம் செய்யும் போது தமிழர்களின் காதுக்கும் உள்ளத்துக்கும் இணங்கும் வகையிலும் தமிழ் மரபை ஒட்டியுமே புதுச்சொற்களை உண்டாக்கியிருக்கிறார்கள். உதாரணம் Precedent என்பதற்குச் சரியான தமிழ்ச்சொல் கிடைக்கவில்லை Quotation என்பதை மேற்கோள் என்றும் Interpretation என்பதை. பொருள்கோள்

என்றும் சொல்லும் மரபை ஒட்டி, precedent என்பதை முன்னம் கொள்ளப்பட்டது என்ற கருத்தில் முற்கோள் என்ற புதிய சொல்லை ஆக்கியிருக்கிறார்கள். இது புதிய சொல்லாக இருந்தாலும், குறிக்கோள் என்பதைப் போல வெகுகாலம் பழகி வந்த தமிழ்ச் சொல்லின் ஒலியையும் உருவத்தையும் ஒத்து இருப்பதால் முற்கோள் என்பது பழகு தமிழாகவே தோன்றுகிறது அல்லவா?

Affirm, Confirm, corroborate இம்மூன்றும் ஒரு பொருள் பன்மொழி போலத் தோன்றுகின்றன அல்லவா? இவற்றுக்கு இடையே உள்ள பொருள் வேறுபாடு சன்னமானது. Affirm என்பதை உறுதிசெய் என்றும் Confirm என்பதை உறுதிப்படுத்து Corroborate என்பதை உறுதியூட்டு என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமே. உறுதி என்ற சொல்லின் அடியாகத்தோன்றிய அம்மூன்று சொற்களும் மூலச் சொற்களின் பொருள் வேறுபாட்டை உரியவாறு எடுத்து இயம்புகின்றன.

Having retrospective effect என்ற சொல்தொடரை முன்னுரைஇயங்கும் தன்மையதான என்றும் probabilities and improbabilitles of the case என்ற சொல் தொடரை இந்த வழக்கின் நிகழுறு கூறுகளும் என்றும் பழைய சொற்களைப் புதிய சலவை செய்திருக்கிறார்கள்.

Admirality of Imisdictive என்பதைத் கடலியல் அதிகார வரம்பு என்றும் maratime jurisdction என்பதை நெய்தலியல் அதிகார வரம்பு என்றும் தமிழின் தொன்மையான இலக்கிய மரபைத்தழுவியே மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாகவே சில ஆங்கிலச் சொற்களும் உருதுச் சொற்களும் நீதிமன்றங்களிலே பயன்பட்டு வந்த காரணத்தால் அச்சொற்கள் தனிப்பட்ட கருத்துக்களைக் குறிக்கும் அடையாளமாக அமைந்து விட்டன. செஷன்ஸ், உயில், ஆஜர், ஜாமீன், ஜப்தி முதலிய சொற்கள் தமிழோடு தமிழாய சமபந்தியில் அமர்ந்துவிட்டன. இவை போன்ற சொற்களை ஒதுக்கி விட்டு, அவற்றிற்குத் தூய தமிழ்ச் சொற்களை ஆக்குவது, சட்டத்தோடு பழகும் தமிழர்க்குக் குழப்பத்தை உண்டாக்கும் என்பதால் அத் திசைச்சொற்களையும் பயன் படுத்தியிருக்கிறார்கள்.

நுட்பமான சட்டக் கருத்துக்களைத் திறமையோடு தமிழ் மொழி சொல்லில் சொல்லிப் பழகிவிட்டது என்றால், தமிழருடைய சிந்தனையில் ஒரு புது நுணுக்கம் ஏற்படும். உரைநடைத் தமிழ் ஒரு புதிய ஆற்றலோடும் பொலிவோடும் வளரும். சென்ற சில நூற்றாண்டுகளாகத் தமிழ் மொழி சட்டத்துக்குப் பயன்படாது இருந்துவந்த காரணத்தால் சட்டத் தமிழ் வளராமல் இருந்து விட்டது. அதன் விளைவாக, சட்டத் தமிழின் வளமும் நுணுக்கமும் தமிழ் இலக்கியத்துக்குக் கிடைக்காமல் போய்விட்டன. சட்டத் தமிழ் வளர்ச்சியால் தமிழ் இலக்கியம் வளமும் வனப்பும் அடையும் என்பதில் ஐயம் இல்லை.

## 2. பிற மொழிகளின் பெயர்ப்பு

கவிதையை மாத்திரம் பார்த்தால் தமிழ்மொழி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே பூரணநிலையை அடைந்துவிட்டது என்று சொல்ல வேண்டும். பலமொழிகளிலும் வல்லுநராய் இருந்த சர். சி. பி. ராமசாமி ஐயர், பல ஆண்டுகளுக்கு முன் சொன்னார்: langnages are born before they are made perfect, but the Tamil language was perfect before it was born

அதாவது, மொழிகள் யாவும் பிறந்து வளர்ந்து பூரணத்தை அடைகின்றன. ஆனால், தமிழ் மொழியோ பிறப்பதற்கு முன்னமேயே பூரணத்தை அடைந்திருக்கிறது.

500, 600 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஆங்கிலக் கவிதையைப் பார்த்தால் அது மழலைப் பருவத்திலே இருந்ததை அறியலாம். ஷேக்ஸ்பியர் மில்டன் முதலியோர் தோன்றிய பிறகு தான் அதற்கு வளர்ச்சி ஏற்பட்டு, பக்குவநிலை உண்டாகியது. ஆனால் தமிழ்க் கவிதையைப் பின்னோக்கிப் பார்த்தால் அதன் பசலைப் பருவம் நமக்குத் தென்படுவதே இல்லை. 1000 ஆண்டுகளுக்கு முன் கம்பன் 1800 ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் அதற்கு முன்னால் பாட்டும் தொகையுமான சங்க நூல்கள், இப்படியாக தொன்னொருங்காலத்திலே தோன்றிய தமிழ்க்கவிதை ஆராய்ந்து பார்த்தாலும் அதற்கு முன்னமேயே அது முழுமை பெற்றுவிட்டது என்பது தெரியவரும். ஆகவேதான் சர். சி. பி. சொன்னது போல பூரண நிலையை அடைந்த பிறகுதான் தமிழ் மொழி பிறந்ததோ என்று ஐயுறுகிறோம்.

ஆனால் தமிழ்க் கவிதை உலகை விட்டு, உரைநடைக்கு வந்தால் மற்றொரு விந்தை புலனாகும். மகராஜன் சொல்லுகிறார். 'தமிழ் வசனம் திக்கித் திக்கிப் பேசுவதையும், தள்ளாடித் தள்ளாடி நொண்டுவதையும் அதன் உடம்பு சோகை பிடித்துச் சூம்பியிருப்பதையும் பார்க்கும்போது அதனிடத்து நமக்குப் பரிவும் பச்சாதாபமுமே ஏற்பட்டுவிடுகிறது'.

கவிதை உருவத்திலே இருக்கும்போது, பேராற்றலோடும் உணர்ச்சிப் பெருவளத்தோடும் பேசும் தமிழ், உரைநடை உருவத்திலே ஆற்றல் அற்று, உணர்ச்சி அற்றுப் பேசுவதற்குக் காரணம் என்ன?

மகராஜன் சொல்லுகிறார்: ''தற்காலக் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் சொல்ல நமக்குத் திராணி இல்லை, ஆகவே தான் உரைநடை ஊமையாய் மிடுக்கு இழந்து காட்சி கொடுக்கிறது'' ஆங்கில உரைநடையோடு ஒப்பிட்டு பார்க்கும் போது, தமிழ் உரைநடை நூறாண்டு பின்தங்கியிருப்பது தெரிய வரும். பிரெஞ்சு உரைநடையோடு ஆங்கில வசன நடையை ஒப்பிட்டுப் பார்த்தால், ஆங்கிலம் சாமானியம் என்பது தெரிந்துவிடும். மெருகு, நுணுக்கம், ஆழம், பொலிவு என்ற கோணங்களிலிருந்து பார்க்கும்போது பிரஞ்சு மொழியை எட்டிப் பிடிக்க ஆங்கிலத்துக்கு இன்னமும் நூறாண்டு ஆகலாம்.

பிரெஞ்சு, ஆங்கில இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்தால், தமிழ் நடைக்குத் தெம்பு புதுமையும் ஆற்றலும் வளரும் என்பது உறுதி❁ இந்த நோக்கத்தோடு ஷேக்ஸ்பியரின் சோக நாடகங்களை மொழி பெயர்த்து வெற்றிகண்ட மகராஜன் ஷான்போல்ஸார்த்ரு gean Paul Sartre என்ற பிரெஞ்சு உரை மன்னன் எழுதிய ஒரு கட்டுரையைத் தமிழ்ப் படுத்தியிருக்கிறார். மகராஜன் சொல்கிறார் 'மொழி பெயர்க்கும்போது தமிழ் எவ்வாறு திணறித் திக்குமுக்கு ஆடுகிறது என்பதை

............................................

❁ It is through such fertilising infussions that Tamil prose has to to acquire power and Verilence adequate enough to all the developing challenges of our science - based yet spirit sustained civilisetion.

Prof K. R Srinivasan.

உணர்ந்து வருந்தினேன். மொழி பெயர்த்தபின் தமிழ்நாடி எவ்வாறு புதிய வேகத்தோடு பேசுகிறது என்ற உண்மையையும் கண்டு மகிழ்ந்தேன்.'

பிரஞ்சுக்காரர்கள் ஆயிரக்கணக்கான வேற்று மொழி நூல்களைத் தங்கள் மொழியில் பெயர்த்தும் தங்கள் நூல் களையும் அந்நிய மொழிகளுக்குத் தந்தும் உதவியிருக்கிறார்கள். இந்த கொடுக்கல் வாங்கல் மூலமாக, பிரஞ்சு உரைநடை மிகுந்த ஊட்டம் பெற்றுள்ளது. தமிழ் நடைக்கு ஊட்டம் கொடுக்க விரும்புவார், மொழிபெயர்ப்பு வேலையிலே தீவிரமாக இறங்கித் தான் ஆகவேண்டும்.

தாய்மொழியிலிருந்து வேற்று மொழியில் ஒரு நூலை இறக்கும்போது உண்டாகும் பிரச்சனை ஒரு வகை; வேற்று மொழியிலிருந்து ஒரு நூலை தமிழ் மொழிக்குக் கொண்டு வரும் போது, சமாளிக்க வேண்டிய பிரச்சனைகள் வேறொரு வகை. இந்த வேற்றுமையை ஆங்கிலேயர்கள் அவ்வளவாக அறிந்து கொள்ளவில்லை. ஆகையால்தான் இரண்டு விதமான மொழி பெயர்ப்பையும் Translation என்ற ஒருச் சொல்லால் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனால் பிரஞ்சுக்காரர்கள், இரண்டு வித மொழிபெயர்ப்புக்கும் இடையே உள்ள வேற்றுமையை அறிந்த வர்கள். அதனாலேயே முன்னையதை Scheme என்றும், பின்னை யதை வெர்சியோய் Version என்றும் தனிப் பெயரிட்டு அழைக் கிறார்கள்.

மகராஜன் சொல்லுகிறார்: ஆலமரத்துக்கும், பலாமரத் துக்கும் வேற்றுமை தெரியாதவர்கள், இரண்டையும் ஒரே மரமாகத் தான் கருதுவார்கள். வேற்றுமை தெரியத் தெரிய சிந்தனையிலே நுணுக்கம் ஏற்படுகிறது. சொல்லும் நுணுக்கம் பெறுகிறது.

இந்த நோக்கத்தோடு ஷேக்ஸ்பியரது மூன்று சோக நாட கங்களை மொழிபெயர்த்த மகராஜன், டி. கே. சியின் கம்பர் தரும் ராமாயணத்தின் 3000 பாடல்களையும் திருமூலர் திருமந்திரம்,2000 பாடல்கள் வரை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

தமிழிலே உள்ள பேரிலக்கியங்களை உலக மொழிகளிலே பெயர்த்து, தமிழ்ப் பண்பாட்டையும், இலக்கியப்பாங்கையும்

உலகத்துக்கு எடுத்துதவவும், உலக மொழிகளிலே உள்ளம்சிறந்த இலக்கியங்களைத் தமிழாக்கம் செய்து, தமிழுக்குப் புத்துயிரு புதுவளமும் நல்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு, தமிழக அரசு, வேறு எந்த இந்திய மாநில அரசும் மேற்கொள்ளாத ஓர் அரிய திட்டத்தை நிறைவேற்றக் கருதியபோது, அதன் பொறுப்பை மகராஜன் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவிடம் ஒப்படைத்தது. இந்த குழுவின் சார்பிலே ஆறு புத்தகங்களைத் தகுந்தவர்களைக்கொண்டு வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் குறிப்பிடத் தகுந்தது, டாக்டர் ஆனந்த குமாரசாமி ஆங்கிலத்திலே இயற்றிய The Dance of Shiva என்ற நூலின் தமிழாக்கம் சிவானந்த நடனம் என்ற பெயரிலே வெளிவந்துள்ளது. சங்கத் தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து ஆங்கில மொழி பெயர்ப்பாக வெளிவந்துளது.

## ஷேக்ஸ்பியருடன்

மகாராஜனவர்களுடைய அருமைத் தந்தையார், பி. என். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் காவல்துறையிலே ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றவர்கள், 80 ஆண்டுகளுக்கு முன்னமேயே பி. ஏ. பட்டம் பெற்று, ஆங்கில மொழிப் புலமையும் ஷேக்ஸ்பிய ரிடத்திலே பற்றும் தமிழ் இலக்கியத்திலே ஆர்வமும் கொண்ட வர்கள். பி. ஏ. படிக்கும் போதே ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பல வற்றை ஆங்கில மொழிமரபு பிசகாமல் திறமையோடு நடித்துப் புகழ்பெற்றவர்கள் Tempest என்ற புயல் நாடகத்தைத் தமிழிலே மொழி பெயர்க்கத் தொடங்கி, ஆனால் அதை முடிப்பதற்குமுன் காலம் ஆனார்கள்.❀

இவர்களுக்கு மகனாய்வந்தவரும் ஆனால் கலையுணர்வைக் கருவிலே அமைந்த திருவாகப் பெற்றவருமான மகராஜன், தந்தையார் தொட்டுவிட்ட குறையைப் போக்கி, அவர்களது ஆவலை நிறைவேற்றினார், ஹாம்லெட்' லீயர்அரசன், மாக்பத் மூன்று பேர் நாடகங்களையும் தமிழ் ஆக்கினார்.

---

❀ பின்னால் இதைக் கள்ளபிரான் பிள்ளை மொழி பெயர்த்தார். அதை அதே நிலைய வெளியீடாக கு. அ. பதிப்பித்திருக்கிறார்,

## மொழி பெயர்ப்பைப் பற்றி

நூல் வகைகளாகத் தொல்காப்பியர், முதல் நூல் வழிநூல் என இருவகைகளைக் கூறுவார். முதல் நூலாவது

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவர் கண்டது.

என்பர். இது செய்யப்படும் நூலுக்கு அல்ல, செய்பவனுக்கு இலக்கணம் கூறுவது. இதைத் தொடர்ந்து, வழிநூல் அதன்நூல் வகையைக் கூறுவர்.

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்த லொடு அனை மரபினவே

இதிலே வழி நூல்களுள் ஒன்றாக மொழிபெயர்ப்பை அவர் கருதுவது தெரிகிறது. ஆனால் அதர்ப்பட யாத்தல் என்பது என்ன எப்படி என்பது தெளிவில்லை. பண்டைய உரைகளும் உதவுவனவாய் இல்லை. இளம் பூரணர், வடமொழியினின்றும் மொழிபெயர்த்துத் தமிழ்மொழியால் செய்தல் என்ற அளவே கூற, பேராசிரியரோ அதர்ப்பட என்பது நெறிப்பட என்றவாறு நெறிப்படுதல் என்பது, அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால் அதுகிடந்த வாற்றானே செய்யப்படும். தொகையாகவும் விரிவாகவும் செய்ததனால் பயன் இல்லை. மொழிபெயர்த்து எனவே பொருள் பிழையாமை பெற்றோம் என்றார்.

தொல்காப்பியர் காலத்து வழங்கிய மொழிகள் சமஸ்கிருதம், பிராகிருதம் பாலி இவற்றிலிருந்து எதுவும் அவர் காலத்தில் மொழிபெயர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்நிலையே சமீப காலம் வரை நீடித்தது. அதிவீரராமபாண்டியனின் நைடதமும், அரசகேசரியின் ரகுவமிசமும், மற்ற புராணங்களும் அதர்ப்பட யாக்கப் பெற்ற மொழிபெயர்ப்புக்கள் எனக்கருதுவதற்கில்லை. சென்ற தலைமுறையில்தான் சாகுந்தலம், மிருச்சகடிகம், ஆகிய இரண்டும் சரியான மொழிபெயர்ப்பாகக் கிடைத்துள்ளன. வித்யாரத்னம் P. S. சுப்பிரமணியசாஸ்திரியாரின் தொனி விளக்கும் இங்குக் குறிப்பிடத் தகுந்தது. ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவற்றுள் பூங்காவனப்பிரளயம் (Paradise lost)

முத்திவழியம்மானை (Pilgrimis Progrerss), வாஸ்து Faust) ஆகியன குறிப்பிட்டத்தக்கவை. மகராஜன் அவர்களே இம் முயற்சியில் இறங்கி அதர்ப்படயாத்தல் என்னும் இலக்கணத் துக்குச் சிறந்த இலக்கியங்களைப் படைத்தளித்தார். மொழி பெயர்ப்பது எப்படி என்பதைப்பற்றியும் தம் அநுபவத்தை ஒரு கட்டுரையில் விரிவாக வடித்துத் தந்திருக்கிறார்.

## கலை இலக்கிய ரசனை

காவியங்களைப் படிக்கிறோம்; நாடகங்களைப் பார்க்கிறோம்; அனுபவிக்கிறோம்; ஆனால் கவிதையையோ கலையையோ நம் நுகர்வது எதனால்? அதன் தன்மையாது? அதன் காரண காரியங்கள் யாவை? எவ்வகையைச் சார்ந்தவை? என்பன போன்ற கேள்விகளைக் கேட்டு ஆராயும் ஆற்றல் நம் முன்னோர்களுக்கே உரித்தானது.

இவ்வாறு அவர்கள், உட்புகுந்து பார்த்து இலக்கியம், சங்கீதம், சிற்பம், அபிநயம், சித்திரம் என்ற ஒவ்வொரு கலையும் நமக்கு அளிப்பது, ரஸானுபவம் என்று முடிவு செய்திருக்கிறார்கள் தங்கள் முடிவை ரஸ விளக்கத்தை முன்னிட்டுப் பற்பல நூல்களையும் இயற்றியுள்ளனர். ரஸம் என்பது யாது? அது ஒன்றா, ஒன்பதா அல்லது அதற்கு மேலும் உண்டா எனச் சர்ச்சைகள் அன்றே தெளிவுபடுத்தியுள்ளனர்.

ரஸம் என்பது யாது? ஒரு பன்றி சேற்றிலே முழுகி வெளி யேறிய தோற்றத்தைச் சித்திரத்தில் அப்படியே காட்டினால் அதைப் பார்த்து ஒருவித இன்பம் அடைகிறோம். ஆயினும் உண்மையாகப் பன்றி ஒன்று உடம்பெல்லாம் சேறாக நம் கண் முன் தோன்றினால் அருவருப்பு அடகிறோம். இதனால் கவின் கலைகள் நமக்கு ஊட்டுவது ஓர் இன்ப உணர்ச்சியின் விளைவே என்பது புலனா கிறது. இதனையே நலம், மெய்ப்பாடு, சுவை என்பர். இதை ஒன்பது வகையாகவும் பிரித்திருக்கிறார்கள். இந்த ஒன்பதுக்குள் எல்லாவித உணர்ச்சி விளைவுகளையும் அடைக்கியிருப்பது வியப்பே நம்மவர்க்கு இதிலே சிரமம் கிடையாது. நாதத்தை ஏழே சுரங் களின் சேர்க்கையாக உணர்த்திய அதிசயம் வேறு எங்கே காண முடியும்.

## பாவ வெளியீடு:

மற்றெல்லா அம்சங்களையும் விடப் பாவ வெளியீடு ஒன்றே கலைகளில் முக்கியம். ஒரு சித்திரம் அல்லது கவி இரண்டு இதயங்களை ஒரே அளவிலே ஆட்கொள்வதில்லை. கவனித்துப் பார்த்தால் கலைகள் எல்லாமுமே பலரிடம் பலவிதங்களிலேதான் உணர்ச்சிகளை எழுப்புகின்றன என்பது தெரிகிறது. இன்பம் விளைவிப்பதில் ஒவ்வொருவரிடமும் அவரவர் தகுதிக்குத் தக்கபடியே கலை அம்சங்கள் பயன்படுகின்றன.

மனித இயல்பிலும் மற்ற நடைஉடை பாவனைகளிலும் வித்தியாசங்கள் இருக்கையில் ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட உணர்ச்சிவேகம் தெரிவதில் வியப்பில்லை. கலையைச் சிருட்டிப்பவனுக்கும் நுகர்பவனுக்கும் வித்தியாசம் இருக்கலாம். நோக்கங்களும் உணர்ச்சி வேகங்களும் எல்லோரிடமும் ஒரே அளவில் இருக்க மாட்டா. நம் எல்லோருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும் வகையில் கலைஞர்கள் தங்கள் படைப்புகளை ஆக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நம் கண்களுக்குச் சட்டென்று விளங்காத கலைப்படைப்புகளைக்கண்டு நாம் ஏமாற்றம் அடைவது சரி அல்ல. கலையைப் படைப்பவன் வேறு, நாம் வேறுதான்.

நம்மில் பெரும்பாலோர் கலையை அனுபவிக்கவே முயல்கின்றனர். சங்கீதம், நாட்டியம் முதலியவைகளிலே முடிந்த அளவு மகிழ்ச்சியுறுகிறார்கள். ஆனால் அது மட்டும் போதாது. கலையின் நுண்ணிய கருத்துக்களிலே ஈடுபடும் ஆற்றல் அடைவதினாலேயே அவர்கள் கலையில் அறிவுடையவர்கள் ஆவார்கள். நம்முடைய பார்வையில் தோன்றும் சிறுபொறி மேல் எழும்பாமல் புகையாக மட்டும் மாறி மறைந்து விடுகிறது. ஆனால் திறமை வாய்ந்த கவிஞனிடம் அக்கனலின் நுட்பமான அணுக்கூட ஜ்வாலையிட்டுக் கிளம்பி எதிர்ப்பட்ட அவ்வளவையும் சுடர்மயம் ஆக்கி வானத்தையும் அளாவிவிடுகிறது. சாமானியன் கண்ணுக்கும் கலைஞன் கண்ணுக்கும் உள்ள வேறுபாடு இதுவே. ஒரு கலையை, அதன் நுட்பம் தெரிந்து ஊன்றிக் கவனித்தோமானால், அப்போது முன்பு தெளிவாகாத தத்துவங்களும் சிறிது சிறிதாக நம் கண்முன் உருக்கொள்ளும்.

நம்மைப்போலவே கலைஞனும் இயற்கையைத்தான் பார்க்கிறான். ஆனால் அவனுடைய அறிவுக்கண்ணால் நுகரும்போது அவன் பெறும் அனுபவம் முற்றிலும் வேறாக இருக்கிறது. அந்த மரம், அதன் மேலுள்ள இலைகள், இவை அல்ல, அப்போது அவன் காண்பது. புறத்திலே காண்கின்றதை ஒதுக்கி அகக்கண்ணிலே தென்படும் காட்சியை அல்லவா சொல்லிலே கல்லிலே வண்ணத்திலே வடிக்கிறான்! தியானத்திலே அவனுடைய முழு மனமும் ஆழ்ந்து தோய்ந்திருப்பதால் அவன் உருவாக்கும் ஓவியமோ, சிற்பமோ, கவிதையோ அவனுக்கே சொந்தம் ஆகிவிடுகின்றன.

தியானம் வளர வளரக் கலைஞன் உலகு சம்பந்தமான கட்டுக்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறான். வேண்டுமென்றுகூட வரையும் படத்திலோ, செதுக்கும் கல்லிலோ இயற்கைக்கு மாறாகச்சிருஷ்டிகளைச் செய்வான். தன் மனக்கண்ணிலே எழும் பாவத்தைப் பிறரிடமும் விளக்கவே அப்படிச் செய்கிறான்.

ஒவ்வொரு கலையினாலும் நாம் அடையும் பயன் என்ன? ஒரு ஓவியத்தைப் பார்க்கிறோம். பெரியதோர் உணர்ச்சி உலகிலே நுழைவதற்குத் தகுந்த கற்பனா சக்தி நம் உள்ளத்திலே ஏற்பட வேண்டும். கற்பனையின் இன்பத்திலே மூழ்குவதற்கு வேண்டிய ஊற்றுக்கால்கள் அந்த ஓவியத்தின் கலை அம்சங்களிலே நிறைந்திருக்க வேண்டும். அதாவது ஓவியம் வெறும் ஓவியமாக மட்டும் தோன்றாமல் உயிரோட்டம் உள்ளதாக இருந்தால் அழியாத அக்காட்சியிலே நாமும் கலந்து புதிய ஜன்மம் பெற்றவர்களாவோம்.

சதைப்பற்று சரியாக இருப்பதாலும், உடல் அளவுகள் கோணாமல் அமைவதாலும் மட்டும் அல்ல, சித்திரத்திலே உள்ள மனித உருவம் உயிர்பெறுவது அதன் தனிப்பட்ட பாவ வெளியீட்டினால் தான். இயற்கை அம்சங்களின் ஒற்றுமைகள் யாவும் சேர்ந்திருந்தும்கூடப் பாவம் இல்லாவிட்டால் அது உயிரற்ற உடலே.

கலைகளில் நம்மை ஆட்கொள்வது பாவ வெளியீடு ஒன்றுதான், அதுவே நம்நாட்டுத் தெய்வ வழிபாட்டு உணர்ச்சியிலே முதன்மையாகத் தோன்றுவது. எக்கலை ஆயினும் பரம்பொருளை நமக்கு மெய்ப்பிக்கும் குறியையே அது கொண்டிருக்கும்.

மனித அறிவுக்கு எட்டக்கூடிய மனோ விசாரணைகளில் கடவுளைச் சார்ந்த கருத்தே முக்கியம் என்றார் சிறந்த அறிஞர் பிளாட்டோ. இதைத்தான் நாமும் ஏற்றுக் கொண்டு கடைப் பிடிக்கிறோம்.

பரத நாட்டியம் ஆடுகிறவர்கள் அபிநயங்களினாலும், ஹஸ்த முத்திரைகளினாலும் தெரிவிக்கும் பாவங்கள் முதலில் அர்த்தமாவதில்லை. மொத்தத்தில் சங்கீதம், சாகித்தியம், லயம் இம்மூன்றின் சிரகத்தை எட்டிப் பிடிப்பதாகவே பரத நாட்டியத்தை நாம் கருதுகிறோம். நம் நாட்டில் சிற்பத்திலும் சித்திரத்திலும் அமைந்திருக்கிற அரிய பாவங்கள் நாட்டிய அபி நயங்களிலும் வெளியாகக் காணலாம். நாட்டியம் முதலா, சிற்பம் முதலா, எதிலிருந்து எது பாவத்தைப் பயன்படுத்திக் கொண்டது என்பதை அறிவது சாத்தியமில்லை. இரண்டிலும் ஒரேவிதமான பாவங்களையே அதிகமாகப் பயன்படுத்தியிருப்பதை மட்டும் மறக்கலாகாது.

இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம் எல்லாம் ஒன்று சேர்ந்து தெய்வ வழிபாடு என்னும் ஒரே நோக்கத்தை வளர்க்கின்றன.

பாட்டுக்கள் பெரும்பாலும் தெய்வத்தைப் பற்றியனவே. நாட்டியமும் அப்படியே. சிற்பத்தைப்பற்றிக் கேட்கவே வேண்டிய தில்லை.

## மொழி பெயர்ப்பு:-

ஒரு மொழியின் வளர்ச்சிக்குப் புதுநூல்கள் அம்மொழியிலே வெளிவருவது அவசியம். பிறமொழிகளினின்றும் மொழி பெயர்த்தலும் இன்றியமையாதது. மொழி வளர்ச்சியின் முதற் கட்டங்களில் மொழிபெயர்ப்பே பேருதவியாயிருக்கும். புதுநூல்கள் சமைவதற்குப் புதிய கருத்துகள் அவசியம். இக்கருத்துக்களே அம்மொழியை வழங்கும் சமுதாயத்தின் வாழ்க்கையைப் பாதித்து முன்னேறச் செய்வது. கருத்துக்கள் அவை எந்த ஒரு நாட்டு மக்கள் தனிச் சொத்தும் அல்ல எல்லா நாட்டவர்க்கும் பொதுவானவை. ஒரு நாட்டினர் தமது வாழ்க்கைக்குத் தேவையான எல்லாக் கருத்துக்களையும் தாமே

ஊகித்து அறிந்து கொள்வது இயலாத காரியம். மக்கள் யாவரும் ஒரே குடும்பம், கருத்துக்கள் அவர்களது பொதுச்சொத்து. யாவர்க்கும் அவற்றிலே உரிமை உண்டு. மேலும் ஒரு நாட்டினர் அல்லது சமூகத்தினர் இயல்பாக ஒரு சில துறை பற்றிய அறிவிலேயே முன்னேறியுள்ளனர். அத்துறை பற்றிய கருத்துக்களே அவர்களின் இலக்கியத்திலே முதிர்ச்சி அடைந்து காணப்படும். இக்கருத்துக்களை மற்றைய நாட்டினருடன் பகிர்ந்து கொள்வதால் மனித சமுதாயம் ஒருங்கே முன்னேறும்.

மொழி வளர்ச்சிக்குக் கருத்துக்கள் மட்டுமன்று அவற்றை வெளியிடும் திறமையும் வேண்டற்பாலது. கருத்துக்களைத் தெளிவாக வன்மையாக அழகாக வெளியிடச் சொற்கள், சொல்தொடர்கள், குழுஉக்குறிகள் மிகுதியாக வேண்டும். இவ்வகையில் ஒரு மொழியின் சொற்செல்வத்தை அதிகரிப்பதிலே மொழிபெயர்ப்பு மிகுதியும் துணைபுரியும். தமிழ், மலையாளம் போன்ற ஒரே குடும்பத்து மொழிகளாயிந்தால் சொற்களை எளிதில் பரிமாறிக் கொள்ளலாம் திராவிட மொழிகளிடையேயும் திராவிட மொழிகளுக்கும் வட மொழிக்கும் இடையேயும் இவ்விதப் பரிமாறல் காணப்படுகிறது. ஆனால், தமிழும் ஆங்கிலமும் போல் வெவ்வேறு மொழிக்குழுவைச் சேர்ந்திருந்தால் சொற்களை அவ்வாறு கடன் வாங்குதல் அத்துணைச்சிறப்பல்ல.

இவ்விதிக்கு விலக்காக ஆங்கிலம், இந்திய மொழிகளிடமிருந்து பல சொற்களைப் பெற்றுத் தன் சொல்வளத்தைக் கூட்டியுள்ளது.

மொழி பெயர்ப்பால் ஒரு மொழியின் சொல்வளத்தை அதிகரிக்கலாம். அதன் சொல் தொகையும் மரபும் காலப் போக்கிலே வளர்ச்சி அடையும். இது வழக்கில் உள்ள மொழிகளின் இயல்பு. இதுகுறித்துக் குறை கூறுவதிலே பயன் இல்லை.

ஒரு வகையிலே சொந்தமாய் எழுதுவதைவிட மொழி பெயர்த்தல் கடினம். தானே எழுதும் கதை கட்டுரைகளில் கருத்துக்களைத் தன் விருப்படிப்படிக் கூட்டலாம், குறைக்கலாம், மாற்றலாம். ஆனால் மொழி பெயர்ப்பிலோ மூலமொழியின் கருத்துக்களைச் சிறிதேனும் மாற்றாது அவ்வாறே தரவேண்டும்; அத்துடன் நடை, சொல்லாட்சி, வாக்கிய அமைப்பு முதலியன அம்மொழியின் மரபு, பிழையாது அமைய வேண்டும். பெயர்த்தெழுதியபின் அதை வாசித்

தால் மொழி பெயர்ப்பாகவே மனத்தில் படக்கூடாது. முதல் நூல் போலவே தோன்ற வேண்டும். எனவே மொழி பெயர்ப்பாளர்கள் இருமொழிகளிலும் தேர்ந்த புலவராய் இருத்தல்வேண்டும். மூல மொழியின் கருத்துக்களைத் தெளிவாக அறிந்து தமது மொழியில் அவற்றை வெளிடப்போதிய திறமைவேண்டும். இதனால் தான் பலர் நேரடியாக மொழி பெயர்ப்பதில்லை. தழுவி எழுதுகின்றனர். இது எளிது.

இப்போது தமிழில் மொழிபெயர்ப்பு நூல்கள் பல வெளி வருகின்றன. இந்தி, வங்காளி, மராத்தி முதலிய இந்திய மொழி களினின்றும் ஆங்கிலம், பிரஞ்சு முதலிய பிறநாட்டு மொழிகளி னின்றும் கதைகள், கட்டுரை முதலியன தமிழாக்கத்திலே தோன்று கின்றன. இவை தமிழ் வளர்ச்சிக்கு உதவியாகவே இருக்கும். இன்னும் ஆங்கில இலக்கியத்தின் செய்யுட்பகுதிகள் அவ்வளவாகத் தோன்றவில்லை. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள், ஆங்கில இலக்கி யத்தின் பெருஞ்செல்வமான இசைப்பாடல்கள்,இன்னமும் தமிழுக்கு மறை பொருளாகவே இருக்கின்றன. இந்நூல் தமிழ் இலக்கியத்தின் கருத்துக்களையும் கற்பனைகளையும் இலக்கிய உருவையும் நேரடி யாகப் போஷித்து இப்புதுயுகத்திலே தமிழ் இலக்கியம் மேலும் சிறப்புடன் வளர உறுதுணையாயிருக்கும் என்பதால் மகராஜன் முயற்சியிலே இறங்கி அதிசய வெற்றி அடைந்தார்.

## கவிதை பாவுணர்ச்சி :

ஒரு கவியின் பெருமை அவனது நடையை மட்டும் பொருத் தது அன்று. பாக்களின் பொருளையும் பற்றியது. பா எனப் படுவது, பாடிய அனுபவம். அழகிய உண்மை. எனவே அதிலே அனுபவமும் உண்மையும் காணப்பட வேண்டும்.

மெய்யான புலமை, நமது சொந்த முயற்சியால் மட்டும் கிட்டுவதன்று. அது மக்களிலே வெகு சிலருக்கு ஓரோர் வேளை வாய்க்கும் வரம் என்றே கூறவேண்டும். இலக்கியப் படைப்பு, குறிப்பாகக் கவிதாசக்தி ஒருவித வரம். நமது முன்னோர்கள் வரகவி என்ற சொல்லைக் கண்டு வழங்கியிருக்கிறார்கள். யாப்பிலக் கணத்தை நெட்டுருச் செய்வதாலோ, கவிதையின் பொருள்களை மட்டும் அறிந்ததாலோ ஒருவன் புலவர் ஆகிவிடமுடியாது. சுய

முயற்சியால் ஒருவர் எழுத்தாளர் ஆகலாம். ஆனால் கவிஞன்ஆக முடியாது. இவ்வுண்மையை ஆங்கிலப் பழமொழி ஒன்றும் வலி யுறுத்துகிறது. பிறப்பினாலேயே கவி ஒழிய முயற்சியால் அல்ல.

உண்மையான கவிகள் எல்லாம் வரகவிகளே. அத்தகைய கவிஞன் இப் புலன் உலகையும் கால உலகையும் கடந்து உண் மையான நித்ய உலகைக் கண்ணுறுகிறான். வாழ்க்கையில் நாம் சிரமப்பட்டுக் கண்டுணரும் உண்மைகளை, ஒரே நொடியில், அவற்றின் நித்திய அமைப்பில் உணருகிறான். காலம், இடம் புலன், உணர்ச்சி, இயல்பான அறிவு இவை மறைகின்றன. உலகம் சதம் என்னும் ஆடையுடன் காட்சி தருகிறது நமது கண்களுக்கு. இன்று தோன்றி நாளை மறையும் மல்லிகை மலர், கவிக்கு நித்திய நம்பிக்கையின் சாதனமாய் நிலவுகிறது. வானிலே பறந்து செல்லும் இளமேகம் அவன் மனத்தை மேல்நோக்கித் தாவச் செய்கிறது. பரந்த கடல், பரம்பொருளின் அளவுகடந்த நிலை யைப் பிரதிபலிக்கிறது. இயற்கைப் பொருள்கள் உயிர்பெற்று விளங்குகின்றன. யாவுமே நித்தியம்.

புலனுக்கு ஒவ்வொரு வேளையில் நேரும் இவ்வுணர்வையே பா உணர்ச்சி என்கிறோம். இவ்வுணர்ச்சி வாழ்க்கையில் முக்கிய மானவற்றிற்கு மட்டும் உரியதன்று; எப்பொருள் பற்றியேனும் இது தோன்றலாம். இவ்வுணர்ச்சியிலே பிறரும் பங்கு பெறுமாறு சொற்களில் வெளியிடுவது பா - கவிதை.

ஓர் எளிய மனிதனது இன்பதுன்ப உணர்வுகளைப் பாடு கிறவனும் கவியே. மனிதச் சமூகம் அனைத்தும் தழுவிய துயரம், அவலம், நம்பிக்கை முதலியவற்றைப் பாடுகிறவனும் கவியே. இன்றியமையாது வேண்டப்படுவது உண்மையான கவிதை உணர்ச்சியே. கவிதையின் ஏற்றத்தாழ்வு அவனது கவிதை உணர்ச் சியின் ஆழத்தைப் பொறுத்தது. அவன் கூறும் உண்மைகள் மக்கள் அனைவரையும் எவ்வளவு சார்ந்தனவோ அவ்வளவு அவனது கவியும் உயர்ந்து நிற்கும்.

ஒரு கலையின் உயிர்நிலை அது வெளியிடும் பாவத்திலே தான் இருக்கிறது. வடிவத்திலோ அதன் பொருளிலோ இல்லை. மகராஜன் சொல்லுவார்:

ஓர் உண்மையான உணர்ச்சி, ஒரு கவிஞனுடைய இதயத்தை ஆட்கொண்டுவிட்டால், அதற்குமேல் அவன் செய்யவேண்டியது ஒன்றும் இல்லை. அவனுடைய தாய்மொழி, அவன் இதயத்திலே பாய்ந்து, அதன் உணர்ச்சியை ஆவிச் சேர்த்துக்கட்டி, அதை ஒரு கவியாக உறைத்துவிடுகிறது. கவிஞனுக்கும் கவிக்கும் இதற்குமேல் சம்பந்தம் இல்லை என்றுகூடச் சொல்லிவிடலாம். உண்மையான வளமான ஓர் உணர்ச்சியை அவன்பெற வேண்டும். அவ்வளவு தான். அவனது உள்மனம் அந்த உணர்ச்சிக்குக் கவி உருவம் கொடுத்துவிடும். தேன் இறுகி இறுகிக் கற்கண்டு ஆவது போல, உணர்ச்சி இறுகி இறுகிக் கவியாக வடிவெடுத்து விடும்.

கவிஞனுடைய உள் மனத்திலே அவன் கற்ற யாப்பிலக்கண அறிவு, மொழி அறிவு, அனுபவ அறிவு எல்லாம் படிந்து கிடக்கின்றன. உண்மை உணர்ச்சி, இந்த அறிவை எல்லாம் பயன் படுத்திக்கொண்டு கவி உருவத்தை உண்டாக்குகிறது.

காவியம் ஓவியம் இசை ஆகிய கலைகளும் இரசத்தைப் பற்றியே பேசுகின்றன. இதற்கு வடமொழியிலே பரத முனிவர் தரும் நாட்டிய இரசங்களே மூலம் ஆகின்றன. நாட்டிய இரசம் என்ற பரதர் சொல்லை விளக்கவந்த அபிநவகுப்தர், நாட்டியம் முழுமையினின்றும் இரசங்களே பெறப்படுகின்றன. என்பர். இதற்கு நாட்டியமே இரசங்கள், இரசங்களின் தொகுதியே நாட்டியம் என்ற விளக்கம் தரலாம்.

தமிழிலே தொல்காப்பியரும் இரசங்கள் என்ற சுவையை நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது காட்டலாகாப் பொருள் என்பர். உணர்ச்சி கண்ணுக்குப் புலன் ஆகாது. நாட்டிய மரபிலே கூறப்பட்டுள்ள அபிநயத்தின் வழியாகவே அதை உணர இயலும் என்பது அவர் கருத்து. இந்த நாட்டிய இரசத்தைப் பின்வந்தோர் யாரும் தமிழிலே ஆராய்ந்தார் இல்லை. வட மொழியிலோ பரதரைத் தழுவி இரசபத்ததி நெடுலும் ஆராயப் பட்டு வந்திருக்கிறது. கி. பி. 10ம் நூற்றாண்டளவிலே ஆனந்த வர்த்தனமும் அபிநவகுப்தரும் இரசத்தை முதன்மைப்படுத்தி அதை ஒரு இலக்கியக் கோட்பாடாகவே உறுதியான அடிப்படையிலே அமைத்தார்கள்.

கவிதைக்கு இன்றி அமையாத அம்சம் எது? என்ற கேள்விக்கு அலங்கார ஆசிரியர் சிலர் அணியே என்றனர்.

வேறு சிலர் தொனியே என்றனர். மற்றும் சிலர் குணம் என்றனர். இக் கோட்பாடுகளை ஆராய்ந்த பேரறிஞர்கள், அவைகளைத் தனித்தனியே எடுத்துக் காண்பித்து, இரசம் சுவையே கவிதைக்கு உயிர் என்று நிறுவினர். இரசத்தின் இயல்பு என்ன? எவ்வாறு அது நுகரப்படுகிறது?என்பனபற்றி, கவிதைகளையும் நாடகங்களை யும் கொண்டே விரிவான ஆராய்ச்சி செய்திருக்கின்றனர்.

துயரத்தாலும் சோகத்தாலும் சிரமத்தாலும் பீடிக்கப்பெற்ற மாந்தர் உள்ளத்தின் அயர்வைப் போக்கிக் கிளர்ச்சியை உண்டு பண்ணி விசிராந்தி (அமைதியைத்) தரவல்லது நாட்டியம் என்பர் பரதர். மேலும், அது உலகநடைமுறைச் செயல்களைப் பின் பற்றியதாக இருக்க வேண்டும் என்றும் செயல்கள் உணர்வின் அடிப்படையிலே எழுகின்றன என்றும் அவர் கூறுவதால் உணர்வு ஆகிய பாவமே நாட்டியத்திலே முக்கிய இடம் பெறுவதையும் அறிகிறோம். காவியப் பொருள் உடல் என்றும் அதன் பிரிவுகளும் உறுப்புகளும் இடத்துக்கு எற்பவும் இரசத்துக்கு ஏற்பவும் அமைதல் வேண்டும் என்றும் அவர் கூறுவதால் நாட்டியத்திற்போலவே காவியத்திலும் இரசத்துக்கே முதன்மை வழங்குவர் பரதர். இரசம் இன்றி எப்பொழுதும் செயல்படுவதில்லை என்பர். (நா. சா. பக் 71) இரசத்துக்கு அடுத்தபடியாகப் பாவங்களை வைத்து, இரசங்களையும் பாவங்களையும் எப்படி எப்படி அமைக்க வேண்டும் என்பதை அறிந்த கவிஞனே அம் முயற்சியிலே சித்தி பெறுவான் - (நா. சா. 7 : 124) இப்படி, சமைக்கப்படும் நாடகத்தைக் காண்பவனோ காவியத்தைப் படிப்பவனோ கேட்பவனோ பெறுகின்ற உணர்வு இரசானுபவம் ஆகும். இந்த இடத்திலே ஒன்றிப் போதல் தேர்ந்த இரசிகனுக்கே இயலும் என்பர் (நா. சா. 27, 62.)

நாடகத்திலே உணர்வுகளை வெளிப்படுத்தும் வாயில்கள், இரண்டு ஒன்று ஆங்கிக அபிநயம் - அதாவது கண், முகம், கை முதலிய உறுப்புகளின் அசைவினால் காதல், வீரம், சோகம், போன்றவற்றை உணர்த்துதல் ; மற்றொன்று உரக்கவோ மெது வாகவோ பாடல்கள் அல்லது உரைநடை வாயிலாகப் பேசும் வாசிகாபிநயம். இந்த இருவகை அபிநயங்களையும் கண்ணால் கண்டும் காதால்கேட்டும் உள்ளத்திலே உணர்வுகள் கிளரப்பட்டு

இரசானுபவத்தைப் பெறுகிறோம். பிரமானந்தம் போன்றதுதான் அது. இதை உணர்ந்து இன்புறுதல் சாமானியர்க்கு அரிது என்பர் தொல்காப்பியர்.

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங்குரைத்தே
சுவையினை உணர்ந்து இன்புறுதல்
உணர்வுடைய மாந்தராகிய சஹ்ருதயர்க்கே

சுவை உணர்ந்து இன்புறுதல் உணர்வுடைய மாத்தராகிய சஹ்ருதயர் என்ற இரசிகர்க்கே இயலும். மற்றவர்க்கு அரிது என்பது தொல்காப்பியர் கருத்து.

கலையுள்ளம் படைத்த இரசிகன், காவியத்தைப் படிக்கும் போதோ கேட்கும்போதோ நாடகத்தைக் காணும்போதோ அவனது ரஜோ குணமும் தபோ குணமும் வலி இழந்து, சத்துவகுணம் ஒன்றே ஓங்கிய நிலையில் ஆன்மானந்தத்தை நுகர்கிறான் என்பர்.

இரசம் என்ற சுவை எட்டு அல்லது ஒன்பது வகைப்பட்டாலும் பொருளால் அது ஒன்றே; ஒரே அனுபவத்தின் பல்வேறு நிறங்களே அவை. பக்குவம் வாய்ந்தோர்தான் சுவையை அனுபவிக்க முடியும். நாடக அரங்கிலே நாடகம் பார்ப்போர் பக்குவம் இல்லாதவராய் இருந்தால் அவர்களுக்கும் அங்கே உள்ள சுவர், கல், மரம் முதலியவற் றிற்கும் என்ன வித்தியாசம்? இரத்தினம் உயர்ந்ததுதான், அதைப் பரிசோதித்துப் பழகியவனுக்கே அதன் அருமை பெருமை தெரிய வரும். சாமான்யன், ஜாதி ரத்னத்துக்கும் ரங்கூன் கமலத்திற்கும் உள்ள ஏற்றத்தாழ்வை அறிய மாட்டான். காவியத்திலே இரசம் புலப்படுவதும் இவ்விதம்தான் அதிலே பழக்கம் அதிகமாகி அனுபவித்த இரசத்தை உணர்வது என்பது எளிதான செயல்அல்ல ஒருவன் பாடுகிறான். ஜன்மாந்திர வாசனை இருந்தால்அன்றிப் பாடவராது என்பர். அவன் பாடுவதை எல்லோரும் அனுபவித்து விடுவார்களா? இதற்கு சங்கீதத்திலே ஓரளவு ஞானமு் வேண்டியிருக் கிறது இதுபோன்றுதான் காவியத்தை இரசிப்பதும். இலக்கியத்தைச் சுவைக்க வகை அறியாதவனைப் பற்றி, கவிஞன் ஒருவன் கூறுவது:

ஓ இரத்தினமே, குரங்கு உன்னை எடுத்து மோந்து பார்த்தது. தன் வழக்கம்போல முத்தமிட்டு அதை நக்கியும் பார்த்தது. பாவம் அதற்கு ஒன்றும் தெரியவில்லை. தூர எறிந்து விட்டது. நீ ஏன் வருந்தவேண்டும், ''என் மதிப்பு குரங்குக்குத் தெரியவில்லையே என்று'' உள்ளே என்ன இருக்கிறது என்று, கல்லிலே வைத்துத் தட்டிப்பார்க்காமல் இருந்ததே என்று நீ உண்மையில் சந்தோஷப்பட வேண்டும்.

இரசானுபவம் பெறுதற்கான பக்குவம் ஊழ்வினைப் பயனாலும் பயிற்சியாலும் உண்டாகிறது, வெறும் பயிற்சி மாத்திரம் போதாது. ஒருவன் பிறப்பாலேயே கவியாகப் பிறக்கிறான்; கவிஞன் போன்றவன்தான் இரசிகனும்.

சுவை என்றால் என்ன? சுவையுணர்வு என்றால் என்ன? சாகித்ய தருப்பணத்திலே விசுவநாதர் கூறுவது:

அது தனித் தன்மையுடையது, பகுக்க முடியாதது, தானாகத் தோன்றுவது. சித்தும் ஆனந்தமுமாய் உள்ளது. வேறு கருத்து உருவங்களோடு கலப்பு இல்லாதது. இறை அனுபவத்திற்குத் தம்பி முறையில் உள்ளது. உலக இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதம் உடையது. ஆனந்தத்தால் ஆனந்த வடிவான கடவுளை அடைதல் போல, அதனோடு ஒன்றிக் கலக்கும் தன்மை உடையோரே அதனை அனுபவிப்பர், இதனால் அது அறிவுக்கு விஷயமான பொருள் ஆவதில்லை. அதன் உண்மையை அதை அனுபவிப்பதாலேயே உணரலாம்'.

சமயம் கலை என்பன ஒரே அனுபவத்தைத் தருபவனந் அது மெய்ப்பொருள் அனுபூதி, எல்லாம் ஒன்றே என்ற அனுபவ. தான் அது.

பக்தி என்பது, பக்தனுடைய மெய்ப்பொருள் அனுபவம்
சத்யம் என்பது தத்துவ ஞானியின் மெய்ப்பொருள் அனுபவம்
இரசம் என்பது கலைஞனின் மெய்ப்பொருள் அனுபவம்
இவை மூன்றும் பரம்பொருளின் மூவகைக் கூறுகளே.

உலகப் பெரும் கவிஞர்கள் நாலைந்து பேர்களிடையே கம்பன் முதலிடம் பெறுகிறான் என்பது அறிஞர் கணிப்பு. கம்ப ராமாயணம் தோன்றிய காலம் தமிழ்ப் பண்பாடு தலைசிறந்து நின்ற காலம். சோழப் பேரரசு தமிழகத்தின் எல்லைகளைத் தாண்டி வடக்கே கங்கைக் கரையிலும் தெற்கே ஈழத்திலும் கடல் கடந்து கிழக்கே கடாரத்திலும் சாவகத்திலும் மேற்கே கிரேக்கத் தீவுகளிலும் வெற்றிக்கொடி நிறுவிய காலம்.

கம்பன் தனது காப்பியத்துக்கு வடபுலக் கதையை எடுத்தாண்டான். ஆயின் அவன் இயற்றியது தமிழ்க்காப்பியம். அவனது காப்பிய உலகு தமிழ்நாடு. காப்பிய மாந்தர் தமிழர். காப்பியத்திலே வழிந்தோடுவது தமிழ்ப்பண்பு. அவனது ராமாயணம் தமிழ்ப் பண்பாட்டின் தலைசிறந்த படைப்பு.

எல்லா நாட்டவரும் காப்பியத்தைக் கவிதையின் கொடுமுடி எனக்கருதுகின்றனர். இதனுடன் நெருங்கிப் போட்டியிடுவது நாடகம் ஒன்றே. எனினும் நாடகம் ஒரு தனிமனிதனின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது. காப்பியமோ ஒரு நாட்டின் மக்கள் அனைவரையும், மனித சமுதாயத்தையே தனது பொருளாக எடுத்துக் கொள்கிறது. காப்பியத்தில் சித்திரம் வரையப்படும் கிழி மிகவும் அகன்றது. அதன் உறுப்பினர்கள் தேவர்களுடன் போட்டியிட்டுத் தலைநிமிர்ந்து நிற்கின்றனர். அதில் வரும் நிகழ்ச்சிகள் மன்பதையின் பெருந்தொகையினைப் பாதிக்கின்றன.

கம்பராமாயணத்தைக் கம்பநாடகம் என்று கூறுவது மரபு நாடகத்தின் இலக்கணம், ஒரு கதையைச் செயல்களிலே படம் பிடித்துக் காட்டுவது.இதய பாவங்கள் சொற்களிலும் செயல்களிலும் பிரதிபலிப்பது. ஹோமரிடத்திலே இந்நாடகப்பண்பு அவரது காப்பியம் முழுவதும் பரவி நிற்கிறது.

மக்கள் வாழ்வின் இயல்பான இன்ப துன்பங்களை, அவர்களின் இதய பாவங்களை நேர்முகமாக ஒரு சில சொற்களில் எடுத்துக்காட்டுவார் கம்பர். அத்துடன், அவர்களை நம்முன் நடிக்கச் செய்கிறார். அவர்களது உள்ளத்து உணர்ச்சிகள், உணர்ச்சி வசத்தனவான சொற்கள், உணர்ச்சி உந்திய செயல்கள் யாவும் திரைப்படம் போல நம்கண்முன் காட்சி அளிக்கின்றன.

## சிவயோகியருடன்

60 ஆண்டுகளுக்கு முன்னர், திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலே சுயமரியாதை மாநாடு நடந்தது. நமது சமயத்திலே உள்ள மூட நம்பிக்கைகளை நையாண்டி செய்து பல அறிஞர்கள் சுவையாகவும் ஆவேசமாகவும் பேசினார்கள். அவர்களுடைய பேச்சுத் திறமையும் துணிச்சலும், வியக்கத்தக்க விதமாகவும் கவர்ச்சியாகவும் இருந்தன. அந்தக் காலத்திலே சமயத்தைப் பற்றிப் பேசினவர்கள். வெறும் மடிசஞ்சிகள், பேச்சும், விளக்கெண்ணெயாய் இருக்கும். சுயமரியாதைத் தலைவர்களுடைய பேச்சுஇருளோட வந்த ஒளி போல் இருக்கவே, அதனால் கவரப்பட்ட இளைஞர்கள் சாமியாவது சாத்தானாவது என்று, நாத்தழும்பேற நாத்திகம் பேசி, கடவுள் நம்பிக்கை உள்ளவர்களைப் பழிக்கவும் தொடங்கினர். இவர்களிலே முன்னணியிலே நின்றவர்தான் இளைஞன் மகராஜன். கடவுள் இல்லை, இல்லவே இல்லை என்று உறுதியாய் இருந்தார். இதற்கு ஊட்டம் கொடுப்பதற்காக, வால்டேர், இங்கர்சால், பெட்ரண்ட் ரஸ்ஸெல் போன்ற நாத்திகவாதிகளுடைய நூல்களை ஆர்வத்தோடு படித்து வந்தார்.

இந்த உறுதிக்கு உலைவைக்கக்கூடிய நிகழ்ச்சி, பின்னர் நடந்தது. பாளையங்கோட்டையிலே அவர் வழக்குரைஞராக இருந்தபோது, மாவட்ட நீதிமன்றத்திலே ஒரு வழக்குத் தொடர் பாக 41 கல்கத்தா என்ற தீர்ப்புத் தொகுதியை நூலகத்திலே எடுத்துப் புரட்டியபோது, புத்தகத்துள் இருந்த கருந்தேள் அவர் விரலைக்கொட்டிவிட்டது. சற்றுக் கடுகடுப்பாக இருந்தது. ஆனால், நேரம் ஆக ஆக வலி பொறுக்க மாட்டாது நீதிபதியிடம் வாய்தா வாங்கிக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார். கை முழுவதும் வலி பரவி, நெறி கட்டிக்கொண்டது. அவரே சொல்லுகிறார்: ''என் துன்பத்தைக் காணச்சகியாத என் அத்தை பக்கத்து வீட்டுப் பையன் ஒருவனை அழைத்துவந்தாள். அவன் பெயர் மணி. வயது 10, 12 இருக்கும். என்னைக் கண்டாலே அவன் அஞ்சுவான் அவனைக் கண்டால் எனக்கு ஏளனம். கையிலே ஒரு வேப்பங் குலையை வைத்துக் கொண்டு வாயிலே ஏதோ ஒரு மந்திரத்தை முணுமுணுத்துக்கொண்டு, பயம் இல்லாமல் அவன் என்னை அணுகி, வேப்பங்குலையால் என் கையில் மூன்று முறை அடித்தான். உடனே எனக்கு இருந்த வலி எல்லாம் மாயமாய் மறைந்துவிட்டது. நடந்த நிகழ்ச்சியை நம்பவே முடியவில்லை. மணியை அரைமணி நேரம் குறுக்கு விசாரணை செய்தேன். சந்திர கிரகண காலத்தில் நட்டாற்றில் அரையளவு தண்ணீரிலே நின்று கொண்டு

லட்சக்கணக்காக ஒரு மந்திரத்தை ஜெபித்ததால் தனக்கு இந்த விஷம் இறக்கும் சக்தி கைவந்ததாக அவன் சொன்னான். பகுத்தறிவுக்கு ஒவ்வாத மந்திரத்துக்கு இவ்வளவு சக்தி இருக்குமோ என்று திகைத்தேன். பெட்ரண்ட்ரஸ்ஸெலைப் படித்து, உப்பிய என் பகுத்தறிவுக்கு இந்த நிகழ்ச்சி அவமானத்தைத் தந்தது.''

இதுபோன்ற நிகழ்ச்சிகள் மகராஜன் வாழ்க்கையிலே ஒன்றன்பின் ஒன்றாக நிகழத்தொடங்கின. பகுத்தறிவே துணை என்றிருந்த அவருக்கு அதைக் காட்டிலும் உயர்ந்தது உணர்வு, பகுத்தறிவுக்கு எட்டாத பேருண்மைகளை எல்லாம் உணர்வினால் எட்டிப்பிடிக்க முடியும் என்ற உண்மை கொஞ்சமாய்ப் புலப்படத் தொடங்கியது. உணர்வைத் தீட்டித் தீட்டி, உயர்ந்த ஆனந்த நிலைகளை அடையலாம். உணர்வுக்கும் பகுத்தறிவுக்கும் முரண்பாடில்லை என்பதைக் கொல்லங்கோட்டிலிருந்த கண்ணப்ப சுவாமிகள் என்ற சித்தர்: அவருக்குப் பல தீட்சைகள் மூலம் உணர்த்தினார். மகராஜன் சொல்கிறார்.

'கண்ணப்ப சுவாமிகள் சொல்லிக் கொடுத்த பயிற்சிகள் மூலம் என் மனம் மாறியது. வாழ்க்கையைப் பார்க்கும் பார்வையே மாறியது. என் வாழ்வின் அடிப்படையே மாறிவிட்டது.

'ஆணவம் என்ற சிறையிலிருந்து நாம் செய்யும் செயல்கள் எல்லாம் தன்னலத்திலே வேரூன்றி நிற்கின்றன. அதனால் சமுதாயத்துக்குக்கேடு விளைகிறது, ஆனால் ஆன்மப் பயிற்சிகள் மூலம், சில விநாடிகளாவது ஆணவம் அற்ற நிலையில் நின்று பார்க்கும்போது நம் சிந்தனையிலும் செயலிலும் பெரும் மாறுதல் ஏற்படுகிறது.

''யோகம் என்பதற்கு ஒன்றித்து நிற்பது என்பதுதானே பொருள். மன ஒருமை இல்லாதவர்கள் செயலிலே ஈடுபடாமல் இருக்கும் வரையிலும் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நல்லது. அவர்கள் செயல்படத்தொடங்கி விட்டாலோ அதனால் விளைவது கலப்பற்ற தீமையே. கோணலான சிந்தனையிலிருந்து கோணலான செயல்தான் பிறக்கும். ஆகவே செயலிலே ஈடுபடுவதற்கு முன் நம் உள்ளத்தை நீட்டி நிமிர்த்திப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

'தியானத்திலிருந்துபழகினால் நம் உள்மனசுக்கும் வெளி மனசுக்கும் இடையே உள்ள பூசல் நீங்கி, இசைவு பிறக்கிறது. ஆணவச் சிறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடலாம். நம்மை மறந்து நமக்கு அப்பால் இருக்கும் மெய்ப்பொருளை ஆசையோடு சிந்தித்து வணங்கினால் மன ஒருமை ஏற்படும். எல்லோரையும் எல்லாவற்றையும் ஒன்றாக்கிக் காணும் காட்சி நமக்குக் கிட்டும். திருகலாகிய நம் சிந்தை திருந்தும். வாரி வாரி ஆனந்தத்தைப் பருகலாம் என்பதை ஒருவாறு அனுபவத்திலே உணர்கிறேன். ஆனால் அவ் அனுபவத்தின் முழு ஆழத்தையும் நான் இன்னும் கண்டு கொள்ளவில்லை. தியான நிலையில் லிருந்து இறங்கியதும் பழைய குப்பைத் தொட்டிக்குள்ளேதான் வரவேண்டியிருக்கிறது. இருந்தாலும் தொட்டியிலே உள்ள குப்பை குறைந்து கொண்டே போகிறது.

கண்ணப்பசுவாமிகள் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர். கொல்லங்கிக்காட்டை அடுத்த சிக்கணப் பாறையிலே ஓர் ஆசிரமம் வைத்து, திருமூலர் சிவ வாக்கியர் ஆகிய இரு சித்தர்களின் நூல் களையே ஆதாரமாகக் கொண்டு தமிழகத்துக்குரிய யோக முறை யைப் பக்குவம் வாய்ந்த சீடர்களுக்குக் கற்பித்து வந்தார். இவர் தமது வாழ்நாளிலே இமாலயத்திலே 25 ஆண்டுகள் பல முனிவர் களோடு வாழ்ந்து, கைலாய பரம்பரை என்று வழங்கப்படுகிற திருமூலரின் யோக மரபைக் கற்றார். பின்னர் யாழ்ப்பாணத்தில் சில ஆண்டுகள் வாழ்ந்து, தாய் நாட்டுக்கும் சேய் நாட்டுக்கும் இருந்த ஆன்ம நேய உணர்வை வளர்த்தார். இவர் தமது 130 ஆவது வயதில் 1959ல் யோக சமாதி என்ற நிலையில் ஒடுங்கினார்.

## விமர்சனம் :

தமிழிலே விமர்சனக் கலை இன்னும் தொடங்கப் பெற வில்லை. அல்லது இன்னமும் வளர்ச்சி அடையவில்லை எனலாம். கவிதையின் தத்துவத்தை ஆய்ந்து அளந்து கூற முற்படவில்லை. டி. கே. சி. போன்றோர் கவிதையை இரசிக்க வழிகாட்டினார்களே அன்றி கவிதையை அறியும் வழி கோலினார்கள் இல்லை. டி. கே. சி இரசிகமணி, கவிதைகள் என வழங்குவனவற்றிலே போலிகளை அகற்றி, அசல் கவிதையை மீட்பதிலே அவரது திறமையும் சிரத்தையும்

ஈடுபட்டிருந்தன. அவற்றை, உண்மைக் கவித்துவத்தை விமர்சன முறையிலே ஆராய அவருக்கு வசதியோ வாய்ப்போ இல்லை. அவசியமும் தோன்றவில்லை. பின்னர் இது பேசப் பெறும்.

கவிதையின் உண்மைக் குணங்களை ஆராய்ந்து விமர்சனக் கலைக்கு அடிகோல முடியாதவர்கள் இல்லை. ஆங்கில இலக்கியத்தை அனுபவித்து உணர்ந்து தமிழ்க் கவிதைக்குத் தொண்டாற்ற முற்பட்ட சிலர் இம்முயற்சியில் இறங்கினர். இவர்களிலே வா. வே. சு. ஐயர், அ. சீ. ராகவன், ரா. ஸ்ரீ. தேசிகன் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் குறிப்பிடத் தகுந்தவர்.

இவை ஆரம்ப முயற்சிகள், அதுவும் சிரமமான சூழ் நிலையில். இவற்றின் முக்கியத்துவத்தைத் தமிழ் அன்பர்கள் உணரவில்லை. இவர்கள் விரும்புவது வேறுவகையான விமர்சனம். இவர்கள் கதை கேட்கத்தான் இருக்கிறார்கள். பாரதி திருவிழாக் களிலே நாம் காண்பது என்ன? பாரதி கவிநயம் பற்றிப் பேச ஒருவர் முன்வருகிறார். அவர் செய்ய வேண்டியது என்ன? பாரதியின் பாடல்களிலே இரண்டொன்றை எடுத்துப், பொருத்த மான அல்லது பொருத்தம் இல்லாத நாலைந்து நிகழ்ச்சிகளைக் கவர்ச்சியாகச் சொல்லி, அவைகளுக்குப் பொருள்கூறி சந்தம் எடுத்துப் பாடி முடித்தாலே போதும். அழகான அடுக்குத் தொடர்களுடன் எதுகை மோனையுடன் சொற்களை அள்ளி வீசினாலே போதும். பெரிய பேச்சாளர், விமரிசகர் என்ற பெயர் எடுத்துவிடலாம். கவிதையின் தன்மை பற்றி அறிவு சூனியமாய் இருக்கலாம். பாரதியின் பாடல்களையே முழுவதும் அறியாமல் இருக்கலாம். இலக்கியப் பேச்சின் 'மார்க்கட்' நிலவரமே இப்படி இருந்தால், நாம் உண்மைக் கவிதையை நாடி வீணாய் அலைவானேன்?

தமிழில் உண்மை இலக்கியம் வளர வேண்டுமானால் போலி இலக்கியம் குறைய வேண்டும்; போலி இலக்கியத்துக்கு அரண் செய்யும் விமர்சனம் குறைய வேண்டும்; உண்மையான விமர்சனம் ஓங்க வேண்டும். விமர்சனம் என்பது நூலின் மதிப்பையும் விலை யையும் ஆசிரியனது வாழ்க்கையையும் ஆய்வது அன்று; நூலின் கவித்துவ நலத்தை ஆராய்வது; உண்மையான உயரிய கவிதை யின் தன்மையைத் தாய்மொழி பிறமொழி இலக்கியங்களின் வாயி லாக ஆய்ந்து அக்கவித்துவம் குறிப்பிட்ட புலவரிடம் காணப்படு

கிறதா இல்லையா எனப் பட்சபாதமின்றித்தீர்மானித்தல். இலக்கிய வளர்ச்சிக்குத் திறமையான விமர்சனம் உதவும். 'அது உண்மைக் கவிதைகளைக்கண்டுணரச் செய்யும், அவற்றை அனுபவிக்கச் செய்யும், போலிப் புலமையை அகற்றும்.

விமரிசனக் கலை வளர்ச்சி அடைந்திருந்தால் மெய்யான கவி தோன்றும் போது அதனை ஊக்கி வளர்ப்பதற்கு ஏதுவாகும். ஊக்கம், உற்சாகம், அனுதாபம்-இவை மானிட முயற்சிகள் அனைத்திற்கும் அவசியம். உணர்ச்சி வாயிலாய்ப் பேருண்மைகளிலே சஞ்சரிக்கும் கவிஞன் தனது பாடல்களைத் தரம் அறிந்து ரசிக்கும் பக்தர்களைத் தேடுகிறான். இரசிகரின் பாராட்டே அவனைத் தனது இலட்சியத்திலே தயங்காது முழு மனத்துடன் மேற்கொண்டு நடக்கத் துணை புரிகிறது. இவ்வூக்கம் இல்லையேல் தனது முயற்சிகளிலே தளர்ச்சி அடைவான்; அவநம்பிக்கை கொள்வான்; அவனது கவிதை முழுவளர்ச்சி அடையாது.

மக்களிடம் உண்மைக் கலையுணர்ச்சியைப் பிறப்பித்து வளர்ப்பது விமர்சனம். காலத்திற்கேற்ற வகையில் உலக அழகின் அனுபவத்தை வெளியிடக் கவிஞனுக்கு வழி காட்டி நிற்பது விமர்சனம். பொதுமக்களின் மனநிலையைக் கவிஞர்க்குக் காட்டி அவன் கவிகளை, மதித்து மக்களுக்கு எடுத்தியம்பி இலக்கிய நயம் நாடெங்கும் பரவத் துணைபுரிவோர் விமர்சகர். இவர்களே இலக்கிய தீபத்தின் தூண்டுகோல்.

தமிழ் இலக்கிய நூல்களை மதிப்பிடும் கலை வெகுவாய் முன்னேறியிருப்பதாய்க் காணோம். மதிப்புரைகளிலே காணக் கிடப்பது பெரும்பாலும் புத்தக விவரமும், பதிப்பின் அழகும், கிடைக்கும் இடமுமே. சில வேளைகளில் கூறப்படும் சிறந்த நூல் எளிய நடை, உயரியகருத்து, என்பன போன்ற சில சொல் தொடர்களும் வழக்கமான வாய்பாடுகளே. நூலின் தன்மையை விவரித்து விளக்குபவை அருமையே. இது வருந்தத்தக்க செய்தி.

புலன் கருவியாகத் துய்க்கும் புற இன்பத்தைவிட, மனம் கருவியாகத் துய்க்கும் அக இன்பமே-இலக்கிய இன்பமே சிறந்தது. முன்னது நிலைத்து நிற்பது அன்று; நாளடைவிலே தானும் தேய்ந்து, தன் மூலமாகிய புலனையும் தேய்த்துவிடக் கூடியது. பின்னது நிலைத்து நிற்பது; தானும் வளர்ந்து, தன் மூலமாகிய மனத்தையும் நெறிப்படுத்தி செம்மை ஆக்குவது.

மனம் பல்வேறு கருத்துப் பொருளைத் துய்க்கும்போது. நாம்பெறும் இன்பம் எல்லை அற்றது. காட்சிப் பொருளைவிடக் கருத்துப் பொருளைத் துய்க்கும்போதுதான் இன்பம் பன்மடங்கு மிகுந்து நிற்கும். அறிஞர் யாவரும் இவ்வின்பத்தையே அவாவி நிற்பர்.

நம்மிடம் இயல்பாகவே அமைந்திருக்கும் Instinct of Curiosity- இவ்வின்பத்தை வளர்க்கக் காரணம் ஆகிறது. இந்த இயல் பூக்கத்தின் காரணமாகத்தான் நாம் காவியங்களிலும், பல்வேறு நூல்களிலும் எதிர்பார்த்தலுடன் ஈடுபட்டு இன்பத்தின் எல்லையைக் காண முடிகிறது. இந்த இயல்பூக்கம் செயல்படுவதைத் தான் உண்மையான திறனாய்வு என்பர்.

சமயம், அரசியல், காலம், தேசம், வர்த்தமானம் ஆகிய எல்லைகளைக் கடந்து, உலக அறிஞர்களால் சிந்திக்கப்பட்டனவும் அறியப்பட்டனவுமான இலக்கியங்களைத் துய்க்கவேண்டும், அவற்றைப் பரப்பவேண்டும் என்ற எண்ணங்களின் அடிப்படையிலே மேற்கொள்ளும் முயற்சிதான் திறனாய்வு.

Criticism is a disinterested endeavour to learn and propogate the best that is known and thought in the world -Mathew Arnold.

## இரசனை முறைத் திறன் ஆய்வு

மேலே விவரித்த திறனாய்வு முயற்சிகளிலிருந்து வேறுபட்ட இரசனைமுறை ஒன்று 1924ல் இருந்து உருவாகி வளர்ந்தது. இதைத் தொடங்கி வைத்தவர், டி. கே. சி. தேனுக்குள் விழுந்த வண்டு எப்படி மயங்கிக் கிடக்குமோ அதைப்போல தமிழ்ப் பாடல் ஒன்றிலே டி. கே. சி இறங்கி, அதில் மூழ்கி மணிக்கணக்கிலே அந்த பாடலோடு ஒன்றிக் கரைந்து நிற்பார்கள். அதோடு, பாடலைக்கேட்டுக் கொண்டிருக்கும் நம்மையும் அந்த அத்துவைத நிலையிலேயே இருத்தி வைக்கும் வல்லமையும் அவர்களிடமிருந்தது டி. கே. சிக்குப் பின் அந்த இரசனை முறையைப் பேச்சாலும் எழுத்தாலும் பேணி வளர்த்து வந்தது அவரது பிரதம சீடரான மகராஜன் அவர்களே. அதன் விளக்கமாக மகராஜன் சொல்லுவது: கவிதை, கலை, பண்பாடு, தத்துவம் என்று சொன்னாலே நமக்குத் திகைப்பு ஏற்படுகிறது. மொச்சைக்கொட்டை மாதிரி அவை மசிவதும் இல்லை. நம் கண்ணை உறுத்துவதும் இல்லை. அவற்றை முழம் போடுவதற்கு நம்மிடம் அளவுகோல் இல்லை. தமிழ்க் கவிதையிலும் கலையிலும் உள்ள தெளிவும் ஆழமும் அவ்வளவு நுட்பமாக இருப்பதால், அவை நம்மோடு கண்ணாம் பொத்தி விளையாடுகின்றன. அவற்றை நம்மால் இனம் கண்டுகொள்ள முடியவில்லை. படித்தவர்களுக்குக் கூடச் சுவை உள்ளது எது, சுவை அற்றது எது என்று நிர்ணயம் பண்ண முடியவில்லை.

'கலையை அனுபவிப்பதற்குப் படிப்பு மட்டும் இருந்தால் போதாது. உள்ளுணர்வு வேண்டும். கல்வி என்னும் பல்கடலைத் தப்பி உன்னுடைய சந்நிதானத்துக்கு எப்படியோ என்னை வந்து சேரும்படி செய்துவிட்டாயே' என்று இறைவனைப் பாராட்டுகிறார் மாணிக்கவாசகர். உள்ளுணர்வோடு பணிவும் பவ்வியமும் வேண்டும். கலை உலகத்துக்குள்ளே நுழைய வேண்டுமானல், காலிலே போட்டிருக்கிற செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு, நான் என்ற திமிரைக் கொஞ்சம் பம்ம வைத்து, மேல்வேஷ்டியை அரையிலே கட்டிக் கொண்டு, வால் இருந்தால் வாலையும் சுருட்டி வைத்துக்கொண்டு, அதன்பின் கலை வாசலுக்குள் எட்டி அடி வைக்கலாம். இல்லை என்றால் கலை உலகம் வழிதிறவாது.

இப்படி எல்லாம் நோன்பிருந்து -- உள்ளத்தைப் பக்குவப்

படுத்திக்கொண்டு கலை உலகத்துள் புகுவோமே ஆனால் ஆணவம் ஆற்ற ஆனந்தநிலை நமக்குக் கிட்டும். இந்த அரிய உண்மையை நேரடியாக எடுத்துக் காட்டினார்கள் டி. கே. சி.

'ஆகவேதான் சுமார் இருபது ஆண்டுகள் காலமாக ரசிகமணி யின் கையை இறுகப்பிடித்துக்கொண்டு, கலை உலகத்தில் ஒரு சுற்றுச்சுற்றி வந்தேன். சுற்றிவரும்பொழுது என்னுடைய சுயநலம் மேதாவித்தனம் படிப்பு எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டு. டி. கே. சி யின் இதயத்தோடு ஒட்டி விஷயங்களை அனுப விக்கக் கற்றுக்கொண்டேன்.'

கவிதையை டி. கே. சி எப்படி அனுபவித்தார்கள், மற்றவர் களையும் எப்படி அனுபவிக்கச் செய்தார்கள் என்பதை ரத்தின வியாபாரிகள் ரத்தினத்தை எப்படி அனுபவிப்பார்கள் என்று டி. கே. சி வருணித்த தமிழிலேயே சொல்லி விடலாம்.

20, 30 வருஷத்துக்குமுன் காயல்பட்டிணத்துக் காக்காய்கள் (சாய்புக்கள்) ரத்ன வியாபாரம் செய்தார்கள். முக்கியமாகச் சிவப்பு வியாபாரந்தான். வைரம் அந்தக் காலத்திலே அவ்வளவாக மதிப்புக்கு வரவில்லை.

மேலே சொன்ன காக்காய்கள் மாணிக்கங்களைப் பரிசோதிப் பார்கள். விலையிடுவார்கள். எங்கள் வீட்டிலே அவர்களை அடிக்கடி பாக்கலாம். ஒரு நல்ல சிவப்பை அவர்கள் கண்டு விட்டார்களானால், அவர்களுக்கு உண்டாகிற ஆவேசம் அப்படி இப்படி அல்ல ; இடது கண்ணிட்டுப் பார்ப்பார்கள். பிறகு வலது கண்ணிட்டுப் பார்ப்பார்கள். திண்ணைக்கு ஓடிப்போய்ப் பார்ப்பார்கள். முற்றத்துக்குக் கொண்டு போய்ப் பார்ப்பார்கள். எப்படி எல்லாமோ குனிந்தும் நிமிர்ந்தும் சாய்ந்தும் பார்ப்பார்கள். 'என்ன பூரிப்பு, என்ன பழுப்பு, இதல்லவா மாணிக்கம் ! தின்னு விடுவோமோ அல்லது கண்ணுக்குள்ளேயே திணித்துவிடுவோமோ' என்றெல்லாம் சொல்லுவார்கள்.

இப்படியே டி. கே. சியும் நல்ல தமிழ்ப்பாடல் ஒவ்வொன் றையும் அனுபவிப்பார்கள். குனிந்தும் நிமிர்ந்தும் சாய்ந்தும் பற்பல கோணங்களிலிருந்து பார்த்தும் அனுபவிப்பார்கள். நம்மையும் அனுபவிக்கச் செய்வார்கள். தமிழ்க்கவி மக்களை கஷ்டப்படுத்த வந்த கருவி அல்ல, ஆனந்த மயத்திலே ஊற

வைக்க வந்த தேவாமிர்தம் அது என்பார் அவர். ஆணவத்தை உதறித் தள்ளிவிட்டு, டி. கே. சி மறைந்த ஓராண்டுக்குப் பிறகு அவருடைய கம்பராமாயணத்தின் முன்னுரையில் ராஜாஜி சொல்லுகிறார். டி. கே. சி அவர்கள், கம்பனுடைய உள்ளத்திலே புகுந்து அதன் அந்தரங்கத்தை அறிந்து, கம்பன் பாடல்களைப் பாடிக் கவிவாணம் உண்டாக்கி அமுத மழை பொழியச் செய்வார். அதை நேரிலே அனுபவித்தவர்கள் நூற்றுக்கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அறிவார்கள், அதன் மகிழ்ச்சி எழுத்திலே ஓரளவுதான் தொனிக்கும். ஆனால் இப்போது டி. கே. சி. ஊன் உடலைவிட்டுப் போய் விட்டார்கள். நிற்பது என்னைப்போன்ற பித்தனின் உள்ளத்திலே இருக்கும் நிஜாபிமானமும் "இந்த நூலும்தான்."

இந்த இரசனை முறைத் திறனாய்வுக்கு சொந்த மனப் பதிவு மட்டுமே அடிப்படை ஆகாது. அதற்கு இலக்கியங்களை நிறையப் படித்து அனுபவித்திருப்பதோடு, வரலாறு, தத்துவம், சமூகஇயல், உளவியல், அழகியல்களிலே ஓரளவு பயிற்சியும் அவசியமாகிறது. கவிதை, இசை, ஓவியம், சிற்பம் கவின் கலைகள் அத்தனையும் கண்டும், கேட்டும், தொட்டும் துழாவியும் பார்த்தால்தான் கலையின் அகண்டத்தையும் ஆழத்தையும் அது தோற்றுவிக்கும் உலகியலுக்கு அப்பாற்பட்ட ரசானுபவத்தையும் ஒரு வாறு உணர முடியும். இதற்குப் பிறநிலை ஆய்வு அவசியமில்லை. அது இராசானுபவத்துக்குக் குந்தகம் செய்யும் என்று டி. கே. சி. ஐயத்துக்கு இடம் இன்றிச் சொல்லுகிறார். காவியங்களை மீண்டும் மீண்டும் படிப்பதாலும் அவைகளைப் பன்முறை விமர்சிப்பதாலும் கவிஞனுடைய கருத்து ஓவியங்களைப் பளிங்குபோன்ற தன் உள்ளத்திலே வாங்கி அவற்றுடன் ஒன்றி கவிஞன் உணர்ந்த முறையிலே உணரவல்ல தரமான ரசனையை வாசகர்களிடையே வளர்ப்பதுதான் டி கே. சி., மகராஜன் இவர்களுடைய பிரதான நோக்கம்.

இந்த இரசனை முறைக்கு மாறாக, புதுமைப்பித்தன், குபரா போன்ற நவீன எழுத்தாளர்கள் சிலர், வசனம் உள்ளிட்ட சம காலப் படைப்பைப்பற்றி இலக்கியத் தொழிலின் நுட்பங்கள், உத்திகள், நடைமுறைகள், மொழிநடை முதலியவற்றில் கவனம் செலுத்தி, பகுப்பாய்வு விமர்சனத்துக்கு அடிகோலினர். இலக்கியத்தை வகைப்படுத்துவது அதன் வடிவங்களையும் உள்ளடக்கத்தையும் அலசி ஆராய்வதிலேயே முதன்மைப் படுத்தினர். எடுத்துக்கொண்ட படைப்பை இப்படி புறநிலையிலே

வைத்துப் பகுத்து ஆராயாமல், தம் மனத்திலே அலைமோதும் எண்ணங்களை அனுபவம் என்று எடுத்து இயம்புவது திறனாய்வாகாது என்று வலியுறுத்தி வந்தார். இரசாயன முறை ஆய்வின் பாதகமான விளைவுகளாக இரண்டை அவர்கள் சுட்டுவார்கள். ஒன்று, கவிதைகளைப் பலமுகமாக நுணித்து நோக்கி, ஆராய்வ வதற்குப் பதிலாக, சொந்த அனுபவமே விமர்சனமாகக் கருதப் படலாயிற்று என்பது. மற்றது, சுயானுபவமே அடிப்படை என்ற நோக்கில் புறநிலை ஆய்வு பூர்வமான விமர்சனமுறை கைவிடப் பட்டது. இவற்றால் கவிதை எடுப்பார் கைப்பிள்ளையாக மாறிற்று என்பது அவர்களுடைய குற்றச்சாட்டு. இது சரிதானா என்பது இங்கே சிந்தனைக்கு உரியது.

இந்த நவீன விமர்சகரில் ஒருவரான க. நா. சு, தம் சகாக் களிடமிருந்து சற்று விலகி, திறனாய்வு முற்றும் முழுவதுமாக ஐக்கியப்பட்டது அன்றி, எந்தவிதமான புறநிலை அளவைகளுக்கும் அங்கே இடம் இல்லை என்று டி. கே. சியின் ரசனை முறையை வலியுறுத்தி வந்தார். டி. கே. சியைப் பற்றிய அவருடைய மதிப்புரை நம் கவனத்துக்கு உரியது. தான் படித்ததைப் பற்றியே தீவிரமான சிந்தை உடையவராக, நாள்தோறும் வேறொருவித மான ஞாபகமும் இல்லாமல் இலக்கியத் தொண்டு ஆற்றியவர் என்று டி. கே. சி அவர்களைச் சொல்லவேண்டும். நல்லது என்று தமக்கு மனசிலே பட்டதை எடுத்து, இது அற்புதம் என்று விளக்க ஒரு சந்தர்ப்பத்திலும் அவர் தவறியதில்லை. தமிழ்க் கவிதை யின்பால் இலக்கிய நோக்கை விமர்சன பூர்வமாகத் திருப்பி விட்டவர் டி. கே. சி தான் என்று சொல்வது அவர் சேவையை மிகைப்படுத்துவது ஆகாது.

தன் உள்ளத்திலே ஏற்பட்ட வெளிச்சத்தை தயவு தாட்சணியமில்லாமல் எடுத்துப் பிறருக்கும் பங்கிட்டுச் சொல்லுகிற காரியம், டி. கே. சியிடமிருந்து விமர்சனக் கலைஞன், இன்று அறிந்து கொள்ளவேண்டிய ஒரு பாடம் ஆகும். இரண்டாவதாக வும் ஒரு பாடம் உண்டு. இலக்கியத்தில் உயர்ந்த தரத்திற்குத் தவிர, வேறு எதற்கும் இடம் தந்துவிடக் கூடாது. வேறு எதிலே வேண்டுமானாலும் சமரசம் Compromise பேசலாம் இலக்கியத் திலே அதற்கு இடம் இல்லை. நாற்பதாண்டுகளுக்கு மேலாகவே முதலில் ஆங்கிலத்திலும், பின்னர் பெரும்பாலும் தமிழிலும் இலக்கியம் படைப்பதிலும் விமர்சனம் செய்வதிலும் பிரசித்தி பெற்றவர், க. நா. சு. இவர் இரசனை முறையை வலியுறுத்தி, அதைத்தனிமனித வாதம் என்பர். வாசகனை மனத்திலே வைத்துக்

கொண்டு எழுதும் எந்த எழுத்துக்கும் காலத்தை மீறி நிற்கும் சக்தி இல்லை. தனிமனிதனின் மனப்போக்கு. உணர்வு தான் இலக்கியத்தைச் சிறப்பாக அமைக்கிறது. அதன் படைப்பிலே சமுதாய விதிகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்படாத தனி மனித ஆளுமை முக்கியமானது என்பது க. நா. சு. வின் வாதம். மேலும் அவர் சொல்லுவார்.

படிப்பதிலே சொந்த அனுபவம்தான் முக்கியம். அறிவு பூர்வமாக எதையும் அலசி ஆராயவேண்டியது அவசியமே இல்லை என்று நான் எண்ணுகிறேன். படிப்பதிலே உள்ள இன்பம், ஆன் மிகமானதொரு, அனுபவ ஆனந்தந்தான் என்னை மேலும் படிக்கத் தூண்டுகிறது. இந்த ஆனந்தத்தை எடுத்துப் பிறர்க்கு வழங்குவதே திறனாய்வின் முக்கிய நோக்கம் என்பது அவர் கருத்து.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த விமர்சகர்களான, ஜேம்ஸ் ஜாய்ஸ், டி. எஸ். எலியட், எஸ்ரா பவுண்ட் - இவர்கள் கருத்தை இங்கே ஒப்பு நோக்கி காண்பது பயனுடையது. திறனாய்வுக்கு எடுத்துக்கொண்ட நூலை மேலும் மேலும் நுணுகிப் படிப்பது, அதனையே பண்ணிப்பண்ணி ஆய்வது இன்றியமையாதன என்று அவர்கள் வற்புறுத்தினர். இந்த அனுபவமும் ஆளுமையுமே திறனாய்வின் அடிப்படை. கவிதை ஒன்றை எடுத்துக் கொண்டால் அகநிலை ஆய்வையே அவர்கள் வலியுறுத்தினர். ரிச்சார்ட்ஸ்போன்றோர் இம்முறையே பலபடியாக வளர்ந்து கவிதைக்குப் புறம்பான செய்திகளை விடுத்து, கவிதை யின் முழுமைக்கும்நிறைவுக்கும் ஆதாரமாக உள்ள சொற்களைக் கொண்டே அக் கவிதை கூறும் அனுபவத்தைப் பெறுவதே திறனாய்வின் பயன் என்றனர்,

இதைத்தான் டி. கே. சியும் அவர் வழிநின்று மகராஜனும் காலம் முழுவதும் வலியுறுத்தி வந்தது. கலைப்படைப்பு அதன் நுகர்ச்சி இவற்றின் திறனை ஆய்தல் என்ற முத்தொழில்களும் தனித்தனியாய் இயங்குவதில்லை. ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கிறது. படைக்கின்ற கலைஞனுக்குத் திறனாய்வுத் திறமை இல்லாமல் இருக்க முடியாது. படைப்பை அவன் தன் இயல் பாகத் தன் இச்சையாகத் தான் இன்புறவே செய்கிறான். திறனாய்வின் நோக்கம் கலைப் படைப்பில் காணக்கூடிய இன்பத்தை, நுகரும் உணர்ச்சியை மிகுதிப்படுத்துவதே.

**நீதிபதி மகராஜனின் கட்டுரைத் தொகுதிகள்:-**

வாழும் நெறி ... 1970
ஆடத் தெரியாத கடவுள் ... 1972
தெய்வ மாக்கவி ... 1974
ஒலிச் செல்வம்
(மூன்றாம் பதிப்பு) .. 1977
சொல்லின்பம் ... 1979
கவிதையில் விடுமுறை ... 1982
பாராட்டுத் தமிழ் ... 1983
நீதிமன்ற நினைவுகள் ... 1984

**மொழி பெயர்ப்பு:-**

ஹாம்லெட் ... 1961
லீயர் அரசன் ... 1965
மாக்பெத் ... 1970
பதிப்பு : இரசிகமணியின்
கடிதங்கள் ... 1972

**ஆங்கிலத்தில் :-**

Kamban ... 1972 } Sahitya Akademi
Tiruvalluvar ... 1979 } Sahitya Akademi
The Inner meaning of Human History ... 1974
The Culture of Tamils ... 1972
My Experence in Faith - Diologue
Strain in Mediaeval India ... 1970

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 36 | 11 | அனுகுண்டின் | அணுகுண்டின் |
| 37 | 16 | அஜாக்கிரதையால் | அஜாக்கிரதையாய் |
| 45 | 7 | பிரபஞ்சப் படையின் | பிரபஞ்சப் படைப்பின் |
| 46 | 11 | விசுபரூப | விசுவரூப |
| 47 | 11 | திமிழில் | தமிழில் |
| 47 | 21 | பெறுகி | பெருகி |
| 49 | 24 | ஜான் ஸ்பிஎயர்ஸ் | ஜான் ஸ்பியர்ஸ் |
| 50 | 13 | emaneting | emanating |
| 50 | 18 | Krishrit Joshi | Kireet Joshi |
| 50 | 18 | க்ரிஷி ஜோஷி | க்ரிட் ஜோஷி |
| 50 | 24 | birth | both |
| 50 | 25 | சொல்லும் | சொல்லும் போக்கு |
| 50 | 34 | byrical | lyrical |
| 51 | 33 | Edvard Lveders | Edward Leudes |
| 52 | 6 | experimential | experiential |
| 52 | 12 | fo | for |
| 53 | 19 | ஆங்கிலர்க்கே | ஆங்கிலேயர்க்கே |
| 54 | 14 | பாவங்கனையும் | பாவங்களையும் |
| 55 | 12 | முக்கி | முங்கி |
| 55 | 26 | ஓன்றை | ஒன்றை |
| 56 | 9 | ஆண்மாநுபவங்களை | ஆன்மாநுபவங்களை |
| 56 | 19 | தமிமுச்குச் | தமிழுக்குச் |
| 56 | 33 | தென்பும் | தெம்பும் |
| 57 | 20 | குறைச்சட்டம் | முறைச்சட்டம் |
| 59 | 21 | Cabble | Cable |
| 59 | 33 | எள்றும் | என்றும் |
| 60 | 18 | முன்னுமா | முன்னுரை |
| 60 | 23 | maratime Jurisdction | maritime Jurisdiction |
| 60 | 30 | தமிழாய | தமிழாக |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 61 | 28 | தொன்னொருங் காலத்திலே | தொன்னெடுங் காலத்திலே |
| 62 | 22 | தெம்பு | தெம்பும் |
| 62 | 25 | gean paul sartre | Jean Paul Sartre |
| 62 | 29 | infussions | infusions |
| 62 | 30 | Verilence | Valiens |
| 62 | 32 | Civilisetion | Civilisation |
| 64 | 2 | புத்துயிரு | புத்துயிரும் |
| 64 | 6 | தலமையில் | தலைமையில் |
| 65 | 4 | முனைவர் | முனைவன் |
| 66 | 1 | Pilgrimis Progrerss | Pilgrim's Progress |
| 66 | 18 | அன்றே | இன்றி |
| 66 | 28 | அடைக்கியிருப்பது | அடக்கியிருப்பது |
| 69 | 2 | சிறத்த | சிறந்த |
| 70 | 15 | மொழிகளாயிந்தால் | மொழிகளாயிருந்தால் |
| 71 | 21 | பொருத்தது | பொறுத்தது |
| 72 | 19 | முக்கியமானவற்றிற்க்கு | முக்கியமானவற்றிற்கு |
| 73 | 28 | நெடுலும் | நெடுகிலும் |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 26 | State offlcial Lgnguage | State Official Language |
| 1 | 30 | transiation | translation |
| 5 | 12 | மறுஉரு. | மறுஉரு : |
| 5 | 17 | ஆன்மரவும் | ஆன்மாவும் |
| 8 | 28 | பேச்சிளே | பேச்சிலே |
| 9 | 22 | பிள்ளையவருக்கு | பிள்ளையவர்களுக்கு |
| 11 | 8 | 16 - 2 - 1054 | 16 - 2 - 1954 |
| 11 | 34 | லவர்கள் | தலைவர்கள் |
| 13 | 15 | அததை | அதரை |
| 14 | 4 | வெவியிட்டிருக்கிறது | வெளியிட்டிருக்கிறது. |
| 14 | 28 | மாணாக்கராசிய | மாணாக்கராகிய |
| 16 | 11 | மணிக்கணச்காக | மணிக்கணக்காக |
| 17 | 13 | தங்கடைய | தங்களுடைய |
| 18 | 30 | ஏதே | ஏதோ |
| 19 | 26 | பாருள் | பொருள் |
| 21 | 18 | அடேயப்ப | அடேயப்பா |
| 22 | 2 | சப்ஜட்ஜ | சப்ஜட்ஜ் |
| 22 | 7 | ராஜாஜ | ராஜாஜி |
| 22 | 27 | ரசிகமனியும் | ரசிகமணியும் |
| 23 | 5 | கண்ணணோடு | கண்ணனோடு |
| 23 | 5 | இனைத்து | இணைத்து |
| 28 | 20 | அவர்களிடம்திலே | அவர்களிடத்திலே |
| 28 | 20 | இரக்கத் காட்டி | இரக்கம்காட்டி |
| 29 | 33 | மணித | மனித |
| 32 | 5 | ஒழுககத்தின் | ஒழுக்கத்தின் |
| 32 | 17 | ஷவைட்சர் | ஷ்வைட்சர் |
| 35 | 2 | Emrald | Emarald |

644.